Registered as a News Paper
பக்கம் - 24
www.eezhanatham.com

# ஈழநாதம்

விலை: 16.00
வெள்ளிநாதம் Weekly
நாதம் -16 வெள்ளி -32 30-06-ஒக்டோபர்-2005



# முதியோர் வாழ உதவுங்கள்



எமது கலாச்சாரத்தில் குடும்ப அலகின் மகத்துவம் மகோன்னதமானது. கீழைத்தேய-குறிப்பாக தமிழ்க் கலாச்சாரத்தில் வெகு அண்மைக் காலம் வரை கூட்டுக் குடும்ப முறை இருந்து வந்ததை நாம் அறிவோம். இங்கு குடும்ப உறவுகள் பலமாகப் பிணைக் கப்பட்டிருந்தன. தாய், பிள்ளை, பேரப்பிள்ளை என உறவுகள் விரிவடைந்து தொடர்ந்து கொண்டிருந்தன. மேன்மைமிகு இந்தக் கலாச்சாரத்தைக் கண்டு மேற்குலகம் விதந்து பாராட்டியதுடன், தமக்கு இப்படி ஒரு நிலை இல்லையே என்று ஏக்கப் பெருமூச்சு விட்டது.

யாரது கண்பட்டதோ தெரிய வில்லை, அண்மைக்காலமாக எமது பாரம்பரியம் சிதைவடைந்து, கூட்டுக் குடும்ப முறை அருகிப்போய் குடும்ப உறவுகள் அன்பு, பாசம் என்பன கேள் விக்குறியாகியுள்ளன.இதன் பெறுபெறாக இன்றைய உலகில் முதிய பெற்றோ ருக்குக் கிடைக்கும் மதிப்பும் மரியாதை யும் குறுகிப்போய்விட்டது. குறிப்பாக இன்றைய உலகின் இளைய தலைமுறையினர் தமது பெற் றோர்களுக்கு உரிய மதிப்புக் கொடுப்ப தில்லை. ஒரு சில ரைத் தவிர பெரும் பாலானோர் இயந்திர மயப்பட்ட உலக வாழ்வியலில் சிக் குண்டு தமது பெற் றோரைத் திரும்பிக் கூட பார்ப்பதில்லை.

தன் உட லில் பத்து மாதம் சுமந்து ஓர் உயிரை உலகுக்கு உவந் தளிக்கும் ஒப்பற்ற தாயையையும், வளர்த்து உரு வாககுவதற்காக அளப்பரிய தியாகங்களைத் தாயுடன் இணைந்து செய்த தந்தையையும் தெய்வம் என்று போற்ற வேண்டாம், அவர்களது இயலாத முதுமைக் காலத்தில் அருகே வைத்திருந்து ஒரு பிடி சோறு கொடுத்தால் என்ன குறைந்து விடும்?

தாயிற் சிறந்ததொரு கோயிலு மில்லை, தந்தை சொல் மிக்க மந்திரமில்லை எனற பழமொழிகள் கூட முதியவர்களை போல பழசாகிவிட்டதோ என்னவோ? காவோலை விழப் பாத்திருக்கும் குருத்தோலைகளுக்கு தாமும் ஒரு நாள் காவோலையாகி விடுவோம் என்ற எண்ணம் ஏன் தோன்றாமற் போனது? எம்மை பெற்று வளர்த்து ஆளாக்க எம் பெற்றோர் எத்தகைய துன்பங்களை எல்லாம் அனுபவித்திருப்பார்கள்! அதற்கு மாற்றீடாக வேனும் அவர்களது முதுமைக் காலத்தில் சிறிது அனுசரித்து அவர்கள் மனம் கோணாத வண்ணம் அருகிருத்திப் பராமரித்தால் என்ன?

இன்றைய ஆணோ, பெண்ணோ திரு மண பந்தத்தில் நுழைந்த பின்னர் பெற்றோரை மாற்றாராகச் சிந்திக்கத் தொடங்கிவிடுகிறார்கள். தமது சில தேவைகளுக்கு அவர்களது உதவி வேண்டப்படும் போது மட்டுமே பெற்றோர் தேவைப்படுகிறார்கள். அதிலும் இயலாத பெற் றோர் என்றால் வேண்டாப் பொருள் போல நோக்குகின்றார்கள்.

சில பிள்ளைகள் தமது வாழ்க்கைத் துணையின் சொற்கேட்டு பெற்றோரை உதா சீனப்படுத்தி வேதனைக்குள்ளாக்குகி றார்கள். இன்னும் சிலர் ஒரு படி மேலே சென்று அவர்களை வெளியேற்றிவிடுகிறார்கள். ஏற்றி விட்ட ஏணியை உதைப்பது என்பது வழக் கத்தில் வந்துவிட்டது.

இன்று எத்தனையோ பெற்றோர்கள் கைவிடப் பட்டநிலையில் ஏதிலி களாக வீதிகளில் பிச்சை யெடுத்தும், முதியோர் இல்லங்களில் தஞ்சம் புகுந்துமிருக்கிறார் கள். போரும், இடப்பெயர்வும், வறுமையும், புலப்பெயர்வும் தான் காரணம் என்று சொல்லி நாம் எமது கடமைகளைத் தட்டிக்கழிக்க முடியாது. மனிதனாகப் பிறந்த ஒவ்வொரு வருக்கும் சில கடமைகளும் பொறுப்புகளும் உண்டு. இயற்கை, பொறுப்புக்களை நிறை வேற்றும் வலிமையை ஒவ்வொரு மனிதனுக்கும் கொடுத்துள்ளது. எமக்குரிய கடமைகளை நாம் கட்டாயம் நிறைவேற்ற வேண்டும். பெற்றோரை பேணுதல் கட்டாயமாக செய்யப்படவேண்டிய கடமை. வெறும் காசு பணம் அனுப்புவதும் கொள்ளி போடுவதும் தான் எமது கடமை என்று நாம் நினைத் திடலாகாது. இவை எல்லாவற்றையும் விட மேலான கடமை, பெற்றோர்களை குடும்பத்தின் உள்ளேயே வைத்துப் பராமரித்து, அனுதினமும் அவர்களு டன் மனப்பகிர்வு கொண்டு, மகிழ்ச்சியாக வைத்தி ருத்தலாகும். கடமைகளுக்குப் பின்னே தான் எமது பணிகள் அனைத்துமே!

முதியோர்களின் மனதில் பிள்ளைகள் மீதும், பேரப்பிள்ளைகள் மீதும், தமது சந்ததி விருத்தியிலும் இருக்கின்ற அன்பு, அக்கறை யில் சிறுபங்கு கூட இன்றைய பிள்ளைகளிடம் இல்லாமல் இருக்கிறது. பிள்ளைகளின் வாழ்வில் அன்பு, என்ற சொல்லிற்கே அர்த்தமில் லாமலிருக்கிறது. பாசமும், நேசமும் வெகு தூரத்திற்குப் போய்விட்டதால்தான் இன்றைய முதியோர்களுக்கு இந்தமாதிரியான அவல நிலை! முதியோர்களின் மன ஆதங்கம் எல்லாம் வலுக் கட்டாயமாகப் பறிக்கப்பட்டு, இவர்கள் முதியோர் இல்லங்களில் தள்ளிவிடப் படுகிறார்கள். பெற்ற மனம் பித்து; பிள்ளை மனம் கல்லு என்பார்கள். இந்த உண்மை எமக்கும் ஒரு நாள் புரியும் காலம் வரும்.

முதுமையில் ஏற்படும் உடல்நிலைப் பாதிப்பு ஒருபுறமிருக்க, அவர்களைப் புறக் கணிப்பதால், அவர்களது உளமும் மிகமோசமா கப் பாதிக்கப்பட்டுவிடுகிறது. இன்றைய வாழ்வியல் கட்டமைப்பிலுள்ள தலைமுறை இடைவெளி முதியோரின் செல்வாக்கினை குன்றச் செய்துவிடுகிறது. மேலும் முதியோ ரின் வாழ்வின் அழுத்தங்களாக வருவாயின்மை, உழைக்க முடியாமை, தங்குமிட வசதியின்மை, இயலாமை, நோய் நொடி என்பன அச்சுறுத்தி நிற்கின்றன. எனவே முதியோரும் ஒரு குழந் தையைப் போல் எம்மால் பராமரிக்கப்பட வேண்டி யவர்களே! குழந்தைகளைப் போல் முதியவர் களை ரசிக்க வேண்டாம்; சகித்துக்கொள்ளக் கூடாதா? எங்கள் சுமை தாங்கிகள் இன்று சுமையாகிவிட்டார்களா?

**முதுமையில் ஏற்படும் உடல்நிலைப் பாதிப்பு ஒருபுறமிருக்க, அவர்களைப் புறக்கணிப்பதால், அவர்களது உளமும் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டு விடுகிறது. இன்றைய வாழ்வியல் கட்டமைப்பிலுள்ள தலைமுறை இடைவெளி முதியோரின் செல்வாக்கினை குன்றச் செய்துவிடுகிறது. மேலும் முதியோரின் வாழ்வின் அழுத்தங்களாக வருவாயின்மை, உழைக்கமுடியாமை, தங்குமிட வசதியின்மை, இயலாமை, நோய் நொடி என்பன அச்சுறுத்தி நிற்கின்றன. எனவே முதியோரும் ஒரு குழந்தையைப் போல் எம்மால் பராமரிக்கப்பட வேண்டியவர்களே!**

இன்றைய புலம் பெயர் சமுதாயத் தில் முதுமையடைந்த பலரின் நிலை திரிசங்கு சொர்க்கமாய் பரிதாபத்திற்குரியதாய் மாறியுள்ளது. வாழ்க்கையில் பணம்தான் எல்லாம் என்றில்லை. சில முதியோர்கள் பிள்ளைகளைப் பிரிந்து பாதுகாப்பு நிழலற்று அந்நியர்களின் ஆதரவில் வாழ்கின்றார்கள். வேறுசிலர் பழக்கமில்லாத சூழலில் அந்நியநாடுகளில் கூண்டுப் பறவையாய் வாழ்கின்றனர்.

பாரிய இடப்பெயர்வு குடாநாட்டி லிருந்து ஏற்பட்டு, வன்னிக்காடுகள் எல்லாம் குடிமனைகளாக மாறிய அதிசோகமான தொண்ணூறுகளின் நடுக்கூற்றில் முதியோர்கள் பட்ட கஷ்ட நிஷ்டூரங்கள் கணக்கிலடங் காதவை. ஒரு தேசத்தின் பெரும் சொத்தான இவர்கள் தேடுவாரற்றவர்களாக, அன்றைய அவலமான காலத்தில் கிளிநொச்சியில் ஒரு முதியோர் இல்லம் கூட இருக்கவில்லை. முதியோர்கள் வீதிகளிலும் வைத்தியசாலை களிலும் அநாதரவாக விடப்பட்டார்கள். இந்த நிலையில் முதியோர் இல்லத்தின் தேவை பலதரப்பினராலும் உணரப்பட்டது.

அரச அதிபரால் இது தொடர்பாக கூட்டப்பட்ட மாநாட்டில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முதியோர் இல்லம் ஒன்றினை அமைத்துத்தர முன்வந்தது. யோகர் சுவாமிகள் திருவடி நிலையத்தினர் இவ் இல்லத்தை நிர்வகித்து நடாத்தும் பொறுப்பினை சவாலாக ஏற்றுக்கொண்டனர். நாட்டுப்பற்றாளரும் அன்றைய சுகாதார வைத்திய அதிகாரியுமான கந்தசாமி ஐயா தலைமையில் மனிதநேயம் மிக்க ஒரு குழுவினர் ஊக்கமுடன் செயற்பட்டனர். அநாதரவான முதியவர்களுக்கு இதனால் புகலிடம் கிடைத்தது. அவர்களுக்கு வாழ வழி கிடைத்தாலும் குடும்பத்தவரோடு இருந்தபோதிருந்த ஆனந்தம் அற்றுப்போய்விட்டது. முதியவர்கள் எவ்வளவுதான் சிறப்பாக பராமரிக் கப்பட்டாலும் அவர்களுக்கு உறவு களைப் பிரிந்த மனக்குறை நிரந்தர மாகவே இருந்து வருகிறது. பிள்ளைகளின் அன்பிற்காகவும் அரவணைப்பிற்காகவும் இவர் கள் ஏங்கிக் கொண்டிருக்கிறார் கள்.

ஒரு சிலரைத் தவிர ஏனைய வர்களுக்குப் பிள்ளைகள் இருக்கிறார்கள். அதில் ஒரு சிலர் பணக்காரர்களாக வசதி யுடனும் கூட இருக்கிறார்கள். ஆனால் இவர்கள் பெற்ற வர்களை நட்டாற்றில் விட்டு விட்டு தாமும் தமது சோலியுமாக இருக்கின்றார்கள். மனது மரத்துப் போன இந்தக் கொடூரமான பிள்ளைகளைக் கூட முதியவர்கள் அன்புடன் நினைத்து அழுகிறார்கள் சில வசதியாக வாழ்ந்த முதியவர்கள் தமது சொத்துப் பத்து அனைத் தையுமே பிள்ளைகளுக்குக் கொடுத்துவிட்டு இன்று அடுத்த நேர உணவுக்காக ஏங்கித் தவிக்கிறார்கள்.சிவயோக சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லத்திற்கு வருவாய் காணாது மனித நேய நம்பிக்கை நிதியம் கூட தாம் செய்து வந்த நிதி உதவியின் அளவைக் குறைத்துள்ளமையினால் இன்று வசதிபடைத்த வர்களின் வள்ளல் கரங்களை நாடி இவ் இல்லம் நிற்கிறது. மாதாந்த விறகுக்கு மட்டுமே இருபதினாயிரம் ரூபா தேவைப்படுகிறது.

வீணே ஆடம்பரமாக செலவிடுபவர் கள் அந்தப் பணத்தை இந்த முதியவர்களுக்கு உணவளித்துச் செலவிட்டு முதியோரையும் மகிழவைக்கலாமே! பல நல்ல இதயங்கள் நேசக்கரம் நீட்டுகின்றன. எனினும் இன்னும் பலர் முன்வந்து இத்தகைய இல்லத்தைப் பராமரிக்க உதவிட வேண்டும்.

ச.முருகானந்தன்

# சனாதிபதியாக யார் வந்தால் தமிழர்களுக்கு நல்லது?



***சிலசமயம் மகிந்த பதவிக்கு வந்தாலும்.கூட சர்வதேச சமூகம் அவரை ஒரு யுத்த வியாபாரி என்று சொல்லி ஒதுக்கிவிடப்போவதில்லை. மரபு ரீதியிலான அரசுகளுக்கிடையிலான பாரம்பரியமான ராஜீய உறவுகளின் பிரகாரம் அவர்கள் மகிந்தவை நெருங்கி வரவே செய்வர். மகிந்தவும் தனக்கு முன்பிருந்த எல்லாச் சிங்களத் தலைவர்களையும்போல தமிழர்களைத் தோற்கடிப்பதற்காக யாருடைய கால்களிலும் விழத் தயாராக இருப்பார். இப்படி அவர் சரணாகதியடைந்தால் அதுவே மேற்குநாடுகளுக்குப்போதும். அவர்களுக்குத் தேவை அவர்களுடைய திறந்த சந்தைப்பொருளாதாரத்துக்கு இந்த நாட்டில் எந்த இடைஞ்சலும் வரக்கூடாது என்பது மட்டுமே. இதில் மகிந்த புனிதரா? அல்லது ரணில் புனிதரா? என்பது அவர்களுடைய கவலையல்ல.***

திரு. ரணில் விக்கிரமசிங்க வந்தால் யுத்தநிறுத்தம் பலமடையும் என்றும் இப்பொழுது நிலவும் அரை மென் தீவிர யுத்தம் முடிவுக்கு வரக்கூடும் என்றும் எனவே சமாதான முயற்சிகள் முன்னோக்கிச் செல்லும் என்றும் ஒரு தரப்பினர் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நம்பிக்கைகளின்படி ரணில் சனாதிபதியாக வருவதே தமிழர்களுக்கு நல்லது என்றும் அவர்கள் கூற முயல்கிறார்கள்.

முன்பு அவர் பிரதமராக இருந்தபோது அவரிடம் நிறைவேற்று அதிகாரம் இருக்கவில்லை. எனவே அவரால் நினைத்தபடி அசையமுடியவில்லை. இனி அவர் சனாதிபதியாக வந்தால் நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி எதையாவது சாதித்துவிட முயலக்கூடும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

அதேசமயம் திரு.மகிந்தராஜபக்ஷ வந்தால் இப்போது நிலவும் அரைமென்தீவிர யுத்தம் மேலும் பெருத்து ஒரு கட்டத்தில் முழுத்தீவிர யுத்தமாக மாறும் என்று மேற்படி தரப்பினர் நம்புகிறார்கள். சனாதிபதியாக வரவேண்டும் என்பதற்காக மகிந்த கூட்டுச் சேர்ந்துள்ள சக்திகள் சமாதானத்திற்கு எதிரானவை என்பதால் அவரால் சமாதானத்தை அல்ல யுத்தத்தையே கொண்டுவர முடியும் என்றுமிவர்கள் நம்புகிறார்கள். பெருமளவு சாதாரண சனங்களின் மத்தியில் மேற்படி கருத்தே நிலவுவதைக் காணக்கூடியதாய் இருக்கிறது.

ஆனால், அதேசமயம் இது விசயத்தில் வேறொரு சிந்தனைப்பள்ளியும் காணப்படுகிறது. அந்தச் சிந்தனைப்பள்ளியைச் சேர்ந்தவர்கள் கூறுகிறார்கள்... ரணில் வந்தால் சமாதானத்தின் பேரால் தமிழர்களின் போர்த்திறனை கரைத்துவிடுவார் என்றும் யுத்தநிறுத்தச் சூழலில் போராட்டம் நீர்த்துப்போய்விடும் என்றும். ரணிலும் அவருடைய மேற்குநாட்டு எஜமானர்களும் அப்படியொரு உள்நோக்கத்துடன்தான் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்க முயல்கிறார்கள் என்றும் இவர்கள் கூறுகிறார்கள்.

மாறாக, மகிந்த வந்தால், அவர் இனவாதிகளுக்குத் தலைமைதாங்குவர் என்றும் எனவே யுத்தநிறுத்தம் உடையும் என்றும் அப்போது தமிழர் தரப்பு நியாயம் சர்வதேச சமூகத்தின் மத்தியில் அதிகம் எடுபடும் என்றும் இது தமிழீழத் தனியரசை உருவாக்க உதவக்கூடும் என்றும் இவர்கள் கூறுகிறார்கள்.

அதாவது ரணில் வந்தால், அவருடைய சமாதான கோசங்களுக்குள் தமிழர் தரப்பு நியாயங்கள் மங்கிப்போய்விடும் என்றும், மாறாக மகிந்த வந்தால் அவருடைய இனவாதக் கூச்சல்களுக்கெதிராக தமிழர்கள் தமது நியாயங்களை முன்வைக்கும்போது சர்வதேச அரங்கில் தமிழர் தரப்பு நியாயங்களை ஏற்றுக்கொள்ளவேண்டிய ஒரு சூழல் உருவாகும் என்றும் மேற்படி சிந்தனைப்பள்ளிக்குரியவர்கள் நம்புகிறார்கள்.

இதை மேலும் செறிவான வார்த்தைகளில் கூறின் பின்வருமாறு கூறலாம். அதாவது தென்னிலங்கையில் இனவாத சக்திகள் எவ்வளவிற்கெவ்வளவு பலமடைகின்றனவோ அவ்வளவிற்கவ்வளவு அது தமிழர்களின் போராட்டத்துக்கான நியாயங்களை பலப்படுத்தும் என்பது.

எதையும் அதன் விளைவுக்கூடாகவே விளங்கிக்கொள்ளவேண்டும் என்று வற்புறுத்தும் இத்தரப்பினரின் வாதத்தின்படி மகிந்த ஆட்சிக்கு வருவதே அதன் எதிர்மறை அர்த்தத்தில் தமிழர்களுக்கு நல்லது. அதாவது தமிழர்கள் தமிழீழத் தனியரசை உருவாக்குவதற்கு வசதியானது.

இந்த இரண்டு வியாக்கியானங்களிலும் எது சரி? மகிந்தவா? ரணிலா? தமிழர்களின் மெய்யான நண்பன்?

இதைச் சிறிது ஆழமாகப் பார்ப்போம். முதலில் ரணிலைப்பார்ப்போம். ரணில் ஒரு மேற்குலகின் செல்லப்பிள்ளை. முன்பு அவருடைய மாமா ஜெயவர்த்தனவின் காலத்தில் மேற்குநாடுகளுக்கு விசுவாசமாக ஜெயவர்த்தன ஈழப்போரை வளர்த்தெடுத்தார். அப்போது ஜெயவர்த்தனவை வழிக்குக்கொண்டுவர சோவியத் சார்பு இந்தியா ஈழப்போரை வளர்த்தெடுத்தது. ஆனால் இப்போது காட்சிகள் மாறிவிட்டன. மாமாவின் யுத்தத்தை ஆதரித்த மேற்குநாடுகள் மருமகனிடம் சமாதானத்தை உருவாக்குமாறு கேட்கின்றன.

அதேசமயம் அப்போது ஈழப்போரை மேற்குநாடுகளுக்கு எதிராக வளர்த்தெடுத்த இந்தியா இப்பொழுது சமாதானம் புலிகளுக்குச் சார்பாக வளர்க்கப்படுவதை விரும்பவில்லை. இதுதான் பிரச்சினை. அதாவது, ரணில் எப்படி இந்தியா, புலிகள், மேற்குநாடுகள் மற்றும் இந்தியாவால் உசாருட்டப்பட்டிருக்கும் உள்ளூரிலுள்ள தீவிர இனவாத சக்திகள் என்ற நான்கு முனைகளுக்கிடையில் ஒரு இணக்கத்தைக் காணப்போகிறார் என்பது.

கிழக்கைரோப்பாவிலும் சூடானிலும் மேற்குநாடுகள் உருவாக்கிவரும் சமாதானத்துக்கூடாகச் சிந்தித்தால் மிக உயர்வான ஒரு தீர்விற்கு அவர்கள் தயார் என்றே தோன்றும். ஆனால் ஈழப்போரின் புவிசார் அரசியல் யதார்த்தத்திற்கூடாகப் பார்த்தால் இங்கே நிலைமை வேறாயிருப்பது தெரியவரும். புலிகளைப் பலப்படுத்தாத ஒரு சமாதானமே இந்தியாவின் விருப்பமாகத் தெரிகிறது.

எனவே மேற்கு நாடுகளின் தெரிவுகளுக்கும் இந்தியாவின் தெரிவுகளுக்குமிடையில் ஏதோ ஒரு சமநிலையை பேணவேண்டியவராக ரணில் காணப்படுகின்றார். அப்படியொரு சமநிலையை பேணமுயலும்போதெல்லாம் அவர் மூன்றாவது தரப்பாகிய புலிகளுடன் சமநிலையைப் பேணமுடியாத நிலையே தோன்றும்.

எனவே ரணில் சமாதானத்தைக் கொண்டு வரப்போவதில்லை. நிரந்தரமான தீர்வையும் தரப்போவதில்லை. மிஞ்சி மிஞ்சிப் போனால் ஒரு பரவாயில்லாத இடைக்கால ஏற்பாட்டுக்கு மட்டுமே அவரால் போகமுடியும். அது கூட அவர் சமாதானத்துக்கு எவ்வளவு தூரம் விசுவாசமாய் இருக்கிறார் என்பதில்தான் தங்கியிருக்கிறது.

இதை இன்னும் நுணுக்கமாகச் சொன்னால்...

ரணில் சனாதிபதியாக வந்தால் இப்போது இருப்பதைவிடவும் யுத்தநிறுத்தம் வளரும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அது ஆகக்கூடிய பட்சம் ஒரு இடைக்கால ஏற்பாடு அல்லது பரவாயில்லாத ஒரு இயல்புநிலை என்ற உச்சங்களுக்கும் அப்பால் வளரமுடியாது தேங்கிநின்றுவிடும் வாய்ப்புக்களே அதிகம் தெரிகின்றன. ஆனால், அந்த 'இயல்பற்ற இயல்புநிலைக்குள்' தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தின் ஜீவசக்தியை திரையச் செய்ய அவரும் அவரோடு சேர்ந்த எல்லா சக்திகளும் முயல்வார்கள்.

எனவே ரணில் வருவது சிலசமயம் தற்காலிக ஆறுதலைத் தந்தாலும் கூட நீண்டகாலநோக்கில் தேங்கி நிற்கப்போகும் ஒரு சமாதான[illegible]டுமே கொண்டுவரும்.

ச[illegible]த வந்தால்?

நிச்சயமாக உடனடியாக யுத்தம் வெடிக்காது. ஏனெனில் மகிந்த ஒரு தனி நபர் அல்ல. அவர் சர்வதேச சமூகத்திற்கு பதில்சொல்ல வேண்டிய பொறுப்புமிக்க ஒரு அரசியல் தலைவராக இருந்தாகவேண்டும். எனவே தனது பொறுப்பற்ற கூட்டாளிகள் இழுத்த இழுப்புக்கெல்லாம் அவர் வளைந்துகொடுக்கமுடியாது. திருமதி. சந்திரிகா தன்னுடைய ஆட்சியின் கடைசிக் காலத்தில் எப்படி மேற்குநாடுகளுக்கு விட்டுக்கொடுத்து சுனாமிப் பொதுக்கட்டமைப்புக்கு உடன்பட்டார் என்பதை இங்கே சுட்டிக் காட்டவேண்டும்.

இம்முறை சமாதானம் ஒரு சர்வதேச யதார்த்தமாய் இருக்கிறது. இதில் பிராந்திய மட்டத்தில் புலிகளுக்கு எதிராகக் காணப்படும் சில போக்குகளை நம்பி மகிந்த அரசியல் செய்யமுடியாது. இந்தப் பிராந்தியத்தைப் பங்கிடுவது தொடர்பாக இந்தியா எந்தளவுக்கு அமெரிக்காவுக்கு விட்டுக்கொடுக்கும் அமெரிக்கா எந்தளவுக்கு இந்தியாவுக்கு விட்டுக்கொடுக்கும் என்ற அளவே இலங்கைத்தீவில் வரக்கூடிய சமாதானத்தின் அளவுமாகும். அதை மகிந்த நினைத்து மட்டும் மாற்றிவிடமுடியாது. வேண்டுமானால் அவர் இப்போது நிலவும் அரைமென்தீவிர யுத்தத்தைத் தொடரலாம். ஆனால், அவரும் சந்திரிகாவைப்போலவே தானாக ஒரு முழுத்தீவிர யுத்தத்தைத் தொடங்கமாட்டார். தொடங்கவும்முடியாது.

எனவே மகிந்த வந்தாலும் உடனடியாக யுத்தம் மூண்டுவிடாது. புலிகளாக ஒரு யுத்தத்தைத் தொடங்காதவரை இப்போதுள்ள அதே நிலைமைகளே தொடர்ந்தும் இருக்கும். சில சமயம் நிலவும் அரைமென் தீவிர யுத்தம் தீவிரமடையலாம். மற்றும்படி அது ஒரு முழுமென்தீவிர யுத்தமாக மாறக்கூடிய நிலைமைகள் உடனடிக்கில்லை. ஏனெனில் சமாதானம் மகிந்தவின் தெரிவு அல்ல. அது மேற்குநாடுகளின் தெரிவு.

மேலும் சிலசமயம் மகிந்த பதவிக்கு வந்தாலும் கூட சர்வதேச சமூகம் அவரை ஒரு யுத்த வியாபாரி என்று சொல்லி ஒதுக்கிவிடப்போவதில்லை. மரபு ரீதியிலான அரசுகளுக்கிடையிலான பாரம்பரியமான ராஜீய உறவுகளின் பிரகாரம் அவர்கள் மகிந்தவை நெருங்கி வரவே செய்வர். மகிந்தவும் தனக்கு முன்பிருந்த எல்லாச் சிங்களத் தலைவர்களையும்போல தமிழர்களைத் தோற்கடிப்பதற்காக யாருடைய கால்களிலும் விழத் தயாராக இருப்பார். இப்படி அவர் சரணாகதியடைந்தால் அதுவே மேற்குநாடுகளுக்குப் போதும். அவர்களுக்குத் தேவை அவர்களுடைய திறந்த சந்தைப்பொருளாதாரத்துக்கு இந்த நாட்டில் எந்த இடைஞ்சலும் வரக்கூடாது என்பது மட்டுமே. இதில் மகிந்த புனிதரா? அல்லது ரணில் புனிதரா? என்பது அவர்களுடைய கவலையல்ல.

தார்மீக ஆதரவு என்பதெல்லாம் அரசியலில் கிடையாது. தர்மத்தின் பாற்பட்டு ராஜீய உறவுகளை வைத்துக்கொள்வதற்கு இதுஒன்றும் பிளட்டோ கனவு கண்ட யூட்டோபபிய அரசியல் அல்ல. எனவே உலகம் தர்மம், அதர்மம் என்பதன்படி முடிவெடுப்பதில்லை. மாறாக நீட்ஷே கூறியதுபோல "எது பலமோ அதுவே உண்மையுமாகிறது" இதன்படி கூறின் பலத்தின் அடிப்படையில்தான் நலன்கள் அமையும். நலன்களின் அடிப்படையில்தான் உறவுகள் அமையும். உறவுகளுக்கேற்பவே தர்மமும் அதர்மமும் வியாக்கியானம் செய்யப்படும். எனவே மகிந்த வந்தால் சர்வதேச சமூகம்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை உடனடியாக முழு அளவில் அங்கீகரித்துவிடும் என்பதல்ல. மாறாக தமிழர்களின் பேரம்பேசும் சக்தி எந்தளவுக்கு உயர்வாக இருக்கிறது என்பதன் அடிப்படையில் தான் தமிழர்களுடனான சர்வதேச சமூகத்தின் உறவு அமையும்.

புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முன்புவரை தமிழர்களின் பேரம்பேசும் சக்தி யுத்தகளத்துச் சாதனைகளின் மூலம் கட்டியெழுப்பப்பட்டது. யுத்தத்தின் வெற்றிகளால் பெற்ற ஒரு பலம் அது. அதன் பின் புரிந்துணர்வு உடன்படிக்கையிலிருந்து தொடங்கி கடந்த சுமார் மூன்றரை ஆண்டுகளுக்கு மேலாக

**நிலாந்தன்**

தமிழர்கள் சர்வதேச ராஜீய அரங்கில் காய்களை நகர்த்தும் விதத்தால் தமது பேரம் பேசும் சக்தியை அடுத்த கட்டத்துக்கு வளர்த்தெடுத்திருக்கிறார்கள்.

கதிர்காமர் கொல்லப்பட்டதால் இந்தப் பேரம்பேசும் சக்தியில் ஏதும் மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும் சுமார் மூன்றரை ஆண்டுகளுக்கு முன்பிருந்ததை விடவும், நிலைமை ஒப்பீட்டளவில உயர்வாகவே காணப்படுகிறது.

இனி மகிந்த வந்தாலும் சரி, ரணில் வந்தாலும் சரி ஒரு புதிய கட்டத்துக்கு ஏற்றாற் போல தமிழர்கள் தமது பலத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய அல்லது நிரூபித்துக்காட்ட வேண்டிய ஒரு தேவை இப்போது உருவாகிவருகிறது. மகிந்த வந்தால், அந்த வேலை ஒப்பீட்டளவில் இலகுவாகிவிடக்கூடும். ரணில் வந்தால், மேலும் ஒரு ராஜீயப் போருக்கு தமிழர்கள் தயாராவதைத் தவிர வேறுவழியில்லை.

# நறுக்கென...

## தாடிக்கார கேடியின் கூற்று..!



மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி, என்று கோசமிட்ட தாடிக்கார டக்ளஸ் தேவானந்தாவுக்கு என்ன நடந்தது.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் தீவகத்தில் அவரின் அடிவருடிகள் நடாத்திய தனியாட்சி முடிவுக்கு வந்ததோடு யாழ்ப்பாணம் சிறீதர் தியேட்டருக்குள்ளும், கொழும்பிலுமாக தங்கள் வாலை சுருட்டிக் கொண்டவர். வடக்கு-கிழக்கு மாகாணசபைக்கு தேர்தல் மூலம் புத்துயிர் அளிக்கவேண்டுமென்பது போல தன்னுடைய அரசியல் அபிலாசைய்யை வெளிப்படுத்தியுள்ளாராம்.

இரண்டு வருட காலமாக ஸ்தம்பித்துப் போயிருக்கும் சமாதான முன்னெடுப்புக்கள் முன்னகர வடக்கு-கிழக்கு மாகாணசபையை இயங்கச் செய்யவேண்டுமென தெரிவித்துள்ளாராம்.

அத்தோடு, மாகாணசபை ஆட்சிமுறையானது சிங்கள மக்கள் மத்தியில் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றுள்ளதால் வடக்கு-கிழக்கில் மாகாணசபையை இயங்கச் செய்யலாமாம்.

இது மட்டுமா ஜே.வி.பி, ஜாதிகஹெலஉறுமயக் கட்சிகள் கூட ஒற்றை ஆட்சி அரசமைப்பு முறைக்கு பங்கம் ஏற்படாமலே அதிகாரப் பகிர்வு மூலம் தீர்வுகாணப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை உடையனவாகவே இருக்கின்றன. சனாதிபதி வேட்பாளரான பிரதமரும் இவர்களுடன் ஒத்துப்போகின்றவர். எனவே தேர்தலில் வெற்றிபெற்று மகிந்த ராஜபக்ஷ சனாதிபதியானதும் வடக்கு-கிழக்கு மாகாண சபை ஆட்சிமுறை நிர்வாகத்தை மலரச் செய்து இடைக்காலத் தீர்வொன்றை காணுவார் என்பதே தாடிக்கார இந்தக்கேடி டக்ளஸின் எதிர்பார்ப்பாம்.

அதிகாரமே இல்லாத இந்த மாகாண சபையை டக்ளஸார் மலரச்செய்யவேண்டுமென அதிகம் பிரியப்படுவது வேடிக்கையாக இருக்கிறது.

மத்தியில் அரசாங்கத்தின் காலை வருடி சேமித்தபணம் போதாது என்று மாநிலத்தில் அதிகம் சுருட்டலாம் என கருதுகிறாரோ?

சிலவேளை இப்படிக் கூறுவதன் மூலம் சிங்களவர்கள் மத்தியில் தான் செல்லப்பிள்ளையாக மாறலாம் எனக் கருதுகிறாரோ.

நாய் நடுக்கடலுக்குப் போனாலும் நக்கித்தான் குடிக்கும் என தமிழில் ஒரு கிழமொழியுண்டு. இதைப் போல தமிழ் மக்களின் தலைவிதியை சிங்களவர்களின் காலடியில் போட்டு மிதிக்கவைக்க முயலும் இந்த கோடரிக்காம்புகளின் சிந்தனை வேறு எந்தத் திசையில் போகும்.

ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் ஆய்வு செய்த கார்த்திகேயன் வடக்கு-கிழக்கு மாகாண சபை அதிகாரமே இல்லாத ஒரு சபையாகவே இருக்கிறது. அத்தோடு வழங்கப்பட்ட அற்பசொற்ப அதிகாரங்களைக்கூட சிங்களவர்கள் வழங்கவில்லை என ஒரு முறை தெரிவித்திருந்தார்.

அதாவது வடக்கு-கிழக்கு மாகாண சபையினூடாக தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள் எனத் தெரிவித்திருந்தார்.

இப்படியானதொரு நிலையில் தமிழ் மக்களை இத்தனை பெரிய தியாகங்களை புரிந்து, பெரும் இழப்புக்களையும், துயரங்களையும் சுமந்து தமக்கான தனியரசு ஒன்றிற்கு சர்வதேசத்தின் ஆதரவுக்காய் குரலெழுப்பிவரும் சூழலில் இனத்தையும் இனத்தின் மானத்தையும் விற்றுவிடத் துடிக்கும் கோடரிக்காம்பு கொக்கரிக்கிறார்.

இந்தக் கோடரிக் காம்புகள் எப்படித்தான் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாய் காட்டிக்கொள்ளமுயல்கிறார்களோ.

அது சரி இவர்களுக்கு எங்கே இருக்கப்போகிறது இனமானம், மற்றும் தன்மானம்.

## ஏமாற்ற நினைப்பவர்கள்..!



சனாதிபதித் தேர்தலையொட்டிய ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் கட்சித் தலைமையகமான சிறிகோத்தாவில் வைத்து ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினால் வெளியிடப்பட்டுள்ளது.

தேர்தலில் போட்டியிடும் இரண்டு பிரதான கட்சிகளில் ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரையில் இனப்பிரச்சினை இந்நாட்டின் பொருளாதாரம் என முக்கியமான பிரச்சினைகள் தொடர்பாக தெளிவான கொள்கை நிலைப்பாடும் திட்டமும் இருக கிறது என்பது போல அந்தக் கட்சி வெளிக்காட்டிவந்தது.

ஆனால் உண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரையில் அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தை உற்று நோக்குபவர்களுக்கு ஒரு தெளிவான பார்வை கிடைக்கும். அதாவது நாட்டின் முக்கியமான பிரச்சினையான இனப்பிரச்சினை தொடர்பாக அக்கட்சி ஒரு தெளிவான நிலைப்பாட்டை கொண்டிருக்கவில்லை என்பதை புரிந்துகொள்ளலாம்.

ஏனைய கட்சிகளைப் போலவே நழுவல் போக்கையும் மழுப்பல் வாசகங்களையுமே அதில் வெளிப்படுத்தியிருக்கிறது.

இந்தக் கட்சியோடு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் ஆறு சுற்று சமாதானப் பேச்சுக்களை சர்வதேச நாடுகளின் தலைநகரங்களில் நடாத்தி இறுதியில் ஒரு இடைக்கால தன்னாட்சி அதிகார சபை ஒன்றிற்கான திட்ட வரைவினையும் கையளித்திருக்கும் அதேவேளை ஒரு இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டியிருக்கும் ஒரு சூழல் இருக்கும் நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி தொடர்பாக தனது கட்சியின் தெளிவான நிலைப்பாட்டை வரையறுக்கவில்லை என்பது அக்கட்சியின் அரசியல் நேர்மையீனத்தை வெளிப்படுத்தி நிற்கிறது.

அத்தோடு ஏற்கனவே பொதுசன ஐக்கிய முன்னணியின் நிலைப்பாடுகள் சமாதானத்தை பல வழிகளிலும் குழப்பி நிற்கும் வேளையில் இனப்பிரச்சினை தொடர்பாக பொது சன ஐக்கிய முன்னணிக்கும் தமக்கும் இடையில் இணக்கப்பாடு இருப்பதாக ஐக்கிய தேசிய கட்சி தெரிவிப்பதானது ஐக்கிய தேசியக் கட்சி இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தீர்க்கமான எந்த முடிவையும் எடுக்கப் போவதில்லை என்பதையே காட்டுகிறது.

எனவே ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச ஐக்கிய தேசியக்கட்சி இடைக்கால நிர்வாகம் குறித்து பேசத் தயாரா என கேள்வி எழுப்பியுள்ளார். இதற்கு ஒரு துணிவு மிக்க அரசியல் தலைவராக ரணில் இருப்பாரேயானால் தெளிவான பதிலை அளிக்க முடியும். ஆனால் ரணில் அவ்வாறு செய்யமாட்டார் என்பதே உண்மை.

ஏனெனில் அண்மைக்காலமாக மகிந்த ராஜபக்ஷவை விட தான் சிங்கள மக்களின் நலன் விரும்பி என காட்டுவதில் தன்னை அடையாளம் காட்டி வருகிறார்.

## வாசுவின் குத்துக்கரணம்



இப்பொழுதெல்லாம் இலங்கையில் அதிகம் நம்ப முடியாதவர்களாக இடது. சாரிகள் மாறி வருகிறார்கள்.

ஒரு காலத்தில் இடதுசாரிகளை நம்பியதும் நம்பக் கூடியவர்களாக அவர்கள் திகழ்ந்ததும் ஒரு காலம். அக்காலம் எப்போதோ மாறிவிட்டது.

இப்பொழுதெல்லாம் இடதுசாரிகளின் கொள்கைகளும் கோட்பாடுகளும் என்ன, அவர்கள் பின்பற்றுவது எதைத்தான் என்பதெல்லாம் தெரியவில்லை.

தமிழ் மக்களின் போராட்டத்தை ஆதரித்து குரல் கொடுத்த பல இடதுசாரிகள் இலங்கையில் இருக்கிறார்கள். ஆனால் காலப்போக்கில் அவர்களின் கோட்பாட்டை வைத்து மதிப்பீடு செய்வது தவறு போல உள்ளது.

ஏனெனில், அவர்கள் தங்களை இடதுசாரிகளாக வெளிப்படுத்திக் கொண்டாலும் அவர்கள் இன ரீதியாகவும் மதரீதியாகவும் தாங்கள் சார்ந்து நிற்கும் இனத்தையும் மதத்தையும் வைத்துக்கொண்டே அரசியல் முடிவுகளை எடுப்பதோடு இடதுசாரி கொள்கைகளுக்கே புதிய வடிவங்களை கொடுக்க முனைகிறார்கள்.

இந்த வகையில் தமிழர் தாயகப் பிரதேசங்களுக்கு விஜயம் செய்து 'எப்பா...எப்பா...யுத்த எப்பா...' என தாங்களும் கோசமிட்டு மேடையின் முன் கூடியிருந்த மக்களையும் கோசமிட செய்தவர் வாசுதேவநாணயக்கார, வாசுதேவ நாணயக்கார ஒரு முற்போக்கான இடதுசாரி. அரசியல் தலைவராக தன்னை இனங்காட்டிக்கொண்டதுடன் தமிழ் மக்களின் போராட்டம் தொடர்பாக ஒரு தெளிவான பார்வையைக் கொண்டவர் போலவும் காட்டிக்கொண்டவர்.


ஆனால், இப்போது சனாதிபதித் தேர்தலில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை ஆதரித்து நிற்கிறார். மகிந்த ராஜபக்ஷ உடன் ஏற்கனவே கூட்டுச்சேர்ந்திருக்கும் ஜே.வி.பி, ஹெல உறுமய போன்ற கட்சிகள் தமிழ் மக்களுக்கு எதிரான நிபந்தனைகளை முன்வைத்திருப்பதுடன் யுத்தத்தை ஆதரிக்கும் ஒரு போக்கையும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இந்தக் கூட்டோடு சேர்வதன் மூலம் வாசுதேவநாணயக்கார தன்னையொரு சிங்கள குடிமகன் என்பதோடு அதற்கு அப்பால் எதைப்பற்றியும் சிந்திக்கமாட்டேன் என்பதை வெளிப்படுத்தியுள்ளார்.

உண்மையில் சொல்லப்போனால் வாசுதேவ நாணயக்கார போன்றோர்கள் இவ்வளவு காலமும் நடித்ததெல்லாம் வெறும் அரசியல் நாடகம் மட்டுமே.

இதில் வேடிக்கை என்னவென்றால் மகிந்தவுடன் கூட்டுச்சேர்ந்து கொண்டு பொதுக் கட்டமைப்பை உருவாக்கப் போவதுடன் இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்தி தமிழ் மக்களை கௌரவத்துடன் வாழ வழி செய்யப்போகிறாராம்.

கெட்ட கேட்டிற்கு இது வேறு. முதலில் தமிழ் மக்களின் கௌரவத்துக்காக வாசுதேவ நாணயக்கார பாடுபடுவதை விடுத்து இடதுசாரிகள் என்ற முகமூடியை கழற்றி எறிய வழியைத் தேடுவதே சாலச்சிறந்ததாகும்.

## நம்பத் தகுதியற்றவர்கள்..!



அண்மையில் ஊடகவியலாளர் மத்தியில் பேசும் போது தேர்தல் ஆணையாளர் ஒரு விடயத்தை தெரிவித்தார்.

அதாவது தனக்கு எந்த அரசியல் வாதியின் மீதும் நம்பிக்கை கிடையாது. இதனால் இந்தத் தேர்தலிலும் தான் வாக்களிக்கப் போவதில்லையெனவும் தெரிவித்துள்ளார்.

தான் கடைசியாக 1963 ஆம் ஆண்டுக்குப்பின்னர் வாக்களிக்கவே இல்லையெனவும் இதற்கு தான் அரசியல்வாதிகளோடு பழகிய பின்னர் தான் இந்த முடிவை எடுத்ததாகவும் தெரிவித்துள்ளார்.

அரசியல்வாதிகளுடன் பழகிய பின்னர் தேர்தல் ஆணையாளர் இத்தகைய முடிவெடுத் திருக்கிறார் என்றால் இந்த அரசியல்வாதிகளின் ஆட்சியின் கீழ் மக்கள் எவ்வளவு சலிப்பும் கோபமும் அடைந் திருக்கிறார்கள் என்பதை புரிந்துகொள்ளலாம்.

சிறிலங்காவைப் பொறுத்தவரையில் எந்த அரசியல் தலைவரும் நீண்ட கால நோக்கில் சிந்திப்பவர்களாகவோ நாட்டு மக்களின் நலனுக்காக உழைப்பவர்களாகவோ இல்லை. மக்களுக்கிடையில் இன மத ரீதியில் வன்முறைகளைத் தூண்டி மக்களை தம் காலடியில் மிதிக்க எண்ணும் கொடியவர்களாகவே உள்ளனர்.

மக்களுக்கு சேவை புரிவதற்கான ஒரு துறையான அரசியலை ஒரு அருவெருப்புக்குரிய துறையாக மாற்றிய பெருமை இவர்களையே சாரும்.

இன்று சிறிலங்காவை பொறுத்தவரை யுத்தம் தோன்றியதற்கும், யுத்தத்தை இனங்களின் மீது ஏவிவிட்டதற்கும் ஏவி விடுவதற்கும் இந்த அரசியல்வாதிகளே காரணமாகும்.

எனவே தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டது போல எந்த அரசியல் வாதியையும் தேர்தல் ஆணையாளர் மட்டுமல்ல நாட்டு மக்களும் நம்புவதற்கு தயாரில்லை என்பதே யாதார்த்தம்.

இந்த நிலையில் தேர்தல் ஆணையாளர் இந்தக் கருத்தை தெரிவிப்பதன் அடிப்படையில் நடைபெறப் போகும் சனாதிபதித் தேர்தலை வைத்து நோக்குவதும் பொருத்தப்பாடுடையதாக இருக்கும்.

ஏனெனில் நடைபெறப் போகும் சனாதிபதித் தேர்தலில் இலங்கையின் பிரதான இரண்டு கட்சிகள் என்ற வகையில் அந்தக் கட்சிகளின் பிரதான வேட்பாளர்களான பிரதமர் மகிந்த ராஜ பக்ஷவும் எதிர்கட்சித் தலைவரான ரணில் விக்கிரம சிங்கவும் அரசியல் வாதிகள் என்ற வகையில் இந்த இரண்டு பேரும் கூட நம்புவதற்குரியவர்கள் அல்ல என்பதைத்தான் தேர்தல் ஆணையாளர் சூசகமாகத் தெரிவித்தார் எனவும் கொள்ளலாம்.

இது உண்மையும் கூட. ஏனெனில் ரணில் நல்லவர் என ஒரு சாராரும் மகிந்த நல்லவர் என இன்னொரு சாராரும் என இவர்களைப் புகழ்ந்து வருகின்றனர். எனவே இரண்டு பேருமே ஒரே வகையானவர்கள் தான் என்பதுடன் இலங்கையின் அரசியல் சூழலை பாராட்டும் படியாகவோ மக்கள் ஏற்றுக்கொள்ளும் படியாகவோ இல்லை என்பதைத்தான் இது வெளிப்படுத்துகிறது.

எனவே தமிழ் மக்கள் எப்போதோ எடுத்துவிட்ட ஒரு தீர்க்கமான முன்னோடியான பார்வையை சிங்கள தேசம் இப்பொழுதுதான் சிந்திக்கத் தலைப்படுகிறது. என்பதையே தேர்தல் ஆணையாளரின் மேற்படி கூற்று உணர்த்துகிறது.

வேழினி

# யார் இந்த ரோகண விஜேவீர?

அன்பரசு



**இலங்கை பல்லின நாடாக இருப்பினும் 74 வீதமான சிங்களவர்களைச் சிறுபான்மை தமிழர்களோடு வைத்துப்பார்க்கமுடியாது. நாடு முழுவதும் ஜே.வி.பியின் கட்டுப்பாட்டில் வரவேண்டும், பிரிவினையை அனுமதிக்கமுடியாது. தமிழர் பிரச்சினைக்கு இந்துமாகடல் நல்ல தீர்வாக அமையும், அதாவது அவர்களைக் கடலுக்குள் தள்ளிவிடலாம்.**



மேடையில் புரட்சி பேசுவோர் மலிந்த சிறிலங்காவில் ஆயுதப் புரட்சி மூலம் அரசைக் கைப்பற்ற இருதடவை முயற்சிசெய்து உயிர் இழந்த றோகணவிஜேவீர ஒரு வித்தியாசமான மனிதன். இவர் ஜூலை 14,1943 இல் பிறந்து நவம்பர் 13,1989இல் கொல்லப்பட்டார். விஜேவீர என்பது அவருடைய குடும்பப்பெயர். அவருக்குப் பெற்றார் பிறந்தவீட்டில் வைத்த பெயர் பதுபந்திடொன்நந்தசிறி. புரட்சிகர வாழ்வில் அவர் தனக்குத்தான் சூட்டிய பெயர் றோகண விஜேவீர. றுகுணு றட்டையின் தலைவன் என்பதை றோகண குறிப்புணர்த்தும்.

றோகண விஜேவீராவைக் கைதுசெய்வதற்காக வலைவிரித்த இராணுவ மற்றும் பொலிஸ் படையினர் அவருக்குக் கொடுத்த சங்கேத மொழிப்பெயர் றோமியோவிஸ்கி. தங்காலையில் வாழ்ந்த டொன் அந்திரீஸ் விஜேவீரவின் மூன்று பிள்ளைகளில் மூத்தவர் றோகணவிஜேவீர. ஆனந்தா, சித்ராணி என்று பெயரிடப்பட்ட ஒரு தம்பியும் தங்கையும் இவருக்கு உண்டு. அவர்கள் இன்றும் உயிர் வாழ்கிறார்கள்.

டொன் அந்திரீஸ் ஒரு தீவிர கம்யூனிஸ்ற் கட்சி உறுப்பினர். 1947ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் கமியூனிஸ்ட் கட்சி வேட்பாளர் பிறேமலால் குமாரசிறி என்பவருக்கு தேர்தல் பணியாற்றிக்கொண்டிருந்தபோது டொன் அந்திரீஸ் எதிரிகளால் கடுமையாகத் தாக்கப்பட்டார். அவரைத் தலையிலும் காலிலும் பிடித்து இழுத்து வதைத்தபோது அவருடைய நரம்புகள் செயலிழந்தன. இதனால் நடமாடமுடியாமல் படுக்கையில் கிடந்தார்.

கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று ஜீ.சி.ஈ சாதாரணதரத்தில் படித்துக் கொண்டிருந்த றோகண விஜேவீரவின் படிப்பு நிதிப் பற்றாக்குறையால் இடைநிறுத்தப்பட்டது. டொன் அந்திரீஸ் குடும்பத்தினர் யாவரும் தீவிர கம்யூனிஸ்ற்றுகள். றோகணவிஜேவீர கம்யூனிஸ்ற் சூழலில் சிறு வயதிலிருந்து வளர்ந்தவர். இதன் காரணமாகப் படிப்பு நின்றாலும் மார்க்ஸ், லெனின் போன்ற பிதாமகர்களின் நூல்களை சிங்கள மொழியில் அவர் துறைபோகக் கற்றார்.

தனது தந்தையைப்போல மகனும் ஆரம்ப காலத்தில் ஒரு மொஸ்கோ சார்பு கம்யூனிஸ்ராக இருந்தார். இலங்கை கம்யூனிஸ்ற் கட்சித் தலைவர்களில் ஒருவரான டாக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்கவின் மருத்துவமனையில் றோகணவிஜேவீர பிறந்ததாக அவருடைய வரலாறு கூறுகிறது. அவர் பிறந்தவுடன் கட்சியின் இன்னுமொரு தலைவரான பீற்றர் கெனமன் குழந்தை றோகணவைத் தனது கைகளில் தூக்கி வைத்திருந்ததாகவும் அதே வரலாறு அறியத்தருகிறது. நெடுங்காலமாக றோகண விஜேவீரவின் வழிகாட்டிகளாக இந்த இரு தலைவர்களும் இருந்தனர். தொடர்ந்து மேற்படிப்பை மேற்கொள்வதற்கு இவர்கள் மூலமான உதவிகள் கிடைக்கும் வாய்ப்புக்கள் இருந்தாலும் றோகணவிஜேவீர தேர்தல்களில் கூடுதல் கவனம் செலுத்தினார்.

1960ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தல் களில் அவர் கம்புறுப்பிற்றியா தேர்தல் தொகுதி கம்யூனிஸ்ற் வேட்பாளர் ஏலியன் நாணயக்காராவுக்காக மிகவும் கடுமையாக உழைத்தார். எனினும் அவருக்கு வெற்றி வாய்ப்பைத் தேடிக் கொடுக்க றோகணவால் முடியவில்லை. ஆனால் நாணயக்காராவின் ஆழ்ந்த அன்பையும், நட்பையும் பெற றோகணவால் முடிந்தது.

இக்காலப்பகுதியில் 1961இல் கொல்லப்பட்ட கொங்கோ நாட்டின் தேசியத் தலைவர் பற்றிஸ்லுமும்பா (1925-1961) ஞாபகார்த்தமாக மொஸ்கோ தலைநகரில் சோவியத் ஒன்றியம் வெளிநாட்டு மாணவர்களுக்கான ஒரு பல்கலைக்கழகத்தை ஆரம்பித்தது.

விசேட தகுதிபெற்ற கம்யூனிஸ்ற் சார்பு ஆசிய, ஆபிரிக்க மாணவர்களுக்கு உயர்கல்வி அளிப்பதற்காக அது ஆரம்பிக்கப்பட்டது. இது சம்பந்தமான விளம்பரத்தை சோவியத் ஒன்றியப் பிரசுரம் ஒன்றில் பார்த்த றோகண விஜேவீர ஏலியன் நாணயக்காராவின் உதவியோடு விண்ணப்பஞ்செய்தார்.

மருத்துவக் கல்வி படிப்பதற்கான உபகாரச் சம்பளம் உள்ளடங்கிய அனுமதியை றோகண பெற்றார். அப்போது அவருக்கு வயது பதினேழு. லுமும்பா சர்வதேச பல்கலைக் கழகத்தில் அவ்வருடம் அனுமதிக்கப்பட்ட மாணவர்களில் அவர்தான் வயதில் மிகக் குறைந்தவர். செப்ரெம்பர்25,1960ஆம் ஆண்டு அவர் ஏரோபுளொட் விமானம் மூலம் மொஸ்கோ பயணமானார்.

ரஷ்ய மொழியில் சித்தி பெற்ற றோகண முதல் மூன்றுவருட மருத்துவப் படிப்பை தடங்கலின்றிப் படித்து முடித்தார். அதன்பின் அவர் மருத்துவப் படிப்பில் கவனஞ் செலுத்தாது சர்வதேச அரசியல், அரசியல் சித்தாந்தம் போன்ற வித்தியாசமான துறையில் கால்பதித்தார்.

ஒரு வைத்தியராக இருப்பதிலும் பார்க்க ஒரு புரட்சிவாதியாக மனித குலத்திற்குக் கூடுதலான பணியாற்றமுடியுமென்று அவர் தீர்மானித்தார். அத்தோடு அவர் தனது மருத்துவப் படிப்பிற்கு முற்றுப்புள்ளிவைத்தார். லுமும்பா பல்கலைக்கழக நிர்வாகம் இதற்கு ஆட்சேபிக்கவில்லை.

தங்கள் நாட்டிற்கு பல்தேய ஆதரவாளர்களைத் திரட்டுவதுதான் அவர்களுடைய முழு நோக்கமுமாக இருந்தது. மருத்துவக் கல்வியைக் கைவிட்டதுபோல் அவருடைய கம்யூனிஸ்ற் சித்தாந்த வாழ்விலும் ஒரு பாரிய மாற்றம் ஏற்பட்டது.

1962இல் சிறிய விடுப்பில் றோகண விஜேவீர இலங்கை வந்தார்.அப்போது இலங்கை கம்யூனிஸ்ற் கட்சியிலுள்ள குறைபாடுகளை நன்கு உணர்ந்தார். வலது சாரிச் சிந்தனை கட்சிக்குள் புகுந்துள்ளதை அவர் அவதானித்தார்.

உண்மையில் இலங்கை இடதுசாரிகள், தமிழர் என்றாலும் சிங்களவர் என்றாலும் பேச்சளவில் இடதுசாரியாகவும் நடைமுறையில் முதலாளித்துவத்திற்கு முண்டு கொடுப்பவர்களாகவும் இருப்பார்கள்.

இலங்கைக் கம்யூனிஸ்ற் கட்சியின் எதிர்காலம் பூச்சியம் என்று விஜேவீர வெளியடையாக இளைஞர்கள் மத்தியில் பேசினார். இதே காலப்பகுதியில் சீனக் கம்யூனிஸ்ற், சோவியத் கம்யூனிஸ்ற் என்ற இரு கட்சிகள் இலங்கையில் தோன்றின. விஜேவீர சீனக் கம்யூனிஸ்ற்றுக்கள் பக்கம் சாய்ந்தார். அவர்களுடைய நிலைப்பாடு தீவிரமானது என்று அவர் நம்பினார். இதன்பின் அவர் சோவியத் ஒன்றியம் திரும்பினார்.

1963ஆம் ஆண்டு பிற்பகுதியில் ஓய்வின்றிப் படித்த காரணத்தால் அவருக்கு கடுஞ்சுகயீனம் ஏற்பட்டது. சில நாட்கள் மொஸ்கோ மருத்துவமனையில் அவருக்குச் சிகிச்சை வழங்கப்பட்டது. வைத்தியர்களின் பரிந்துரைப்படி பல்கலைக்கழக நிர்வாகம் றோகண விஜேவீரவை நான்கு மாத விடுப்பில் கொழும்புக்கு அனுப்பியது.

இலவச விமானச் சீட்டையும் அவர்களே வழங்கினார்கள். அவர் வந்து இறங்கிய காலத்தில் இலங்கை கம்யூனிஸ்ற் கட்சி மொஸ்கோ ஆதரவு அணி, பீக்கிங் ஆதரவு அணி என்று இரண்டாகப் பிளவுபட்டிருந்தது. டாக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்க, பீற்றர்கெனமன் தலைமையில் சோவியத் ஒன்றியம் சார்ந்த அணியும், சண்முகதாசன், பாலா தம்பு தலைமையில் சீனக் கம்யூனிஸ்ற் அணியும் பலத்த மோதலில் ஈடுபட்டன.

மொஸ்கோ ஆதரவு அணியினரின் கொள்கைத் தீவிரம் போதாமையால் சீனக் கம்யூனிஸ்ற் அணியுடன் றோகண இணைந்து செயற்பட்டார். குடும்ப நண்பரான டாக்டர் விக்கிரமசிங்க தடுத்தும் கேளாமல் அவர் சீன கம்யூனிஸ்ற் கட்சிக் கூட்டங்களில் பேச்சாளராகக் கலந்துகொண்டார்.

ஆனால், தமிழரான சண்முகதாசன் தமிழ் மொழி பேசாத பாலா தம்பு ஆகியோரின் தலைமையை றோகண விஜேவீர ஏற்க மறுத்தார். மானிப்பாயில் பிறந்த நாகலிங்கம் சண்முகதாசன் பொன்கந்தையா இறந்தபின் அவருடைய மனைவியை மறுவிவாகம் செய்தவர். நெடுங்கால சீனா சார்ந்த கம்யூனிஸ்ற்றான சண்முகதாசனை அகற்றிவிட்டு தலைமைப் பதவியைக் கைப்பற்ற றோகண விஜேவீரவும் அவருடைய நெருங்கிய சகாக்களும் சதி முயற்சியில் ஈடுபட்டனர். இதை அறிந்த சண்முகதாசன் றோகண விஜேவீரவையும் நண்பர்களையும் வெளியேற்றினார்.

றோகண விஜேவீரவின் நடவடிக்கைகளை அவதானித்த கொழும்பிலுள்ள ரஷ்யத் தூதரகம் அவருக்கு மீண்டும் மொஸ்கோ சென்று படிப்பைத் தொடர்வதற்கான விசா அனுமதியை கொடுக்க மறுத்தது. இதனால் வெறுப்படைந்த அவர் தனது கிராமத்துக்குச் சென்றார். படுக்கையில் கிடந்த அவருடைய தந்தை 1965 இல் இறந்தார். அடுத்த இரு வருடங்களையும் தனது கிராமத்தில் விஜேவீர செலவிட்டார். இக்காலப்பகுதியில் சே.குவேராவின் எழுத்துக்களைக் கற்றுணர்ந்தார். அத்தோடு சிறிலங்காவின் அரசியல் வரலாறு, புரட்சிகர சித்தாந்தங்கள் போன்றவற்றையும் அவர் கரைத்துக் குடித்தார். இதன் பயனாய் தனது இயக்கத்தின் புகழ்பூத்த ஐந்து பேருரைகளை அவர் உருவாக்கினார். இவை ‘FIVE LECTURES’ என்று அழைக்கப்படுகின்றன. ஜே.வி.பியின் வேத நூல்களாக இப்பேருரைகள் கணிப்பிடப் படுகின்றன.

றோகண விஜேவீரவின் சிந்தனை, அணுகுமுறை, உள்நாட்டு, வெளிநாட்டுப் பிரச்சினைகளுக்கு அவருடைய தீர்வு என்பன ஐந்து பேருரைகளிலும் காணப்படுகின்றன. ஜனதா விமுக்தி பெரமுனையை உருவாக்கியவர் விஜேவீர. ஜே.வி.பி எனப்படும் இவ்வமைப்பை விளங்கிக்கொள்ள இந்தப் பேருரைகள் உதவுகின்றன.

கட்சிக்கு ஆதரவு திரட்டும் மாநாடுகளில் பேருரைகளிலிருந்து மேற்கோள்காட்டப்பட்டன. புதிய இளம் தலைமுறையினரைத் திரட்டுவதற்கும் அவை பயன்படுத்தப்பட்டன.

காலத்திற்குக் காலம் உள்ளூர் மற்றும் சர்வதேச மாற்றங்களுக்கு அமைவாக பேருரைகளில் காத்திரமான மாற்றங்கள் செய்யப்படுவது வழமை. ஆனால் ஐந்து தலைப்புக்களும் மாறாமல் இருக்கின்றன. அவற்றைப் பார்ப்போம். சிங்கள மொழியில் ஐந்தும் கூட்டாக “பந்திபகா” என்றழைக்கப்பட்டன.

1. முதலாளித்துவ ஒழுங்கு சந்திக்கும் சவால்கள்.
2. இச்சவால்களை நாம் எப்படிச் சாதகமாகப் பயன்படுத்தலாம்.
3. ஜே.வி.பி அமைப்பின் வரலாறு.
4. சிறிலங்காவில் சோசலிசப் பயணம்.
5. இந்திய விஸ்தரிப்பு மற்றும் ஏகாதிபத்தியம்.

இவற்றைவிட றோகண விஜேவீர மூன்று புத்தகங்களை கட்சித் தேவைகளுக்காக எழுதினார். “நாங்கள் கொல்லப்பட்டாலும் எமது கொள்கைகள் மரணிக்கமாட்டா”, “நசுக்கப்படும் வர்க்கம்”, “தமிழீழப் போராட்டத்திற்கு என்ன விடை?” என்பன புத்தகங்களின் தலைப்புகள்.

இலங்கை பல்லின நாடாக இருப்பினும் 74 வீதமான சிங்களவர்களைச் சிறுபான்மை தமிழர்களோடு வைத்துப்பார்க்கமுடியாது. நாடு முழுவதும் ஜே.வி.பியின் கட்டுப்பாட்டில் வரவேண்டும், பிரிவினையை அனுமதிக்கமுடியாது. தமிழர் பிரச்சினைக்கு இந்துமாகடல் நல்ல தீர்வாக அமையும். அதாவது அவர்களைக் கடலுக்குள் தள்ளிவிடலாம்.

ஜே.வி.பியின் துரித வளர்ச்சிக்குச் சில முக்கிய அடிப்படைக் காரணங்கள் இருக்கின்றன. இலங்கையில் தம்மைவிட வேறு

(20ஆம் பக்கம் பார்க்க)

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 30. 09 . 2005
மின் அஞ்சல :– weekly @ eezhanatham.com

# நீதி தவறிய நடுநிலை..!

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தூதுக்குழுக்கள் பயணம் செய்வதற்கு ஐரோப்பிய நாடுகளில் தடைவிதிப்பதாக ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்திருப்பதானது தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும், தமிழ் மக்களுக்கும் அதிர்ச்சியையும், விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

ஐரோப்பிய யூனியனின் இந்த நிலைப்பாடு தொடர்பான தமது அதிர்ச்சியையும், விசனத்தையும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் ஏற்கனவே தெரிவித்திருக்கும் நிலையில், பொது அமைப்புக்களும் தமது கடும்கண்டனத்தை தொடர்ச்சியாக வெளிப் படுத்தி வருகின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தூதுக்குழுக்களுக்கு தற்காலிகப் பயணத்தடை விதிக்கப்படுவதற்கு ஐரோப்பிய யூனியன் அமைப்புத் தெரிவித்திருக்கும் காரணங்கள் ஒரு ஆதாரபூர்வமற்ற குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலானதாக இருப்பதுடன் இதே காரணங்களின் அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக் கத்திற்கும் தமிழ்மக்களுக்கும் சிலகேள்விகளை ஏற்படுத்தியுள்ளது.

அதாவது, முன்னாள் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையும், அதுபோன்ற ஏனைய பலவற்றின் அடிப்படையிலும் ஐரோப்பிய ஒன்றியம் இத்தகையதொரு நிலைப் பாட்டிற்கு வந்துள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறாயின், புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் அரச கட்டுப்பாட்டிலும், அதற்கு வெளியிலுமாக அரச படையினராலும் அரச படைத் துணைக்குழுக்களினாலும் இன்றுவரை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் மீது மேற் கொள்ளப்பட்ட கொலைகள் தொடர்பாகவும் சனநாயகத்தின் குரல்கள் எனக் கூறப்படும் தமிழ் ஊடகவியலாளர்கள் மீதும் மேற் கொள்ளப்பட்ட கொலைகள் தொடர்பாகவும் ஐரோப்பிய யூனியன் என்ன நடவடிக்கை யினை அரசுக்கு எதிராக மேற்கொண்டுள்ளது என்ற கேள்வி எழுகிறது.

இத்தகைய எதிர்க்கேள்விகளானது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் தமிழ் மக்களுக்கும் எழுவதானது உணர்ச்சி மிகுதியால் எழும் கேள்விகளல்ல. பதிலாக தமிழ்த் தரப்பு மீது மேற்கொள்ளப்படும் இத்தகைய கொலை நடவடிக்கைகளை கண்டு கொள்ளாது ஐரோப்பிய யூனியன் நடந்து கொள்கின்றமை தொடர்பாக எழுகின்றதாகும்.

இதேவேளை, தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கமும் சிறிலங்கா அரசாங்கமும் சமதரப்பாக சமாதான முன்னெடுப்பில் பங்கெடுத்து வரும் சூழலில் சர்வதேச நாடுகள் நடுநிலையானவர்களாக நேர்மைமிக்க பார்வையாளர்களாகவே மதிக்கப்பட்டு வருகிறார்கள்.

இந்த சர்வதேச நாடுகளின் நேர்மை மிக்க நீதியான செயற் பாடுகளின் நம்பிக்கையின் அடிப்படையில்தான் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது.

ஆனால் இந்த நாடுகளின் நீதியானது பக்கச் சார்பானதாகவும் ஒரு திசை நோக்கிய பார்வையாகவும் இருப்பதானது சமாதான முயற்சிகளில் ஆழமான சேதத்தை ஏற்படுத்தி விடக் கூடியதாகும்.

ஏனெனின், அண்மையில் அமெரிக்காவின் நியுயோர்க் நகரத்தில் இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளின் கூட்டத்தில் இதே ஐரோப்பிய யூனியனும் பங்கு கொண்டு வன்செயல் மற்றும் அமைதியின்மை போன்றவற்றைத் தூண்டும் அரச துணைக் குழுக்களின் நடவடிக்கைகள் தொடர்பாக சுட்டிக்காட்டியிருந்ததன் மூலம் அரச வன்முறையை ஏற்றுக் கொண்டிருந்தது.

இந்த வகையில் வன்முறை நடவடிக்கையின் அடிப்படையில் புலிகள் இயக்கத்திற்கு மட்டும் நடவடிக்கை என்ற அடிப்படையில் பயணத்தடை விதித்திருப்பதன் மூலம் அரச துணைக்குழுக்களின் செயற்பாட்டிற்கு ஐரோப்பிய ஒன்றியம் பாதை திறந்து விட்டுள்ளது.

உண்மையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்நடவடிக்கையானது சர்வதேச சமூகத்தின் நடு நிலைமை தொடர்பாக தமிழ் மக்களை ஆழமாகச் சிந்திக்க வைக்கின்றது.

சர்வதேச சமூகம் தனது நீதியான செயற்பாட்டிலிருந்து பின் வாங்குவதானது தமிழ் மக்களையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் சமாதான முயற்சி தொடர்பாக உள்ளீர்ப்பதற்குப் பதிலாக வெளித் தள்ளவே செய்யும்.

இதனால்தான், ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த அறிவிப்புத் தொடர்பாக ஊடகவியலாளர் மாநாட்டில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் சர்வதேச சமூகம் ஒரு பக்கச்சார்பான நிலைப்பாட்டை எடுக்கும் போது சமாதானச் சூழ்நிலை களும் சமாதான முன்னெடுப்புகளும் பலவீனமடையும் என நாம் நினைக்கிறோம். அந்த நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகளாகிய நாங்களும் ஓர் இக்கட்டான துர்ப்பாக்கியமான சூழலில் சில தீர்க்கமான முடிவுகளை எடுக்கும் நிர்ப்பந்தத்துக்குள் தள்ளப்படுவோம் எனத் தெரிவித்திருந்தார்.

இந்த வகையில் ஐரோப்பிய யூனியனின் இந்த நடவடிக் கையானது ஒரு பலூன் உள்வாங்கக் கூடிய காற்றை விட அதிக காற்றை ஊத முயல்வது போன்றதாகும்.

அதிலும் தமிழ் மக்கள் சனநாயக ரீதியாக மாவட்டங்கள் தோறும் தமது அரசியல் அபிலாசைகளை வெளிப்படுத்தி வரும் சூழலில் ஐரோப்பிய யூனியனின் இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது.

வன்முறைகளுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கையாகக் கூறும் ஐரோப்பிய யூனியன் சனநாயக ரீதியிலான தமிழ்மக்களின் குரலுக்கு இதுவரை தனது வெளிப்பாடு எதனையும் வெளிப் படுத்தவில்லையே..?

# மக்களின் உணர்வுகளும் படையினரின் கெடுபிடிகளும்

வவுனியா பேராளர் மாநாட்டில் எடுக்கப் பட்ட தமிழ் தேசிய எழுச்சிப் பிரகடனத்திற்கு வலுச் சேர்க்கும் முகமாக கிளிநொச்சியிலும் முல்லைத்தீவிலும் எழுச்சிப் மாநாடு உணர்வுபூர் வமாக தமிழ் மக்களால் நடத்தப்பட்டது. அதை தொடர்ந்து நேற்று முன்தினம் மன்னாரிலும் தமிழ்த் தேசிய எழுச்சி பிரகடன நிகழ்வு மன்னார் இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதியில் தமிழ் மக்களால் நடத்தப்பட்டுள்ளது.

இத் தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வுக்கு முன்னதாக தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப் பினர்கள் இராணுவத்தரப்பினருடன் பேச்சு வார்த்தை நடத்தியிருந்தனர்.

அப்பேச்சுவார்த்தையில் படைத்தரப் பினர் எவ்வழிகளிலும் தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வுக்கு இடையூறாக இருக்கக் கூடாது என தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்டமைக்கு படைத்தரப்பும் தாங்கள் இடையூறு இன்றி ஒத்துழைப்பு வழங்குவதாகவும் அன்றைய தினம் உயிலங்குளம் சோதனைச் சாவடியை இரவு பத்து மணிவரை திறந்து வைத்திருப்ப தாகவும் கூறியிருந்தனர்.

இந்நிலையில் திட்டமிட்டபடி நிகழ்வு ஆரம்பமாக இருப்பதற்கு முன்னதாக நிகழ்வு நடந்த மன்னார் பொது மைதானத்தைச் சுற்றி பெருமளவு படையினர் கவச வாகனங்கள் சகிதம் ஒரு யுத்தத்திற்கு தயார் நிலையில் இருப்பது போன்று விளையாட்டரங்கினைச் சுற்றி பெருமளவு ஆயுத தளபாடங்களுடன் உசார் நிலையில் நிறுத்தப்பட்டிருந்ததோடு முன்னர் தாங்கள் அளித்த வாக்குறுதிக்கு புறம்பாகச் செயற்படவும் ஆரம்பித்தனர்.



மாலை நான்கு மணிக்கு தமிழீழத் தேசியக் கொடியை ஏற்ற ஆரம்பித்தபோது கெடுபிடிகளை ஆரம்பித்த படையினர் தொடர்ந் தும் பல்வேறு வழிகளில் மக்களை அச்சுறுத்தும் செயற்பாட்டிலேயே ஈடுபட்டிருந்தனர்.

ஆனால் இதற்கப்பால் பொது விளை யாட்டரங்கில் ஒன்று திரண்ட மக்கள் இராணுவ அச்சுறுத்தலையும் மீறி தமிழ்த் தேசிய எழுச்சி பிரகடன நிகழ்வில் ஈடுபட்டனர். உணர்வு பூர்வமான நிலையில் மக்கள் தமிழீழ எழுச்சி பிரகடனத்தின் போது எழுந்து நின்று கைகளை உயர்த்தி தாங்களும் உரத்த குரலில் முழங்கிய போது மக்களின் சுதந்திர உணர்வின் வெளிப் பாடு புரிந்தது.

இவ்வாறு தமிழ் மக்கள் உணர்வு பூர்வமாக எழுச்சி நிகழ்வில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததை வெறித்த முகத்துடன் பார்த்துக்கொண்டிருந்த இராணுவத்தினர் தாங்கள் அளித்த வாக்குறுதிகளை புறம்பாக உயிலங்குளம் சோதனைச் சாவடியை மாலை ஆறுமணியுடன் மூடிவிட்டனர். இதனால் தங்கள் தங்கள் சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாது மக்கள் மீண்டும் மன்னார் பொது விளையாட்டு மைதானத்திற்குத் திரும்பிச் சென்று இரவுப் பொழுது முழுவதனையும் வீதிகளிலும் பாடசாலைகளிலும் மைதானத்தி லும் கழித்தனர்.

சிறிலங்கா இராணுவம் ஒருபோதும் தமிழ்மக்களின் நிம்மதியான வாழ்வுக்கு வழி சமைக்கப் போவதில்லை என்பதற்கு நேற்றைய சம்ப வமும் ஒரு எடுத்துக்காட்டு.

இது இவ்வாறு இருக்க இன்று யாழ்ப் பாணத்தில் பொங்கு தமிழ் நடைபெற இருக்கின்றது. இந்நிகழ்வினை சிறப்பானமுறையில் நடாத்த யாழ் பல்கலைக்கழகம் செயற்படத் தொடங்கியதில் இருந்து இன்று வரை இராணுவத்தின் பல்வேறு கெடுபிடிகளுக்கு முகம் கொடுத்து வந்தனர். இருந்த போதும் பொங்கு தமிழை சிறப்பாக நடாத்து வதற்கான எல்லா ஏற்பாடு களும் சிறப் பாகவே செயற்பட்டுள்ளன.

ஒரு புறம் சிங்கள தலைமைகள் அதிகா ரத்தினைப் பிடிப்பதற்காக தென்னிலங்கையில் போராடிக்கொண்டிருக்க வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் தாங்கள் நிம்மதியாக தமது மண்ணில் சுதந்திரமாக வாழ்வதற்கு ஏது நிலையை ஏற்படுத்தித் தருமாறு சர்வ தேசத்திடம் வேண்டுகோள் விடுத்து வருகின்ற னர்.எனவே சர்வதேச சமூகமும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை விளங்கிக்கொண்டு தமிழ் மக்களின் நிம்மதியான வாழ்வுக்கு வழி சமைப்பார்கள் என எதிர்பார்த்தும் நிற்கின்றனர்.

---------- தமிழ்



# பயன்தராத சுனாமி நிவாரணங்கள்

சுனாமி நிவாரண நடவடிக்கைகள் ஓர் அசைவற்ற நிலையை அமைத்திருப்பது குறித்து ஐ.நாவின் விசேட பிரதிநிதியும் முன்னாள் அமெரிக்க சனாதிபதியுமான பிள்கிளிங்டன் தெரிவித்திருக்கிறார். அவர் இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட அனைவருக்குமான நிவாரண நடவடிக்கைகள் குறித்தே இவ்வாறு கூறியிருக்கிறார்.

அத்துடன் சுனாமி நிவாரணப் பொதுக்கட்டமைப்பு செயலிழந்துள்ளமை குறித்தும் அவர் கவலை வெளியிட்டிருக்கிறார்.

இப்பொதுக்கட்டமைப்பு உருவாகுவதற்கு இனவாதிகள் காட்டிய எதிர்ப்பு பின்னர் அதனை முடங்குவதற்கு அவர்களிடையே ஏற்பட்டபோட்டி, இறுதியில் நீதிமன்றத்தீர்ப்பினால் அவர்களுக்கு ஏற்பட்ட புளகாங்கிதம் என்பவற்றை சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுடன் இணைந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவத் தயார் நிலையிலுள்ள மனிதாபிமானம் மிக்க மக்களும் பார்த்துக்கொண்டிருக்க வேண்டியநிலையே ஏற்பட்டது. ஏனெனில் அது சிறிலங்காவின் நீதி அமைப்புக்கு உட்பட்ட விவகாரமாகிவிட்டதால் அதில் தலையிட எவருக்கும் முடியாமல் போய்விட்டது.


ஆனால் இதனால் பாதிக்கப்பட்டு இன்னமும் அதாவது ஒன்பது மாதங்கள் தாண்டிவிட்ட நிலையிலும் துன்பமுற்றுக் கொண்டிருக்கும் மக்களையிட்டு இனவாதிகளுக்கு கவலையில்லை. துரித நடவடிக்கைகளை மேற்கொண்டால் கூட இவர்கள் சந்தித்த இழப்புகளை ஈடுசெய்ய பல ஆண்டுகள் பிடிக்கும் என்ற எதிர்வு கூரல்களின் மத்தியில் இந்த ஒன்பது மாதங்கள் பெரிய பயனெதையும் ஏற்படுத்தாது கழிந்திருக்கின்றன. இன்னமும் எத்தனை மாதங்கள் எடுக்கப் போகின்றனவோ என்பதும் கேள்விக்குரிய ஒன்றாகவே இருக்கின்றது.

அதுவும் இவ்வாறான இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் பெரும் உளத்தாக்கத்துக்கு உட்பட்டு அதிலிருந்து முற்றாக நீங்கி விடாத நிலையில் அவர்கள் இவ்வாறாகத் தொடர்ந்தும் அதே நிலையிலிருப்பது எவ்வளவு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை இவர்கள் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை.

அதேவேளை அதனைப்புரிந்து கொள்ளக்கூடிய மனோநிலையிலோ அல்லது அதற்காகக் கவலைப்படும் நிலையிலோ அவர்கள் இல்லை. இப்போது அவர்களின் குறிமுழுவதும் சனாதிபதிக் கதிரை மட்டுமே.

அவர்கள் பொதுக்கட்டமைப்பை விடாப்பிடியாக எதிர்ப்பதற்கும் அதனைக் கைவிடவேண்டும் என வலியுறுத்துவதற்கும் சனாதிபதிக்கதிரை மீது அவர்களுக்கிருக்கும் பேராசையே காரணமாகும்.

மகிந்த ராஜபக்ஷவை ஆட்சி பீடம் ஏற்றுவது அவர்களின் ஆவல்அல்ல. கூடநின்று குழிபறித்து அவர்களைத் தள்ளி வீழ்த்திவிட்டு தாம் அக்கதிரையில் ஏறிக்கொள்வதே அவர்களின் நோக்கமாகும். ஆனால் அதற்கும் அவர்களுக்குள் போட்டி மட்டுமல்ல பாதிக்கப்பட்ட மக்களின் வாக்குகளையே அவர்கள் கோருகின்றனர்.



அதேவேளை பொதுக்கட்டமைப்பு போன்ற நிவாரண நடவடிக்கைகளை கண்காணிக்கும் அமைப்பு அல்லது கையாளும் அமைப்பு ஒன்று ஏன் தேவை என்பதும் இப்பொழுது வெளிப்பட்டிருக்கிறது. உண்மையில் இவ்வாறான பெரும் தொகை நிதி தொடர்பில் தமிழ் மக்கள் கொண்டிருந்த கவலை/அக்கறை நியாயமானது என்பது நிரூபணமாகியிருக்கின்றது.

அதாவது அண்மையில் அரசாங்க கணக்குத் தணிக்கைத்துறை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள இடைக் காலஅறிக்கை தமிழ் மக்கள் சர்வதேசத்திற்கு இது தொடர்பாக வலியுறுத்திய விடயங்கள் உண்மையானவை என்பதை நிரூபித்திருக்கிறது.

அதாவது சர்வதேச ரீதியாக வழங்கப்பட்ட நிதியில் 116.88 கோடி அமெரிக்க டொலர் 13.5 வீதம்மட்டுமே பயன்படுத்தப்பட்டிருப்பதாகவும் பொருட்கள் திருடப்பட்டமை விமான நிலையத்தில் வந்திறங்கிய பொருட்கள் தொடர்பில் ஒழுங்கீனம், மோசடி, அரசசார்பற்ற நிறுவனங்களை புனரமைப்புப்பணிகள் செய்ய அனுமதிப்பதில் காட்டப்பட்ட அசமந்தம் என்பன அதில் வெளியிடப்பட்டுள்ளன.

இவ்வாறானதோர் நிலை சுனாமி புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு ஏற்படும் எனப்பட்டறிவின் மூலம் தமிழ்மக்கள் உணர்ந்துகொண்டதாலேயே இவ்வாறான அமைப்பை வலியுறுத்தினர்.

ஆனால் தமிழ் மக்களுக்கு எதுவும் கிடைத்துவிடக்கூடாது என்ற நிலைப்பாட்டிலிருக்கும் இனவாத அமைப்புகள் இப்பொழுது அதில் வெற்றி கொண்டுவிட்டதாக மகிழ்ச்சி கொண்டிருக்கின்றனர்.

ஆனால் இதனால் பாதிக்கப்பட்டிருப்பது சுனாமியின் தாக்கத்துக்கு உள்ளாகியிருக்கின்ற அனைவருமே. ஆனால் ஒன்று இவ்வாறான பெருந்தொகை நிதியைக் கண்காணிக்க சரியான அமைப்பொன்று இல்லாது நிதியை வழங்குவது பாதிக்கப்பட்ட மக்களுடைய நிலையை மாற்றிவிடாது என்பதுடன் சிறிலங்காவின் ஆட்சி அதிகாரத்திலுள்ள சிலருக்கே அது பெரும் நன்மை தரும் விடயமாக இருக்கும் என்பது தற்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**வேலவன்**

## நேர்நோக்கு

ஒக்ஸ்.ீ.போட் பல்கலைக்கழகத்தில் படித்து விட்டு திரும்பி வந்த வேளை எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க ஒரு முன்னேற்றமான அரசியல் கருத்தை வெளியிட்டார். " எங்கள் நாட்டுக்கு கூட்டாட்சி அமைப்பே பொருத்தமானது" என்பதே அது.

அவர் சிறிலங்கா சுதந்திரக்கட்சியைத் தொடங்கித் தேர்தலில் போட்டியிட்டு வென்று, பிரதமராயிருந்த காலத்தில், தந்தை செல்வா தலைமையில் தமிழரசுக்கட்சி கோரிய கூட்டாட்சி முறையை நடைமுறைப்படுத்த மறுத்துவிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இந்த காலத்திலும் தமிழரசுக்கட்சி முன்வைத்த கூட்டாட்சிக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

''தமிழர்களின் கோரிக்கைகள் நியாயமானவை. அவற்றைப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்று சில வேளைகளில் சொல்லிக்கொண்ட சனாதிபதி சந்திரிகா அம்மையார், பதினொரு ஆண்டுகள் சகல அதிகாரங்களுடன் பதவியில் இருந்தும் கூட, அப்பா பண்டாரநாயக்க அன்று சொன்ன அரசியல் முறையை ஆராய்ந்து இரு இனத்திலும் பல்லாயிரம் மக்களைக் பலி கொண்ட தமிழரின் விடுதலைப்போருக்கு முடிவுகாண- நடைமுறைப்படுத்த முயன்றாரில்லை.

இன்று பதவிக்காலம் முடிவடையும் தறுவாயில். " கூட்டாட்சியமைப்புத்தான் இனப்பிரச்சினையைத் தீர்க்க ஒரே வழி" என்று, இங்கல்ல, அமெரிக்கா நியூயோர்க்கில் ஆசிய சமூகத்தவர் முன்னிலையிலும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையிலும் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார். " நான் பத்தாண்டுகளுக்கு முன்பே பயங்கரவாதத்தை ஒழிக்கும் வகையில் கூட்டாட்சிமுறையை முன்வைத்தேன்" என்று கூறியதாக 18.9.2005 சன்டே லீடர் இதழ் செய்தி வெளியிட்டது.

இது உண்மையா? யாருக்காவது நினைவிருக்கிறதா? கூட்டாட்சித் திட்டத்தை என்றாவது இவர் முன்மொழிந்தாரா? போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அபிவிருத்தித் திட்டங்களை விரிவாக்கியிருப்பதாகவும் அங்கே கூறியுள்ளார், அம்மையார். வடகிழக்கில் என்ன அபிவிருத்தி நடக்கிறது?

**இது உண்மையா? யாருக்காவது நினைவிருக்கிறதா? கூட்டாட்சித் திட்டத்தை என்றாவது இவர் முன்மொழிந்தாரா? போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அபிவிருத்தித் திட்டங்களை விரிவாக்கியிருப்பதாகவும் அங்கே கூறியுள்ளார், அம்மையார். வடகிழக்கில் என்ன அபிவிருத்தி நடக்கிறது?**

ஏழை விவசாயிகளின் வயல்நிலங்களை ஆயுதப்படைகள் அடைத்து வைத்திருக்கிறார்கள். எங்களுடைய வீடுகளில் அவர்கள் குடியிருக்கிறார்கள். நாங்கள் அகதி முகாம்



# தீர்வுத் திட்டம் என்றும் அரசிடமிருந்து வரப்போவதில்லை

களில். எங்களுடைய கோவில் வளவுகளில் புத்தர் சிலைகளை வைப்பதை அபிவிருத்தி என்றாரோ?

புலிகள் வருகையையும் நிதி சேகரிப்பதையும் தடை செய்யுங்கள் என்றும் சொன்ன அதேவேளை சிறிலங்காவில் ஒரு பிரிவினர் கூட்டாட்சி முறையை விரும்புகின்றனர் என்றும் கூறியிருக்கிறார்.

திரும்பி வந்ததும் கூட்டாட்சி முறையை நடைமுறைப்படுத்த எண்ணியிருக்கும் சனாதிபதி சந்திரிகா அம்மையார் தடைபற்றியும் பயங்கரவாதம் பற்றியும் அங்கே பேசவேண்டிய அவசியம் என்ன?

அப்படியென்றால் நவம்பர் 22 இல் ஓய்வு பெறுவதற்கு முன் கூட்டாட்சி அமைப்பை உருவாக்கிவிடுவாரா?

சமாதான செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபாலவும் சமாதானத்துக்கான நடவடிக்கைகளை விடுத்து பயங்கரவாதம் பேசுகிறார். இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் பொறுப்புடையவர் நேரே விடுதலைப் புலிகளுடன் பேசுவதை விட்டு சர்வதேச சமூகத்திடம் உதவி கேட்கிறார்.

சில சிங்கள அரசியல்வாதிகளும் கூட்டாட்சி அமைப்பு மூலம் தமிழர் போராட்டத்துக்கு முடிவு காணலாம் என்று சமீப காலமாக சொல்லிவருகிறார்கள். சில அரசியல் விஞ்ஞானிகளும் சில இடதுசாரித் தலைவர்களும் கூட்டாட்சி சார்பாக எழுதியும் பேசியும் வருகிறார்கள்.

கூட்டாட்சி முறையைக் கோரி 1956 இல் இருந்து குரலெழுப்பி வந்த தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் இன்றும் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கிறார்கள். அருகில் இருக்கும் இந்தியா என்ற பெரிய நாட்டில் கூட்டாட்சி அமைப்பு உள்ளது. அதைப்போல் இங்கேயும் ஏற்படுத்திக்கொள்ளலாம் என்று ஒரு மூத்த தலைவர் சமீபத்தில் கூறியதாக செய்தி வெளிவந்தது.

விடுதலைப்புலிகள் அரசியல்துறை சார்ந்தவர்களும் வெளிநாடுகளுக்குச் சென்று கூட்டாட்சி முறைபற்றிப் படித்துக்கொண்டு வந்தனர்.

சுவிற்சலாத்திலும் கனடாவிலும் மிகச்சிறந்த கூட்டாட்சி அமைப்பு உள்ளது என்று அறிய முடிகிறது.

இந்தியாவின் கூட்டாட்சி முறையில் பல குறைபாடுகள் உள்ளன. எடுத்துக்காட்டாக தமிழ்நாடு ஒரு மாநில அரசு. அதன் மீது நடுவன் அரசின் ஆதிக்கம் உண்டு. தேசிய இராணுவத்தின் ஒரு பிரிவு சென்னையில் நிலைகொண்டுள்ளது. தமிழ்நாட்டை சூழ்ந்த கடற் பிராந்தியத்தில் தேசிய கடற்படை கடமையாற்றுகிறது. மாநில அரசைக் கலைக்கவும் ஆளுநரை மாற்றவும் நடுவன் அரசுக்கு அதிகாரமுண்டு. ஒரு மருத்துவக் கல்லூரியை நிறுவுவதற்கு நடுவன் அரசின் அனுமதி பெறவேண்டும். இவை போன்ற கட்டுப்பாடுகள் கொண்ட கூட்டாட்சியில் எங்களுக்கு உடன்பாடு எப்படியிருக்க முடியும்.

கூட்டாட்சியை ஆதரிக்கும் எவராவது ஒரு பொதுக்கட்டமைப்பு மூலமாகவோ நாடாளுமன்ற உறுப்பினர் ஊடாகவோ ஏற்றதொரு கூட்டாட்சிக் கோரிக்கையை முன்வைத்தார்களா?

தமிழர்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் ஒரு தீர்வை ஏற்கத் தயார் என்று சொல்லிவிட்டால் போதுமா? இதோ இதுதான் எங்கள் திட்டம். என்று ஒரு வரைவை அனுப்பி அதனை ஏற்றுக்கொள்ளச் செய்யும் வரை நாங்கள் ஒரே குரலில் போராட வேண்டும்.

தீர்வுத்திட்டம் அரசிடமிருந்து வரப் போவதில்லை. நாங்கள்தான் முன்வைக்க வேண்டும். அவர்கள் கேட்பதைக் கொடு அல்லது பிரிந்து போக விடு என்று சர்வதேச சமூகம் வற்புறுத்தவும் வாய்ப்பாக இருக்கும்.

**எஸ்.பி.கிருஷ்ணன்**

# இலங்கை சனாதிபதித் தேர்தலும் தமிழ் மக்களின் உணர்வலைகளும்

எதிர்வரும் நவம்பர் மாதம் 17 ஆம் திகதி சிறிலங்காவினுடைய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஐந்தாவது சனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நடைபெறும் என தேர்தல் திணைக்களம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இந்நிலையில் இரண்டு பிரதான கட்சிகளை சேர்ந்தவர்களான ரணில் விக்கிரமசிங்க, மகிந்த ராஜபக்ஷ இருவரிடையேயும் கடும் போட்டி நிலவுகிறது. இரண்டு சிங்களத் தலைவர்களும் அதிகாரத்தினை பிடித்துக்கொள்வதில் முனைப்புக் காட்டி வருகின்றனரே தவிர தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் இவர்கள் எவரும் எந்தவிதமான ஆக்கபூர்வமான கருத்துக்களையும் இதுவரையும் முன்வைக்கவில்லை. இனியும் முன் வைப்பார்களா என்றால் இல்லை என்றே கூற வேண்டும். ஏனெனில் கடந்த கால அனுபவங்கள்.

இத்தேர்தலில் ரணில் வெற்றிபெற்றால் என்ன, மகிந்த வெற்றிபெற்றால் என்ன எமது பிரச்சினை தொடர்பில் அவர்கள் சிங்கள இனவாதத்தினையும், பௌத்தத்தினையும் எதிர்த்து நியாயமான ஒரு தீர்வுக்கு வரப்போவதில்லை. இதுவும் கடந்த கால அனுபவத்தின் மூலம் தமிழ் மக்கள் பெற்றது.

வெறுமனே யுத்தத்தை நிறுத்தியும், பொருளாதாரத் தடையை தளர்த்தியும் ஒரு சூழலை ஏற்படுத்துவதன் மூலம் பிரச்சினைகள் தீர்ந்து விடப் போவதில்லை. தமிழீழத் தேசியத் தலைவர் கடந்த மாவீரர் நாள் உரையில் கூறியது போல, ஒரு அரசியல் வெறுமையை ஏற்படுத்தி காலத்தை கடத்தி தமிழ் மக்களின் போராட்ட உணர்வுகளை மழுங்கடிப்புச் செய்வதில் சிங்கள தேசம் நன்றாகவே செயற்படுகிறது.

இதில் ரணில் ஆபத்தானவர். அரசியல் வெறுமையை திட்டமிட்டு நாகரிகமான முறையில் ஏற்படுத்துவதில் கெட்டிக்காரரும் கூட. இந்த அரசியல் வெறுமை என்பது தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் ஆபத்தான காலம். எனவே ரணில் விக்கிரமசிங்க விடயத்தில் தமிழ் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

சனாதிபதி வேட்பாளர்கள் தொடர்பில் தமக்கு நம்பிக்கை இல்லை எனவும் இத்தேர்தல் குறித்து தாம் அலட்டிக்கொள்ளப் போவதில்லை எனவும் தமிழீழ விடுதலைப்புலிகள் அறிவித்து விட்டனர். இந்நிலையில்தான் தமிழ் மக்களும் தங்களுடைய நிலைப்பாட்டில் தெளிவாக இருக்க வேண்டும். இவர்கள் வழங்குகின்ற வாக்குறுதிகள் எல்லாம் நவம்பர் 17 ஆம் திகதி வரைக்குமே. அதன் பின் அவற்றை அவர்கள் மறந்து விடுவார்கள். இந்நிலையில்தான் சனாதிபதித் தேர்தல் குறித்து தமிழ் மக்களின் நிலைப்பாடு என்ன என்பதனை அறிந்துகொள்ளும் முகமாக சமூகத்தில் பல்வேறு தரப்பினரை சந்தித்தோம். அவர்களது கருத்துக்கள் வருமாறு,

## நாங்கள் வாக்களிக்கத் தேவையில்லை...!



* இ.ஜெகதீஸ்வரன்,
தபாலக ஊழியர்.

இந்த சனாதிபதித் தேர்தலில் நாங்கள் யாருக்கு வாக்களித்தாலும் எங்களுக்கு ஒரு விமோசனமும் கிடையாது. ஆகவே அதை பகிஸ்கரிப்பதுதான் நல்லது. ஒரு தபால் ஊழியன் என்ற வகையில் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து நான் பல்வேறு பிரதேசங்களுக்குச் சென்று வாறனான். இதனால் சனத்தோட நெருங்கிப்பழகிற வாய்ப்புகள் நிறைய இருக்கிறது. பெரும்பாலும் மக்களுடைய நிலைப்பாடுகள் எல்லாம் இந்தத் தேர்தலில் வாக்களிப்பதில்லை என்பதுதான். எங்களுக்கு ரணில் வந்தால் என்ன, மகிந்த வந்தால் என்ன எங்கட பிரச்சினைகளை தீர்க்கப்போவதில்லை பிறகேன் நாங்கள் வாக்களிக்கவேண்டும்.

## எங்கட வாக்குகளை வாங்கி அவர்கள் சிம்மாசனம் ஏறப்பாக்கினம்



* சோமாஸ்கந்த குருக்கள்,
பொன்னாலை வரதராஜாப் பெருமாள் ஆலயம்.

இதுவரை காலமும் வாக்களித்து என்ன நடந்தது? ஒன்றுமே நடக்கவில்லை. எனவே இனி ஏதாவது நடக்கும் என்று எப்படி நம்புவது? எங்களுக்கு அதைச் செய்யிறன் இதைச் செய்யிறன் என்று எங்கட வாக்குகளை வேண்டிக்கொண்டு அவையில் சிம்மாசனம் ஏறிவிடுவினம் பிறகென்ன ஆடம்பரமான சொகுசு வாழ்க்கையை அவர்கள் அனுபவித்துக்கொண்டு இருக்க, நாங்கள் இப்படியே ஆக்கிரமிப்புக்குள் கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டு வாழவேண்டியது மிச்சம். எனவே தேர்தலில் வாக்களிக்கச் சென்று நேரத்தை வீணடிப்பதை விட்டிட்டு எங்கட °வலையை பார்த்தால் நன்மையாய் இருக்கும்.

## எந்தச் சிங்கள அரசியல்வாதியும் பிரச்சினையைத் தீர்க்கப் போவதில்லை

* சிறிதரன்,
பண்டத்தரிப்பு, யாழ்ப்பாணம்.

எங்கட பிரச்சினைகளை எந்தச் சிங்கள அரசியல்வாதிகளும் தீர்க்கப் போவதில்லை. கடந்த கால அனுபவங்கள் எங்களுக்கு அதைத்தான் வெளிப்படுத்துகின்றன. இதனால் நாங்கள் எங்கட தலைவரின்ரை வழியில் போறதுதான் நல்லதாக இருக்கும். என்னைப் பொறுத்தவரை தமிழீழ விடுதலைப்புலிகள் எவ்வழியோ அவ்வழி நாங்கள் செல்லத் தயார். ரணில் பிரச்சினையை தீர்ப்பார், மகிந்த பிரச்சினையை தீர்ப்பார் என்று நம்பிக்கொண்டிருந்தால் காலம்தான் அநியாயமாக வீண் போகும்.

## வாக்களிப்பிலிருந்து விலகிக்கொள்வோம்



* குலேந்திரன்,
செயலாளர் கரைச்சிப் பிரதேசசபை,
கிளிநொச்சி.

இவ்வளவு காலமும் நடந்த தேர்தல்களை விட இம்முறை நடக்கவிருக்கும் தேர்தலில் தமிழ் மக்கள் ஒரு வித்தியாசமான நடைமுறையை கடைப்பிடித்தால் அது தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு நல்லதாக இருக்கும். எனவே தமிழ் தேசியத்தை விரும்புகின்ற தமிழ் மக்களாகிய நாங்கள் வாக்களிப்பதனை தவிர்த்துக் கொள்வது நன்மையே. ஏனென்றால் நாங்கள் யாராவது ஒருவருக்கு வாக்களிப்பதன் மூலம் சிங்களத் தலைமையை நாங்கள் ஏற்றுக்கொள்வதாக அவர்கள் நினைக்கக் கூடும். எனவே வடக்கு கிழக்கில் வாழ்கின்ற அனைத்து தமிழ் மக்களும் இந்தச் சனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதனை முற்றாகத் தவிர்த்து எங்கட எதிர்ப்பினைக் காட்டவேண்டும்.

## எமது எதிர்ப்பைக் காட்டுவதற்கு நாம் வாக்களிக்கக் கூடாது!



* ஆ.சூசைநாதன்,
திருமுறிகண்டி இந்து வித்தியாலய அதிபர்.

சனாதிபதியே எங்களுக்கு தேவையில்லாத ஒன்று. அதுக்கொரு தேர்தல் அதுக்கு நாங்கள் வாக்களிக்கவேண்டும் என்பதெல்லாம் ஏதோ விளங்காத மனிதர்கள் செய்யிற வேலையெண்டுதான் நினைக்கிறன். ஏனென்றால் வாக்களிப்பதால் எந்த இலாபமும் இல்லை. சரி யாருக்கெண்டாலும் ஒருவருக்கு வாக்களிப்பம் என்றால் அதுக்குக் கூட தமிழ் மக்களுக்கு மனநிலை இல்லை. சும்மா பகிடிக்குக் கூட சிங்களத் தலைவர்களுக்கு வாக்களிக்கப் போறம் எண்டதை இப்போது எங்களால ஏற்றுக் கொள்ள முடியாது. எனவே வாக்களிப்பதில் இருந்து ஒதுங்கி எங்கட எதிர்ப்பினை தெரிவிக்கிறது சிறப்பாக இருக்கும் என்று நான் நினைக்கிறன்.

## எமது வாக்குகளைப் பெற்று எமது காலையே வாருபவர்கள்



* தனபாலசிங்கம்,
தருமபுரம்.

சிறிலங்காவின் அதிகாரத்திற்கு வருகின்ற எவரும் தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்கப்போவதில்லை. அப்படியிருக்க நாங்கள் ஏன் வாக்களிக்க வேண்டும்? தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வினை பெற்றுக்கொள்வதற்கு போராட்டம்தான் ஒரே வழியே தவிர வேறு எந்த மார்க்கமும் இல்லை. எங்கட அப்பா, அம்மா, பாட்டன், முப்பாட்டன் என எல்லோரும் வாக்களித்து வாக்களித்துத்தான் இப்போது இருக்கினம். இவர்கள் எல்லாம் தென்னிலங்கை தலைமைகளுக்கு வாக்களித்து என்ன பயனைக் கண்டவையள். இப்படியிருக்க நாங்களும் இவர்களுக்கு வாக்களிப்பது என்பது எங்களால ஏற்றுக்கொள்ள முடியாது இருக்கிறது. எங்கட வாக்குகளை பெற்றுக்கொள்ளும் வரைக்கும் எங்கட காலுக்குக் கீழே இருப்பவர்கள் வாக்குகளை பெற்ற பின்பு காலை வாரி விட்டுட்டு போறவைதான் இவர்கள். எனவே தமிழ் மக்களாகிய நாங்கள் வாக்களிப்பில் இருந்து முற்று முழுதாக விலகிக்கொள்வது நல்லது.

## வாக்களித்து ஏமாந்து போனோம்

* யோகராஜா,
வவுனியா, பண்டாரிக்குளம்.

வாக்களித்து வாக்களித்தே நாங்கள் ஏமாந்து போனம். எனவே இந்தத் தேர்தலிலும் நாங்கள் வாக்களித்தால் என்ன? அளிக்காவிட்டால் என்ன? தமிழ் மக்களுக்கு எவ்வித பயனும் இல்லை. சிங்களத் தலைவர்கள் எங்கட பிரச்சினையை தீர்க்கவேண்டும் என்று நினைத்திருந்தால் அதை எப்பவோ செய்திருப்பார்கள். ஆனால் இனி அவர்கள் எங்கட பிரச்சினையை தீர்க்கப்போவதில்லை. எனவே எங்கட பிரச்சினையை தீர்க்காதவர்களுக்கு நாங்கள் ஏன் வாக்களிக்க வேண்டும்?

மு.தமிழ்ச்செல்வன்





# பயணத்தடை: சமாதானத்துக்கான தடைக்கல்

பு.சத்தியமூர்த்தி

ஈழத்தமிழர்களின் தேசிய இன விடுதலைப் போராட்டத்தின் மீது இராஜ தந்திரக் கல்லொன்று எறியப்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பிரதிநிதிகள் எவரும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்குச் செல்வதற்கு தடைவிதிக்கும் அறிவிப்பொன்று மூன்று தினங்களுக்கு முன்னர் வெளியாகியுள்ளது. இந்த அறிவிப்பானது அமைதிவழியில் தனக்கான தீர்வைப்பெற முனையும் தமிழினத்துக்குச் சலிப்பையும், ஆற்றாமையையும் அதே நேரத்தில் ஒரு வகையான விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

ஏனெனில் ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த அறிவிப்பின் விளைவென்பது, சிறிலங்கா அரசும் சிங்களப் பேரினவாதமும் எதை விரும்பினவோ, அதை அவர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதாக அமையக்கூடியதாகும்.

வெளிநாடுகளில் நடைபெறும் அமைதிப் பேச்சுக்களையும், அவற்றுக்கான தமிழர் தரப்புப் பிரதிநிதிகளின் வெளிநாட்டுப் பயணங்களையும் தென்னிலங்கை ஒருபோதுமே விரும்பியிருக்கவில்லை. இந்தப் பயணங்கள் மூலம் புலிகள் சர்வதேசப் பிரபல்யமும் அங்கீகாரமும் பெற்றுவிடுவார்கள் என்று தென்னிலங்கை அஞ்சுகிறது. அத்தோடு இதுவரை காலமும் தம்மால் மறைக்கப்பட்டிருந்த தமிழர் தரப்பின் குரலும் நியாயங்களும் சர்வதேச இராஜதந்திர சமூகத்தின் முன்பாக வைக்கப்படுவதற்கு இருந்த சாத்தியமின்மைகள் அற்றுப் போய்க்கொண்டிருப்பதை அவர்கள் விரும்பவில்லை.

இதனாலேயே அமைதிப் பேச்சுக்களை உள்நாட்டிலேயே நடத்தவேண்டுமென்ற கோசங்கள் எழுப்பப்பட்டன. முதற் சுற்றுப் பேச்சுக்கள் நடைபெற்ற தாய்லாந்தில் பின்னர் பேச்சுக்கள் நடைபெற முடியாமற்போனதற்கும்; புலிகளின் அரசியல் ஆலோசகர் மாலைதீவூடாக வன்னிக்குப் பயணம் செய்த பயணவழி பின்னர் புலிகளுக்கு மறுக்கப்பட்டதற்கும் இவ்வாறான விருப்பமின்மைகளும் காழ்ப்புணர்வுகளுமே காரணமாகும்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தற்போதைய நடவடிக்கையானது ஒரு இடைக்கால ஏற்பாடுதான் என்றாலும், அதனுடைய அடுத்தகட்ட நடவடிக்கை எவ்வாறு அமையப்போகிறது? என்பதற்கான ஒரு குறிகாட்டியாகவும் இது இருக்கக்கூடும். எவ்வாறாயினும் அது தான் விரும்பும் ஏதோ ஒரு செல்வழியில் புலிகளைக் கொண்டுசெல்ல விரும்புகிறது. அதற்காகச் சிலபல காரணங்களை முன்வைக்கிறது. அந்தக் காரணங்களை ஆழமாகப் பகுத்துப்பார்க்கும் ஒருவருக்கு அவற்றின் கீழ் வேறு நிகழ்ச்சி நிரல்கள் இருப்பதைக் கண்டுகொள்வது சிரமமானதாக இருக்காது.

எவ்வாறாயினும் இந்த நடவடிக்கை, தென்னிலங்கையை மேலும் உசுப்பிவிடக்கூடியதாகும். ஏற்கனவே பேரினவாதப் பேய் சன்னதமும் விஸ்வரூபமும் கொண்டு ஆட்சிபீடத்தையே தனது கட்டுக்குள் கொண்டுவருந்தறுவாயிலிருக்கும் சூழலில் இந்த அறிவிப்பு வந்திருக்கிறது. வெளிப்படையான பேரினவாதிகள் மட்டுமன்றி, வெளிவெளியாகப் பேரினவாதம் பேசாத பிரதான தலைவர்கள் கூட இவ்வறிப்பால் மகிழ்ந்துதான் போயிருப்பார்கள்.

யாரும் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் புலிகளின் ஊடாகவே தமிழ் மக்களது அபிலாசைகளும், நிலைப்பாடுகளும் சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் வெளிப்படுத்தப்படுகின்றன. பிரதிநிதித்துவப் படுத்தப்படுகின்றன. அவ்வாறான நிலையில் புலிகளின் பிரசன்னமோ, பயணமோ 25 உறுப்பு நாடுகளைக்கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்தில் தடுக்கப்படுவதென்பது இலங்கை இனப்பிரச்சினையின் ஒரு தரப்பினது- அதுவும் பாதிக்கப்படும் தரப்பினது-குரலை உலகின் முன்னிலையில் நசுக்கிவிடுவதாகும். மறுவளமாக இது ஆதிக்கம் செலுத்தும் தரப்பினது செயற்பாடுகளுக்கான அங்கீகாரமும் மறைமுகமான தூண்டுதலுமாகும்.

இவ்வாறானதொரு துர்ப்பேறான நிலைமை அரசியல் பாதையின் மீதான தமிழ் மக்களின் நம்பிக்கையை பற்றுறுதியினை எதிர்வளமாக்கும் ஆரோக்கியமற்ற சூழலை உருவாக்கலாம்.

**யாரும் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் புலிகளின் ஊடாகவே தமிழ் மக்களது அபிலாசைகளும், நிலைப்பாடுகளும் சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் வெளிப்படுத்தப்படுகின்றன. பிரதிநிதித்துவப் படுத்தப்படுகின்றன. அவ்வாறான நிலையில் புலிகளின் பிரசன்னமோ, பயணமோ 25 உறுப்பு நாடுகளைக்கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்தில் தடுக்கப்படுவதென்பது இலங்கை இனப்பிரச்சினையின் ஒரு தரப்பினது–அதுவும் பாதிக்கப்படும் தரப்பினது–குரலை உலகின் முன்னிலையில் நசுக்கிவிடுவதாகும். மறுவளமாக இது ஆதிக்கம் செலுத்தும் தரப்பினது செயற்பாடுகளுக்கான அங்கீகாரமும் மறைமுகமான தூண்டுதலுமாகும்.**

இதிலே இன்னுமொரு விடயத்தையும் நோக்குதல் வேண்டும். எவ்வாறானதொரு காலகட்டத்திலே ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்தப் பயணத்தடை அறிவிப்பு வந்துள்ளது என்பதும் முக்கியமானதாகும். வடக்கு கிழக்குப் பகுதிகளில் மக்களின் அரசியல் அபிலாசையானது திரட்சியான முறையில் சனநாயகப் பாரம்பரியங்களுக்கு உள்ளடங்கியதாக நாகரிகமான வகையில் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது.

முதலில் வவுனியா நகரிலே தமது பிரதிநிதிகள் மூலமாகவும்; பின்னர் ஒவ்வொரு மாவட்டங்களிலும் தமிழ் பேசும் மக்கள் தமது அரசியல், சமூக, பொருண்மிய அபிலாசைகளை சர்வதேச சமூகத்தை நோக்கி வெளியிட்டு வருகின்றனர். நேற்று முன்தினம் மன்னாரிலும் இன்று யாழ்ப்பாணத்திலும் இந்த வகையிலான பிரகடனங்களின் ஆகப்பிந்திய நிகழ்வுகள் இடம் பெற்றுள்ளன.

இவ்வாறு தமிழ்பேசும் மக்கள் தமது பிரதிநிதிகளாகப் புலிகளை முன்னிறுத்தியும், சர்வதேசம் தமிழ்பேசும் மக்களின் நிம்மதியான வாழ்வுக்கு வழிசமைக்க வேண்டுமெனவும் வலியுறுத்திவருகையில்; முற்றிலும் எதிரான நடவடிக்கை ஒன்றை ஐரோப்பிய ஒன்றியம் எடுத்திருப்பது ஒட்டுமொத்தத் தமிழ் பேசும் மக்களின் உணர்வுகளையுமே அலட்சியம் செய்வது போலாகும். இவ்வாறானதொரு புரிதல் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் ஏற்படுவதானது ஏற்கனவே சிறிலங்காவின் அரசியல் வாதிகள், பேரினவாதிகளின் போக்கால் அரசியல் வழிமுறைமீதான நம்பிக்கையை அறவே இழந்துபோய் இருப்பவர்களின் இறுதி நம்பிக்கையான சர்வதேச சமூகம் மீதான எதிர்பார்ப்பும் அற்றுப்போய் விடக் கூடிய அவலத்தைத் தோற்றுவிக்கக்கூடும்.

இனிமேல் எங்களுக்கான பாதை என்ன? என்று தமிழ் பேசும் மக்கள் விரக்தியடையவும்; எங்கள் குரல் உலகின் செவியேறவே மாட்டாதா? என்று விசனம் கொள்ளவும் நேரிடலாம். அவ்வாறானதொரு நிலைமை தமிழ் பேசும் மக்களை எங்கே கொண்டுசெல்லும் என்பது இன்றைய அரசியல் கள நிலவரத்தில் மிகவும் முக்கியமானதாகும்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தை தடைசெய்வது பற்றிய விவகாரத்தில் கருத்துத் தெரிவித்த முன்னாள் அமெரிக்கத்தூதர் இவ்வாறு செய்வது அரசியல் நடவடிக்கைகளிலிருந்து அவர்களைத் தூரமாக்கிவிடுவதோடு, அந்த நடவடிக்கைகளுக்காக அவர்களுடன் தொடர்புகொள்வதையும் தடுக்கிறது. எனவே அவர்கள் மீதான தடை நீக்கப்படல் வேண்டும் - என குறிப்பிட்டதையும்;

விடுதலைப்புலிகள் இயக்கத்தைத் தடைசெய்து விட்டதனால் ஏற்பட்டுள்ள சட்ட நிர்ப்பந்தங்களால் இந்திய அரசுக்கு இலங்கையின் சமாதான நடவடிக்கைகளில் நேரடிப்பங்கெதனையும் வகிக்க முடியாது. தவிர்க்கமுடியாத படிக்குத் தள்ளிநிற்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதையும்;

இந்த விடயத்தில் இந்த நேரத்தில் ஐரோப்பிய ஒன்றியம் கருத்தில் எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

ஏனெனில், தற்போது தற்காலிகப் பயணத் தடையை விதித்துவிட்டு அடுத்த கட்டம் குறித்து ஆராய்வதாக அறிவித்திருக்கும் ஐரோப்பிய ஒன்றியம், அரசுகளிடையே வழமையாகக் கடைப் பிடிக்கப்படும் இராஜதந்திர சம்பிரதாயத்தை அங்கீகரிக்கப்பட்ட அரசுக்கு ஆதரவாகச் செயற்படுதல் என்ற வழமையை இந்த விடயத்திலும் தூக்கிப்பிடிக்குமாக இருந்தால் இலங்கைத்தீவின் எதிர்கால நலனுக்கு அது ஆரோக்கியமானதாக அமையாது என்பதை இவ்விடத்தில் சுட்டிக்காட்டலாம்.

தமிழ் பேசும் மக்கள் இராஜதந்திரப் பாதையை, அமைதி முயற்சிகளை நம்ப வேண்டுமானால், அந்தப் பாதையில் பயணிக்க வேண்டுமானால் அந்தத்திசையிலான அவர்களது நகர்வுகள் ஏற்கப்படவும், மதிக்கப்படவும் வேண்டும். அவ்வாறில்லாவிடில் விழலுக்கு நீரிறைக்க அவர்கள் தயாரில்லை என்பதை ஐரோப்பிய ஒன்றியம் உணரவேண்டும்.

# சிங்களத்தின் வாசலில் சீறிய புலி

க.பிரேசு

***பக்கத்திலே வலம், இடமாக 25 –30 மீற்றர் இடைவெளிக்குள். எதிரியின் காவலரண், எதிரியோ உற்சாகமடைந்துவிட்டான். ரவைகளும், எறிகணைகளும் தூவத் தொடங்கிவிட்டன. கும்மிருட்டு. இப்போது தேடொளிகளால் பகலாகிவிட்டது. எஞ்சிய மூவருள் ஒருவன் எதிரியை நோக்கி சுட்டுக்கொண்டிருக்க, மற்றவன் தீச்செல்வனுக்கு உதவி செய்ய தட்டுப்பட்ட தடை என்னவென்பதனை தொட்டு உணர்ந்து விட்டார்கள். சுமார் 04 அடி அகலமான மண்சுவர் அது. செங்கல்லினாலும் மண்ணினாலும் சேர்த்து மிகக் கடினமாக உறுதியாக அமைக்கப்பட்டிருந்ததை தீச்செல்வன் தோண்டி விட்டான்.***



"இவன் என்னடா மனுசன்" யாரிட்டையும் கதைக்கிறானில்லை என்று பொறுப்பாளர் அடிக்கடி சலிப் பதைப் பார்த்து நிமிர்ந்து பார்த்தேன்.

உண்மையில் அவன் யாரிடமும் எப்போதும், எதைப்பற்றியும் கதைப்பதே இல்லை, எது என்னவாக இருந்தாலும் தான் தானாகவே இருக்க கற்றுக்கொண்ட ஒரு அறிவாளன்.

தனக்குத் தரப்பட்ட வேலைகளை, இசகு, பிசகில்லாமல் செய்து முடிப்பவன், வீண் சோலி, சொரட்டு, பகிடி, விளையாட்டு எதற்குமே போவதில்லை. ஆனால் தனக்கு மேற்பட்ட பொறுப்பாளர் எதை சொன்னாலும் அதை கிரகித்து, தனக்கேயுரிய வேகத்தில் செய்துமுடிப்பான். இறுதியாகக் கொடுக்கப்பட்ட வேலைகளை மதிப்பீடு செய்து பார்க்கும் போது அவன் செய்த வேலையே முதன்மை பெறும்.

எந்நேரமும் இயல்பாய் மென்மையாக சிரித்துக்கொண்டேயிருக்கும் அந்த போராளியின் திறமைகள், அவனது துணிவு, வீரம் என்பன இன்றளவும் அவனை நன்கு தெரிந்த எல்லோர் மனதினிலும் அழியாத காவியமாகவே இருக்கிறது.

"என்னைப்பற்றி தெரிஞ்சு கொண்டது அவ்வளவுதான். இன்னும் அறிய நிறையவே கிடக்குது, என்று தனது அமைதியில் பொதிந்திருந்த வீரத்தையும் விவேகத்தையும், ஓரிரு வரிகளில் சொல்லிவிடும் அந்தப் போராளியின் பெயர் பெரும்பாலானவர்களுக்கு தெரிந்திருக்கும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

கிளிநொச்சி சமர் அல்லது "ஓயாத அலைகள் 02" இன் வெற்றிக்காய் உயிர்தந்த பல சாதனைமிகு மாவீரர்களில் இவனது செயற்பாடும் முதன்மைபெறுகின்றது. கிளிநொச்சியின் முன்னரங்கை புலிகள் சேனை மீட்டெடுக்க முன்னேறிச் சென்றது என்றால், அது மாவீரன் வீரவேங்கை லெப்ரினன் தீச்செல்வன் ( பூபாலசிங்கம் சூரியகுமார்) என்ற வீரமிகு அணித்தலைவனின் உயிரால் ஏற்படுத்தித்தந்த பாதையினூடாகவும் என்பதனை உறுதிபடக் கூறலாம்.

மாவீரன் லெப்ரினன் தீச்செல்வன் விடுதலைப் போராட்டத்தில் இணைந்த நாள் தொடங்கி பல களங்களில் பங்கேற்றிருக்கின்றான். அந்தக் களங்களிலெல்லாம் மனநிறைவுடனே சண்டை செய்து சிங்கள படையை எதிர்கொண்டு, பல சாதனைகளை செய்திருக்கிறான். பல எதிரிகளை சுட்டுவீழ்த்தியிருக் கிறான். ஆனால் எவ்வளவு சாதித்தாலும் அதை நினைப்பது குறைவு. இனியும் சாதிக்க வேண்டும் என்ற துணிவே அவனிடம் இருந்தது. துணிந்தவன் என்றும் சாவதில்லை, என்பதுபோல் அவனது துணிவு இன்றளவும் எங்களுடனேயே வாழ்கிறது.

ஏதோவொரு உணர்வினால் தூண்டப்பட்டவர்களாய் நாமிருக்க, எமது தூண்டுதலுக்கு உரம் சேர்ப்பதாய் கட்டளைத்தளபதி கேணல் தீபன் அவர்களின் படைத்துறைசார் உற்சாக சண்டைக்கள அறிவுறுத்தல்களைக்கேட்டு கிளிநொச்சி எதிரியின் படைத்தளத்தை கைப்பற்றுவதற்காய் விரைந்துசெல்கிறோம்.

எங்களோடு ஒருவனாய், மௌனப் புன்னகையுடன் தனது ரி-56 சுடுகருவியுடனும், ஜெயசிக்குறு எதிர் நடவடிக்கைக் களமொன்றில் எதிரியிடமிருந்து எடுத்த மென்பச்சை நிற ரவைக் கூட்டுத் தாங்கியை நெஞ்சுப் பகுதியில் நேர்த்தியாகக் கட்டியபடி தடையணியுடன் ஒற்றை வரிசையில் நகர்கின்றான். கையசைத்துச் சென்ற போது நிச்சயமாக ஏதோ சாதிக்கப் போகிறான் என்பது போல இருந்தது.

1998 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 26 ஆம் நாள் மாலையே சண்டைக்கான எல்லா அணிகளும் நகரத் தொடங்கிவிட்டன. சிங்கத்தின் குகைக்குள் புகுவதற்கு அதனது வாசலிலேயே தேர்ந்தெடுத்து அணிகள் நகரத்தொடங்கின. சங்கேதப் பெயர் 'மைக் போர்' (M4) என்ற குறி இலக்கை அடைய தடையணிகள் நகர்ந்து கொண்டிருக்கும்போது 27 ஆம் திகதி நடு நிசி 1.20 மணியாகி இருந்தது. தளபதி தீபனின் கட்டளை சங்கேத மொழியில் கிடைத்து விட்டது. இதற்கிடையில் எதிரியின் பக்கமிருந்து வந்த ஓரிரு வேட்டோசைகள் சில விநாடிகள் நிசப்தத்தை குலைத்தாலும் தடையணிகள் தடையுடைக்க சில விநாடிகளே இருக்க, மாவீரன் லெப்.தீச்செல்வன் தொடராக இருந்த எதிரியின் தடைக்கம்பிகளை வெட்டிக்கொண்டு முன்னே நகர்கிறான். இனியும் வெட்ட ஏலாது வெடிமருந்தை வைக்கவா என அணித்தலைவனிடம் கேட்க, அவனும் அதற்கு சம்மதிக்கிறான்.

மாவீரன் லெப்.தீச்செல்வன் எதிரிக்கு மிக அண்மையாக அவனது மறைப்பு வேலிக்குக் கிட்டவாக இருந்த இராணுவச் சுருள் கம்பித் தடைக்குள் மிகக்கவனமாக, தனக்கேயுரிய நிதான அமைதியுடன் தடையகற்றி வெடிமருந்தை திணிக்கிறான். சிறு தவறு என்றாலும் சுருள் கம்பியில் கட்டப்பட்டிருக்கும் மீன் பேணிகள் சலசலத்த சத்தத்தை உருவாக்கி விடும். எனவே அவதானமாக வைத்தவன், நேச அணி ஒன்று நகர்ந்த பக்கம் கேட்ட பேரோசையை உணர்ந்தவனாய், பாதுகாப்பு நெம்பை கழற்றி விடுகிறான். முன்பு கேட்ட அதை ஒத்த சத்தத்துடன் வெடித்து தடை அகன்ற போதினிலேயே, தடையணியும் காப்புச்சூட்டு அணியும் நகர்ந்து கிடந்த இடம் எதிரியின் எறிகணைத் தாக்குதலுக்கும் உள்ளாகி தடை அணி முற்றாகச் சேதமடைகிறது.

இந்த நேரத்தில் அதிசயமாய் தப்பிய மூவருள் மாவீரன் லெப். தீச்செல்வனும் ஒருவன். எனவே தீச்செல்வன் மேலும் முன்னேறுகிறான். எதிரி இவர்களின் நகர்வுப் பாதையை கண்காணித்துவிட்டு தொடர்ந்து அந்த இடத்திலேயே தனது தாக்குதலை மையப்படுத்துகிறான். எஞ்சியிருந்த மூவரும் காயமடைந்தபோதும் எதிரியின் குகைக்குள் எப்படியும் புகுந்துவிட வேண்டுமென்ற எண்ணத்துடன் அந்த வீரன் அடுத்த வேலித்தடையை உடைக்க தடையகற்றி வெடி மருந்துப் பொதியை புகுத்துகிறான். அது ஏதோவொன்றில் முட்டி நிற்பதைக் கண்டு ஏமாற்றமடைகிறான்.

பக்கத்திலே வலம், இடமாக 25 -30 மீற்றர் இடைவெளிக்குள் எதிரியின் காவலரண், எதிரியோ உற்சாகமடைந்துவிட்டான். ரவைகளும், எறிகணைகளும் தூவத் தொடங்கிவிட்டன. கும்மிருட்டு இப்போது தேடொளிகளால் பகலாகிவிட்டது. எஞ்சிய மூவருள் ஒருவன் எதிரியை நோக்கி சுட்டுக்கொண்டிருக்க, மற்றவன் தீச்செல்வனுக்கு உதவி செய்ய, தட்டுப்பட்ட தடை என்னவென்பதனை தொட்டு உணர்ந்து விட்டார்கள். சுமார் 04 அடி அகலமான மண்சுவர் அது. செங்கல்லினாலும் மண்ணினாலும் சேர்த்து மிகக் கடினமாக உறுதியாக அமைக்கப்பட்டிருந்ததை தீச்செல்வன் தோண்டி விட்டான்.

அந்தச் சுவரை தோண்டி முடிப்பதற்குள் மேலும் சில எறிகணைத் துண்டுகள் அவனது உடலை துளைத்துவிட, தனது களப் பணியில் உறுதியானவனாய், செயற்படுகிறான்.

அண்ண இழுக்கவா என்றதும். அடுத்தவன் ஓம் என்றதும்.

வெடிமருந்தின் பாதுகாப்பு நெம்பைத்தளர்த்த, அதுவெடித்து பாதை திறந்துவிட, அணிகள் உள் நுழைகின்றன. வெற்றி எமது பக்கமே என்றவனாய், தானும் சண்டைக்கு எழுந்து செல்ல முற்பட்ட போதுதான் எதிரியின் எறிகணை ஒன்று அவ்விடத்தில் வீழ்ந்து வெடிக்க தீச்செல்வன். நகர்ந்த அணியில் ஒரு போராளியும், தீச்செல்வனும் அந்த இடத்திலேயே வீரச்சாவடைகின்றனர்.

"கிளிநொச்சியை பிடித்துவிட்டு அப்படியே ஆனையிறவு பிடித்துவிட்டு யாழ்ப்பாணமும் பிடித்து வீட்ட போட்டுத்தான் வருவன்" என்று அவனது மதிப்பு மிகுந்த நண்பன் மாவீரன் மேஜர் மணிமாறனிடம் அமைதியாய் சொல்லிவிட்டு சென்றவன் கிளிநொச்சி, பரந்தன், ஆனையிறவு, குடாரப்பு, இத்தாவில், முகமாலை என விரிந்த சண்டைக் களத்தின் வாசலிலேயே தன் உயிரை தியாகம் செய்து விட்டே சென்றான்.

இன்றளவும் நாம்பெற்ற வெற்றியெனும் கோட்டையின் வாசல் இவனே என்றும் சொல்லலாம். எறிகணைகள் சிதறிவெடித்திட ரவைகள் சாரை சாரையாக இவன் இருந்த இடத்தை சல்லடையாக்க தனது களப் பணியை எனது தாய்மண்ணின் வெற்றிக்காய் செய்து முடிப்பேன் என்று சபதம் எடுத்தவனாகவே அன்றைய நாளில் இவன் செயற்படலானான்.

மாவீரன் லெப். தீச்செல்வனாலேயே கிளிநொச்சி எதிரியின் முன்னரங்குத் தடை உடைய வேண்டுமென்றிருந்தது என்றே கூறலாம். ஏனெனில் தடையணிகளில் இரண்டு போராளிகள். எல்லோரும் வீரச்சாவடைந்த போதும் இவனே இறுதியில் வீரச்சாவடைந் தான். இவனது வீரத்தின் முன்னே கிளிநொச்சி சிங்களப் படைமுகாம் தலைகுனிந்து அழிந்து போனது.



# காரசாரம்



## அன்புதான் உலக மகாசக்தி

சிறிலங்காத் தலைநகர்ப் பாடசாலையின் அதிபர் உட்பட ஆசிரியர்கள் மூவருக்கு நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்துள்ளது. காரணம், பாடசாலை மாணவனொருவனை அவனுடைய தாயாரின் முன் வைத்துத் தாக்கியுள்ளமை.

இது பற்றிய முறைப்பாடு செய்யப்பட்டு அவ் வழக்கு உயர்நீதி மன்றம்வரை கொண்டு செல்லப்பட்டுத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இதை எதிர்த்து கொழும்பில் ஆசிரியர்கள் போராட்டம் நடத்தியுள்ளனர். "ஆசிரியர்கள் மாணவர்களைத் தண்டிக்கும் உரிமை உண்டு" என்பது இவர்கள் கோரிக்கை. அதாவது மாணவர்கள் போதைப் பொருட்களைப் பாவித்தாலும் சரி, குற்றம் எனக் கருதக்கூடிய வகையில் பாடசாலையின் ஒழுங்கைக் குலைத்து கலவரங்கள் ஏற்படுத்தினாலும், பாடசாலை உபகரணங்களான கதிரை, மேசை போன்றவற்றை உடைத்து நொருக்கினாலும் கூட நாங்கள் கேட்க முடியாதா? பாடசாலை மாணவர்களது நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும், நிறுத்தும் அதிகாரம் எங்களுக்கு வேண்டும்.

இந்த ஆசிரியர்களுக்குத் தண்டனை வழங்கிய இந்த நடவடிக்கையானது ஆசிரியத் தொழிலையே அவமதிப்பதாகும் எனக் கூறியுள்ளனர். இந்த வாதங்கள் சென்றவாரமளவில் பத்திரிகைகளின் பக்கங்களில் இடம் பெற்றன. உண்மையிலேயே இன்னும் இது போன்ற இருநூற்றுப் பதினொரு வழக்குகள் நாடெங்கும் பதிவாகி நடைபெற்றும் வருகின்றன.

தொடர்ந்தும் ஆசிரியர்கள் தங்கள் அதிகாரம் கைவிட்டுப் போவதை விரும்பவில்லை என்பதுடன் அதற்காகப் போராடவும் இறங்கியுள்ளமை எதைக் குறிக்கிறது. ஒரு பாடசாலை மாணவியின் பரிதாப வரலாறு எனக்கருதப்பட்ட 'ஆயிஷா' என்ற சிறுகதையும், அண்மையில் நந்தி எழுதிய ஒரு பாடசாலை மாணவியின் கதை, 'கலாமணி' எழுதிய பலூன் ஊதிய மாணவியின் கதை போன்று பல மொழிகளில் மாணவர்களின் துயரம் பதியப்பட்டும் ஏராளமான சினிமாப்படங்கள், தொலைக்காட்சி நாடகங்கள், வானொலி நாடகங்கள் எனக் காலங்காலமாகப் பேசப்பட்டும் வந்த மேற்படி சம்பவங்கள் ஏதோ உலகால் உணரப்பட்டதாலோ என்னவோ, மாணவர்கள் என்ற வகையில் அவர்கள் மீது ஆசிரியர்கள் இனி ஆசிரியர்களாக மட்டும் இருக்கவேண்டியவர்களாக ஆக்கப்பட்டுள்ளனர்.

மாணவர்களை அன்பால் வெல்லும் ஆசிரியர்களுக்கு சுபாவமாகவே சக ஆசிரியர்களிடம் நல்ல பெயர் இருப்பதில்லை. இதனால் அவர்களுடைய முன்னேற்றம் கூட பாதிப்படைவதுண்டு. ஆசிரியர்கள் அனுபவிக்கும் இத்தகைய அனுபவங்களை அருமையான சிறுகதைத் தொகுதியான "மாங்கல்யம் தந்துநானே' என்ற ராணி சீதரனின் நூலில் காணலாம். எது எப்படியோ இன்று;

பாடசாலை மாணவர்களின் நலன்கள் பெற்றோருக்கும் பங்கிடப்படுவதான நடைமுறை கொண்டுவரப்பட்டுள்ளது. மாணவர்களின் தவறு, சிறப்பு, குறைபாடுகள் என்பன பற்றிப் பெற்றோர் நேரடியாகவே ஆசிரியருடன் கலந்தாலோசிக்கச் சந்தர்ப்பம் நிறையவே வழங்கப்பட்டுள்ளது என்றபோதும் இன்னமும் கையில் தடியை வைத்துக்கொண்டு திரியும் முன்பள்ளி ஆசிரியைகளை நாம் காண்கின்றோம். முன்பள்ளி என்று குறிப்பாக ஏன் சொல்கிறேன் என்றால், வீட்டில் செல்லமாக வளரும் பிள்ளை முதன் முறையாக தன்னை உடல் ரீதியாகத் தண்டிக்கும் அந்நியர் ஒருவரை சந்திக்கிறது. கல்வி மீதான, பாடசாலை மீதான வெறுப்புணர்வை ஏற்கத் தொடங்குகிறது. இந்த விடயத்தில் பெற்றோர் ஆச்சரியப்படவே செய்கின்றனர். வயது வருமுன்பே தன் மழலையின் "நானும் பாடசாலைக்குப் போகப்போறேன்" என்று அடம் பிடிக்கும் குழந்தை, பாடசாலைக்கு விடத் தொடங்கியதும் நான் போகமாட்டேன். அல்லது 'பெரிய பள்ளிக்கூடம் போகப்போறன்' என்று ஆரம்பிக்கும்.

பெரிய பள்ளிக்கூடத்தின் ஆசையும் அங்கு சென்ற சில நாட்களுள் விழுந்து போகிறது. பிள்ளைகள் மீது பிரயோகிக்கப்படும் தண்டனையை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. சிறுவர்கள் பெரியவர்களை தம்மால் எதுவும் செய்யமுடியாது என்ற நிலையில் வலிந்து அதற்குத் தம்மை உட்படுத்தினாலும், வயது வரும்போது அந்த நிலை எதிர்ப்புணர்வாக மாறுவது இயல்புதானே.

முருங்கைய முறிச்சுவளர்க்க வேணும், பிள்ளைய அடிச்சு வளர்க்க வேணும். 'பொம்பிளையத் தட்டித்தான் அடக்க வேணும்' போன்ற பொன் மொழிகள்!! ஏராளமாக எம்மிடம் உண்டு.

ஒரு கையில் 'சிகரெட்'டும் ஒரு கையில் 'நோட்புக்'குமாக பரீட்சைக்குப் படிக்கும் மாணவிகளை நல்ல வேளையாக நாம் காணவில்லை. எமக்கு வெளியே இது நடக்கிறது. மாணவர்களிடையேதான் போதைப் பொருள் பாவனை, மது பானம், சிகரெட், ஆபாசத் திரைப்படங்கள் புழக்கத்திலுள்ளன என்பதும் பொய். அந்தப் பழக்கங்களில் மாணவர்களும் சிக்கியுள்ளனர் என்பதே மெய். இவை அகில உலக ரீதியாக குற்றச் செயல்கள். சிகரெட், மது இரண்டும் அனுமதிக்கப்பட்டவை. ஏனையவை குற்றம். குற்றம் என்றால் என்ன? ஒரு நாட்டில் குற்றம் எனக் கருதப்படுவது இன்னொரு நாட்டில் குற்றமற்றதாக இருக்கும்.

உதாரணமாக இலங்கையில் கருச்சிதைவு செய்தல் குற்றம். இந்தியாவில் இது குற்றமில்லை. ஆக உலகமட்டத்தில் கருச்சிதைவு செய்து கொள்ளும் (சட்டமுறையற்ற அல்லது முறையாக) மாணவிகள் தொகை அதிகரித்துவருகிறது. அண்மையில் இத்தகு குற்றச்சாட்டில் பாடசாலை ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்ட மாணவி, அவளது கல்வித்தரம், கெட்டித்தனம், என்பவற்றின் சிறப்பு காரணமாக பாடசாலை நிர்வாகத்தின், பாதுகாப்பில் குற்றம் வெளிப்படுத்தப்படாமலே கல்வியைத் தொடர்ந்தாள். இது சமூகக் குற்றம்தான். ஆனால் மாணவியின் அறிந்து கொள்ளும் இயல்புமட்டுமே இதன் காரணம் எனப்பட்டது.

இங்கே, பாடசாலை நிர்வாகம் ஒரு மனிதாபிமான எதிர்கால நோக்குள்ள வகையில் செயற்பட்டுள்ளது. ஆனால் சட்டத்தைக் கையில் எடுத்து நீதிவழங்கியது சரியா? என்ற கேள்வியும் கூடவே வருகிறது.

பெற்று வளர்த்து இன்று வரை உடை, உணவளித்து, கல்வியளித்து வரும் பெற்றோருக்கு கைநீட்டும் அளவுக்கு இன்றைய இளைஞர்கள் வளர்ந்துள்ளனர். இதையும் கூட பாசத்தோடு, மன்னித்துவிடும் பெற்றோர் இருக்கின்றனர். இதைப் பாடசாலை ஏற்குமா? சில மாணவர்களின் நடத்தை பல மாணவர்களைப் பாதிக்கப் போவதை ஆசிரியர்கள் பார்த்துக்கொண்டிருக்க முடியுமா? என்று போராட்டம் நடத்துவது சரிதான்.

ஆனால் இதே குற்றங்களுக்காக பாடசாலை நிர்வாகங்களுக்குள் காவல் துறை நுழைவதும் இன்று சர்வசாதாரணம். ஒட்டு மொத்தமாகக் குற்றவியல் நடவடிக்கைகள் சார்பாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றிருக்கும் போது பாடசாலை நிர்வாகம் சம்பந்தப்பட்டவரை காவல்துறையில் சேர்த்து விடுவதே முறை. இதை விட்டு தென்னிலங்கையில் ஆசிரியர்கள் கூடி ஆசிரியர்களின் உரிமை பறிபோய் விட்டதாகக் கூறுவது அபத்தம்.

மாணவர்கள் இந்த நாட்டின் எதிர்காலம். அவர்களிடையே [illegible] வைத்தியர்கள் பொறியியலா[illegible] [illegible]டவாளர்கள், விஞ்ஞானிகள் எ[illegible] பல் தொழிலாளர்களும் உள்ளனர். நாட்டை ஆளப்போகிறவர்களும் நாட்டில் வாழப்போகிறவர்களும் இவர்கள் தான்.

இவர்களை வன்முறைக்குள் தள்ளுவதும், அன்பு, அகிம்சை, சத்தியம் என்பவற்றுள் வைத்திருப்பதும் ஆசிரியர்கள, பெற்றோர்கள் இருசாராருக்கும் உள்ள சம பொறுப்பு, இது ஒன்றும் அதிகாரப் போட்டியல்ல. ஒரு மாணவரை ஊறு வரும்படி அடித்தாலும், ஊமைக்காயம் வர அடித்தாலும் அடித்தவருக்கும் அடிவாங்கிய வருக்கும் ஏற்படும் உணர்வுகள் ஒன்றுதான். அதிகாரி, அடிமை, இயன்றவர், இயலாதவர், பெரியவர், சிறியோர். இந்த ஆக்கிரமிப்பின் வெளிப் பாடு ஆபத்தானது. அன்புதான் உலக மகாசக்தி. அறியாதவர் யார்?

-மாயா-



## விசுக்விசுக் விசாலாட்சி

என்னவோ அப்பிடி இப்பிடி திருவிழா துவங்கிற்றுது. தேர்தல் திருவிழாதான். முறைக்கு முறை இந்தத்திருவிழாவில தீ மிதிப்பு, காவடி, கரகம் எண்டு துவங்கி ஜல்லிக்கட்டு பலிகுடுப்பு. எண்டு கலாதியாத்தான் இருக்கும். போன சனாதிபதித் தேர்தலோட பகிரங்கமா நடந்த கொலைக் கேசுகள் இன்னும் முடியேல்ல. பட்ட கடனுங்கட்டேல்ல. முணுக்கெண்ட உடன ஓடிப் போய் அஞ்சப்பத்தக் கடன் வாங்கிற அம்மேரிக்காவுக்கும் இப்ப இட்டிடைஞ்சல் வந்திட்டுது.

அ... விடு இஞ்ச மட்டும் என்னத்த வாழுதாம். பொருளாதாரத்தாருக்கு சேடமிழுக்குது. அந்தளவில அந்நியச் செலாவணிக்கும் சுனாமியடிச்சுப் போட்டுது. இந்த பொறிக்குள்ளதான் பிக்கு முன்னணி சண்டைக்குப் போறதுக்கு சான்ஸ் கேட்டு வந்திருக்கு. என்னடா, காட்டுக்கு பெண் சாதியக் கூட்டிக்கொண்டு போன வேலாயுதத்தின்ர கதை தெரியுமே... வேலாயுதத்தார் மனிசியக் கூட்டிக்கொண்டு பாலப்பழம் புடுங்கப் போனாராம். அப்ப பாத்து கரடியொண்டு வந்திட்டுது. வேலாயுதத்தார் பாஞ்சு மரத்தில ஏறிவிட்டார்.


தங்கமக்கா பாவம் நல்லாப் பயந்து போனா. கரடி கிட்டவந்திட்டுது. சரி சாகிறது தான் சாகிறது கரடிக்கு ரெண்டு குடுப்பமெண்டு மனிசி கையில கிடந்த கடகப் பெட்டியால கரடிக்கு மூஞ்சயப் பொத்திக் கடுக்குது. கரடி பின்னுக்குப் பின்னுக்கு சரியிது. அடி பொறுக்க மாட்டாம கத்திக் கத்தி சுத்திச் சுத்தி வர வேலாயுதத்தார் மரத்துக்கு மேல நிண்டு கத்துறார். "குடடி தங்கம் குடு, நல்லாக்குடு. ஆற்ற பெண்டிலெண்டு நினைச்சார் குடு குடு"எண்டு கத்துறார்.

அந்தமாதிரி இந்தப் பிக்குமாரடா ஆசாபாசங்களைத் துறந்து வீடுவாசலத் துறந்து துறவியானவை இப்ப துறந்ததெல்லாத்தையும் திறந்து பார்க்க ஆசைப்பட்டவை தாங்க சகல சம்பத்துக்களோடயும் பத்திரமா இருந்து கொண்டு சண்டைக்கு வந்து சேர்ந்த ஏழைச்சிங்களப் பொடி பொட்டையளுக்கு வேலாயுதத்தார் பெண்டிலுக்கு ஏத்தினமாதிரியெல்லே ஏத்துகினம். இவையட கதைய விடு, தேர்தல் திருவிழாவில கலந்து கொள்ளுறதில்லயெண்டு சனாதிபதி கடைசிகடைசியா ஒரு அறிக்கையை விட்டாலும் அடுத்த வருசத்துக்கு வரவு சிலவுத் திட்டத்தை வாறமாசம் குடுக்கவேணுமே. என்னடா இந்த சிறிலங்காவுக்கு வந்த சோதினை.

ங. ஆரோ வந்து நடத்தப்போற அரசாட்சிக்கு ஆரோ குடுக்கிற வரவு செலவுத்திட்டம் வரப்போகுது. வரவுக்கு என்ன என்ன வழி இருக்கெண்டு சொல்லப்போறவர் ஏட்டில சுரைக்காய் கீறி விடப்போறார். வேற என்ன. நாட்டுக்கு வரப்போற சிலவை வரையறுக்க கையில ஏதுங்கிடக்கே. சண்டை நடக்கிற வீட்டில என்ன இருக்கும். பலகாரஞ் சுடச்சுட அடுப்பும் எரியும், அடுப்பு எரிய எரிய சட்டியில எண்ணை வத்தத்தான் செய்யும். விடுதலைப் புலியள் போராடினது தங்கட உரிமைக்குத்தானெண்டது இவைக்கு விளங்காமயில்ல. என்ன நாடு நாசமாப் போனாலும் பறவாயில்லை.

நாங்கள் கதிரையில இருந்தாக் காணும் எண்ட நினைப்பிலதான் இருக்கினம். போதாத காலம். இறுதிக்கட்டத்தில கதை மாறிப்போச்சு. எங்கடா இந்தத் தலைமைக்காறர் நாட்டுக்கு சமாதானத்தைக் கொண்டுவந்து எங்கட சாப்பாட்டில மண்ணைப் போட்டிட்டாங்களே எண்டு தவிச்சுக்கொண்டிருந்த படைத்தலைவருகளையெல்லாம் வேலையளப் புடுங்கி வெளிநாடுகளுக்க அனுப்பியாச்சு- அம்மா போகமுதல் எல்லா வகையான மாற்றத்தையும் செய்து முடிச்சு ஒரு "எம்ரி" நிர்வாகத்தைக் கையளிச்சிட்டு அதுக்கொரு வரவு செலவுத் திட்டத்தையும் வரைஞ்சு வழங்கப்போகினம். வெறுங்கையால முழம் போடாம வேற என்னத்தால போடுறது. ஆனா வரப்போற தேர்த்திருவிழாவில-ச்சா தேர்தல் திருவிழாவில அள்ளி வீசப்போற வாக்குறுதியள்ள இலங்கை இடிஞ்சு கடலுக்கதான் போகப் போகுதோ தெரியா. ஆனா இருந்தென்ன பாக்கிறது மகிந்தர் நாட்டைப் பழையபடி சமாதானத்துக்க கொண்டு வந்து அபிவிருத்தியை நோக்கி நடைபோடப் போறாராம்.

இதைப்பற்றி பிக்குமார் முன்னணி கூட ஒரு வார்த்தை சொல்லமாட்டமெண்டு சொல்லிப் போட்டினம். ஒட்டு மொத்தமா நாடு குழம்பிப் போச்சு. நாட்டுமக்கள் தலையப் பிச்சுக் கொண்டு திரியிறது நல்லாத் தெரியுது. என்ன இது தான் பாசனோ- இருக்கட்டன். 'எங்கே நிம்மதி எங்கே நிம்மதி எண்டு சிவாசி கணேசன் கரைஞ்ச மாதிரி அம்மா புலம்பிப் புலம்பி அறிக்கை விட்டுக்கொண்டிருந்தாலும், அவவின்ர திட்டங்கள் ஒண்டும் வெளியால வரயில்லை. ஆனா, திருவிழாவுக்க கனபேர் காணாமப் போயிருவினம். இருந்து பார் நான் எங்கசொல்லுறனெண்டு.



## சிறுகதை

# இன்னுமொரு கோசலை

அம்மா கண்களை மூடிக்கொண்டு படுத்திருந்தாள். நிலாக்காலம் அப்பா வெளியே சாக்குக் கட்டிலில் படுத்திருப்பது தெரிகிறது. அப்பா பல வருடங்களாக கடதாசிப் பூ மர நிழலில் தான் படுப்பார். அவர் உலவுவதற்கு உதவும் தடி சாக்குக்கட்டிலருகே சாத்தியிருந்தது. அவரின் செருப்புகளும் அதனருகே கிடந்தன. தலைவாசல் கொட்டிலுக்குள் கிடக்கும் மரக்கட்டிலுக்குள் அம்மாவின் மகன் அழகன் படுத்திருந்தான். கட்டிலருகே ஒரு மேசை. மேசையில் ரேடியோ, ரோச்லைற், அவன் கழற்றி வைத்த கைமணிக்கூடு, தலைவரின்படம் ஒன்று. வாயைத் திறந்து பற்கள் தெரியக்கிடக்கும் அவனைப்பார்க்க அம்மாவுக்கு சிரிப்புவந்தது. அவன் அம்மாவைப்போல காகக் கறுப்பு. திடகாத்திரமான உடம்பு கண்ணாடியில் தன்தோற்றத்தைப் பார்த்து அவன் ஒருபோதும் திருப்திப்பட்டது கிடையாது.

"கறுப்பாய் பெத்துப் போட்டு அழகன் என்று பேரும் வைச்சிருக்கிறியள்" அவன் அம்மாவைக் குற்றம் சாட்டுவான்.

அவனை ஏற இறங்கப் பார்த்து விட்டு அதே சிரிப்போடு "ஏன் ஆனை கறுத்தாலும் ஆயிரம் பொன் தெரியுமோ?" என்பாள்.

அவன் அம்மாவிற் கோபம் மாறாதவனாக திரும்பிப் பாராமல் போவான். அவன் போய் முடியும் வரை அம்மா அவனைப் பார்ப்பாள். மனதுக்குள் மகிழ்ச்சி கொப்பளிக்கும். அப்பா நல்ல சிவலை, பதுங்கிய தோற்றம் மகள் அப்பாவைப் போலத்தான். நல்ல சிவப்பி, கருமை குறைந்த சுருண்ட தலைமுடி. சிறிய கண்கள். அம்மாவின் சொல்வழிக்கு அவள் அடங்குவதில்லை அதனால் அம்மாவும் அவளும் கீரியும் பாம்பும் போல. அப்பாவின் சொல் அவளை மந்திரக்கோல் போல் கட்டுப்படுத்தி விடும். மூத்தவன் ஆதவனும் அம்மாவின் பிள்ளைதான். மிகவும் சாதுவானவன். கொடுத்தால் குடிப்பான். கொடுத்ததை சாப்பிடுவான். ஊரில் ஒரே தடவையில் O/L பாஸ்பண்ணிய முதல் மாணவன். எப்போ பார்த்தாலும் எதையாவது செய்து கொண்டிருப்பான். அழகனை விட வித்தியாசமானவன். தேநீர் கொதித்தால் சோறு சுட்டால் அழகன் பொறுத்துக்கொள்ள மாட்டான். அவன் சாப்பிட்டு முடித்து வெளியே போகும் வரை அம்மா பதைபதைத்தபடியே அமர்ந்திருப்பாள். ஆதவன் அப்படியில்லை அதனால் அவளுக்கு ஆதவனில் கொஞ்சம் கூடப்பிரியம்.

மகள் இரண்டுக்கும் இடைப்பட்டவள். சிலவேளை சாது போலவும் சில வேளைகளில் முரடு போலவும் தோன்றுவாள். இப்போது ஆதவனும் மகளும் அவளருகில் இல்லை.

என்ன மாதிரி இருந்த வீடு...? அம்மா பெருமூச்சு விட்டுக் கொண்டாள். நிலவு வெளிச்சம் உள்ளே விழுந்து கொண்டிருந்தது. இப்படி ஒரு நிலவு நாளில்தான் ஆதவன் வந்திருந்தான்.அவனோடு இன்னுமொரு ஒல்லியான பையன் ஏதோ பெயரும் சொன்னான் இப்போது ஞாபகத்தில் இல்லை. சயிக்கிளை வாசலில் வைத்து பூட்டிவிட்டு வந்தவனை அம்மாதான் முதலில் கண்டாள்.

"ஆர் ஆதவனோ?"

ஓம்....

"எங்கராசா போனனி?"

மேலே பேச முடியாமற்தவித்தாள்.

அவன் குனிந்த தலை நிமிராமல் நின்றான். பிறகு அம்மா தன்னைத் திடப்படுத்திக் கொண்டாள். சமைத்தாள் உணவுபரிமாறினாள். ஆதவன் வானொலிப் பெட்டியை எடுத்துப் பாட்டுப் போட்டான்.

"ஆர் அண்ணையே"

அம்மாவிடம் கேட்டுவிட்டு அடுப்படியில் பலகைத்துண்டைப் போட்டுக்கொண்டு அழகன் இருந்தான். அம்மா அடுப்போடு போராடினாள். அப்பா வந்து நிலைமைகளை ஒருதரம் பார்த்து விட்டு போனார். சாப்பிட்டு முடித்ததும் போவதற்கு ஆயத்தமானார்கள்.

"இதைக் கொடுங்கோ...."

அம்மாவிடம் அழகன் ஒரு பொதியைத் தந்தான்.

"என்ன இது?..."

"சேட்டு"...

"இருக்கட்டும் பிறகு வந்து எடுக்கிறன்..."

அம்மாவிடம் திருப்பித்தந்து விட்டு அவன் போய்விட்டான்.

சில நாட்களில் மகளும் போய்விட்டாள். அம்மாவிற்குப் பைத்தியம் பிடித்து விடும் போல இருந்தது. அழகன் தனித்துப் போய்விட்டான். அவன் எதுவும் பேசுவதில்லை. அம்மாவிற்கு அவனோடு பேசவே பயமாயிருந்தது. அப்பா சாக்குக் கட்டிலுக்குள் முடங்கிப்போனார். அப்பாவிற்குத் தெரியாமல் அம்மா அழுதாள். அம்மாவிற்குத் தெரியாமல் அப்பா அழுதார்.அழகன் அழுவானா? அவன் அழக்கூடியவனில்லை. அம்மாவிற்கு அப்போது கையுதவியில்லை. சங்கக்கடைக்கு சாமான் வாங்கப் போனாள். சந்தைக்கு மரக்கறி வாங்கப் போனாள். "மெண்டிஸ்" சந்திக்கு மீன் வாங்கப் போனாள். அழகன் வீட்டில் நிற்பது குறைவு. படிப்பையும் விட்டுவிட்டான்.

"ஏன் படிப்பை நிறுத்தினாய்" என்று அவனைக் கேட்கப்பயமாக இருந்தது. அவனும் போய்விட்டால். அம்மாதன் கடைசித்தம்பி லோகனையும் கூட்டிக் கொண்டு மகள் நிற்குமிடத்திற்குப் போனாள்.

"என்னத்துக்கு இஞ்ச வந்தனியள்? வரேலும் எண்டால் நான் வந்திருப்பன் தானே..." மகளின் கேள்வி. அம்மாவிற்கு அழுகைவந்து விட்டது.

"தம்பி எங்கை நிற்கிறான்?"

"அவன் யாழ்ப்பாணம் போட்டான்....?"

"அந்த ஆமிக் கூட்டத்துக்குள்ளையோ"

ஆமி இருக்கிற இடத்திலதானே அவனுக்கு வேலை...?

அம்மா பேசாமல் இருந்தாள்.

"வேறை என்ன?"

போட்டு வாறம் அம்மா எழுந்தாள். மகளை ஒருமுறை பார்த்தாள். கட்டி அணைக்க வேண்டும் போலிருந்தது. கண்கள் குளமாக மகளைப்பார்த்தாள்.

"எத்தினை பிள்ளையள் வருசக்கணக்கா தாய்தகப்பனை பார்க்காம இருக்குதுகள்."

அம்மா மகளுக்கென வாங்கி வந்த பொருட்களை நீட்டினாள்.

என்ன இதெல்லாம்?

"தம்பி ஒரு சேட்டுத் தந்தவன்... பலகாரமும் கிடக்கு...."

"சேட்டு என்னட்டை கிடக்கு..."

"பலகாரத்தை தாங்கோ..."

"என்ர பிள்ளையளுக்கு விருப்பம்"... என்றாள்.

வெகு நேரமாய் லோகனின் மோட்டார் சைக்கிளில் இருந்த அம்மா பேசவில்லை.

"லோகன்" அம்மா கூப்பிட்டாள்...

"என்னக்கா?"

"இந்தச் சேட்டை நீ வீட்டை கொண்டு போ..."

"எனக்கா?"

"அழகன்ர போக்கு உனக்கு தெரியும்தானே..." தமக்கையும் வேண்டாமென்றிட்டாள் எண்டால் அவன் தாங்கமாட்டான்.

சரி. அதற்குப்பிறகு அம்மா ஒன்றும் பேசவில்லை. லோகன் விசுவமடுவில் சந்தைக்கு முன்பாக சைக்கிளை நிறுத்தினான்.

"இந்தா ஏதும் சாப்பிட்டு தேத்தண்ணியும் குடிச்சிட்டுவா,"

"உங்களுக்கு,"

"எனக்கொண்டும் வேண்டாம் வெத்திலைக் கூறு வாங்கியா?"

களைப்பாறி விட்டு அம்மாவும் லோகனும் புறப்பட்டார்கள். வீடு போய்ச்சேர இருண்டுபோய்விட்டது. வீடு இருளில் கிடந்தது. அம்மாவிற்கு அழுகைவந்தது. அடக்கிக் கொண்டு போனாள். இருட்டில் அழகன் படுத்துக்கிடந்தான். 'ஆர் தம்பியே' எதுவும் சொல்லாமல் கால்களை ஆட்டிக் கொண்டு படுத்துக்கிடந்தான். அம்மா கிணற்றடியில் முகம் கழுவிக் கொண்டு வந்து விளக்குகளைப் பற்ற வைத்தாள். அடுப்பை மூட்டி கேற்றிலை சுடவைத்தாள். இருட்டில் அப்பா புல்லுக்கட்டோடு வந்தார்.

"ஏன் உங்களிற்கு உந்த வேலை ஒரு நாளைக்கு ஆட்டிற்கு புல்லில்லாட்டி செத்தே போகும்."

வாசலில் நின்று கத்தியை வைத்து விட்டு அப்பா போனார். அம்மா அழகனின் தலைமாட்டில் தேநீரை வைத்தாள்.

"கொக்காளிட்ட போனனான் தம்பி லீவு கிடைச்சால் வாறனெண்டவா"

அம்மா சொல்வதை காதில் வாங்கிக் கொள்ளாதவன் போல அவன் கிடந்தான். அப்பாவுக்கும் தேநீரை கொண்டு போய் வைத்து விட்டு வந்தாள். இன்னமும் அழகன் தேநீரை அருந்தாமல் கிடந்தான். மதியத்துக்கு காய்ச்சி வைத்து விட்டுப் போன சோறும் அப்படியே கிடந்தது.

"பிள்ளை என்னவாமப்பா" அப்பா கேட்டார்.

"சுகமா இருக்கிறாள் வரநேரங்கிடைச்சா வருவாளாம்."

"எங்கட பிள்ளை மட்டுமே எத்தினையாயிரம் பிள்ளையள் ம் இதுக்கெல்லாம் முடிவு வரும்..." அப்பா சாக்குக் கட்டிலை தேடிப்போனார்... அம்மா சீலைத்தலைப்பை விரித்துப் படுத்தாள்.

ஊர் நினைவுகள் வந்தன. அம்மா கடினமான உழைப்பாளி. வீட்டிலிருந்த போது அம்மாவிற்கு செல்வாக்கு அதிகம். அம்மா காலால் பிறந்தவளாம். ஊரில் நோ ஏற்பட்டால் குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் அம்மா தன் காலால் தடவி விட்டால் நோமாறிவிடுமாம். பல பேர் அம்மாவிடம் வருவார்கள். அம்மா அந்தக்காலத்தில் எட்டாம் வகுப்பு வரை படித்தவள். பெரியவளானதும் படிப்பை நிறுத்தி விட்டார்கள். பதினேழு வயதில் திருமணம். ஐந்து வருடங்களாய் குழந்தைகளில்லை. பிறகு ஆதவன் மகள் மல்லிகா அழகன் என்று மூன்று முத்துக்கள். இப்போது அழகன் மட்டும் அம்மாவோடு. அம்மா அழகனைப் பார்த்தாள். கால்களை ஆட்டியபடியே இப்போதும் படுத்திருந்தான். அம்மாவின் காலம் தனிமையில் கழிந்தது. இடையிடையே மகளுடன் நிற்பவர்கள் வந்து போவார்கள்.

"அக்கா சரியான இரக்ககுணம். எல்லாரிலயும் நல்ல பாசம். தன்ர பிள்ளையளுக்கொண்டெண்டா அக்கா அழுதிடுவா."

அம்மா இப்போ அவர்களில் மகளைக்காணத் தொடங்கினாள். அக்காவின் சிநேகிதிகள் வந்தால் அழகன் எதுவும் பேசுவதில்லை. வெளியே போய்விடுவான்.

"என்னம்மா எங்களைக்கண்டவுடனே அண்ணா வெளியே ஓடிவிடுறார்" என்று கேட்பார்கள் அவர்கள்.

"அவனொரு வெக்கறை பிடிச்ச பெடியன் பிள்ளையள்" என்பாள் அம்மா.

அம்மாவுக்கு அழகன் மீது சில வேளைகளில் எரிச்சல் வரும். ஆனால் அவனிடத்தில் பயம் தான் அதிகம். கொஞ்சநாள் கராஜ்ஜில் வேலை பழகுவதற்காக போய்வந்தான். பிறகு அதை விட்டு விட்டு சங்கக் கடையில் சாமான் நிறுப்பதற்கு நின்றான். அதுவும் நிலைக்கவில்லை. உழவு இயந்திரம் ஓட்டப்பழகினான். அவனால் ஒரு தொழிலிலும் ஒட்டமுடியாது இருந்தது. அம்மாவுக்கு கவலையாயிருந்தது. இவன் வயிற்றில் வந்தபோது அம்மாவிற்கு பெரிதாக உடன்பாடில்லை. அப்படி முழுமையான மனதுடன் அவனை ஏற்றுக் கொள்ளாததால் தான் இப்படி முரண்டு பிடிக்கிறானோ என்று மனம் குற்ற உணர்வினால் குறுகுறுக்கும். அவன் எங்கே போனாலும் எத்தனைமணிக்கு வந்தாலும் அப்பா அவனை ஒன்றும் கேட்கமாட்டார். அவனைக் காணாவிட்டால் அம்மாதான் துடிப்பாள் மனதுக்குள். இன்றும் அழகன் இரவுதான் வந்தான்.

"விடிய உள்ளுக்குப் போறன்" மொட்டையாய் சொன்னான்.

"உள்ளுக்கோ..."

"ஒரு வேலைக்குப் போறன் வரக் கொஞ்ச நாளாகும்..."

அம்மாவுக்கு இடிவிழுந்த மாதிரி அப்பாவிடம் போய்ச் சொன்னாள்.

"இவன் விடிய உள்ளுக்கு போறானாம். அங்கை இவனுக்கு ஆரிருக்கினம்."

**ஆதிலட்சுமி சிவகுமார்**


"பிடிச்செல்லே அடைச்சுப் போடுவாங்கள்"

"போட்டு வரட்டுக்கும் பேசாம இரு..."


அம்மாவால் பேசாமலிருக்க முடியவில்லை. தூக்கமும் வருவதாயில்லை. சுவரில் மாட்டியிருந்த ஆணியில் அவன் சேட்டு தொங்கிக்கொண்டிருந்தது. மெல்ல எழுந்து பொக்கற்றில் கைவிட்டாள். அது அதுவா....

வெளிச்சத்தில் அதைப் பார்த்தவளுக்கு தலை சுற்றியது.

'நீயுமா?...' அழகனைப் பார்த்தாள். வாயை ஆவென்றபடி பற்கள் தெரியக்கிடந்தான். கைகளில் நரம்புகள் புடைத்திருந்தன. இப்போதுதான் முளைக்க ஆரம்பித்திருக்கும் மீசையில் ஒரு கம்பீரம் இருப்பதை புரிந்து கொண்டவளாய். அம்மா வந்து நிலத்தில் சரிந்தாள். அம்மா உறங்குவதற்கு முன்பாக சேவல் கூவத் தொடங்கியது.



# எங்கள் மண்ணுக்கு எதுவும் நிகரில்லை...



சமைத்து முடிந்தபோது அவளுக்கு ஒரே களைப்பாயிருந்தது. எப்படியோ சமையல் முடிந்துவிட்டது. சமையலறையை கூட்டித் துப்புரவாக்கிவிட்டு கொஞ்சநேரம் படுக்கவேண்டும். படுத்தால் களை பறந்துவிடும். இப்படி மனதில் எண்ணமோடினாலும் அவளால் எழுந்து எதுவும் செய்யமுடியவில்லை.

கதவுடன் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டாள். யன்னல் கம்பிகளில் புலுனிகள் வந்து இருந்து கத்தின. நீ போய்விட்டால் தட்டிக்கொட்டி சாப்பிடலாம் என்று கூறியிருக்கலாம். அவள் எதையும் பொருட்படுத்தாது கண்களை மூடியபடி அமைதியாக இருந்தாள்.

வாசலில் ஏதோ சத்தம் யாரோ வருவது போன்ற சத்தம். தொடர்ந்து பெரியம்மா என்ற குரல். திடுக்கிட்டு விழித்துப் பார்த்தபோது அவன் அவள் அருகிலேயே வந்து அமர்ந்தபோது தலையைத் தடவிவிட்டாள். என்னடா நீ வருவதாக யாரும் எனக்கு சொல்லவில்லையே. எழும்பு எழும்பு குப்பைக்குள் இருக்காதே. போ போய் கதிரையில் இரு வெளிநாட்டுக் காரர் இந்த குப்பைக்குள்ளை. சகுந்தலா படபடத்தாள். அவன் அது தான் சகுந்தலாவின் அக்கா மகன் அமுதன் எழுந்து போய் கூடத்துக்குள் போட்டிருந்த கதிரையில் உட்கார்ந்தான்.

சகுந்தலா படு கிழவியல்ல. முதியவள்தான். அமுதனைக் கண்டதும் மனது துள்ளியது. எல்லாம் கூட்டித் துப்புரவாக்கிவிட்டு கை கழுவிய பின் அவன் அருகில் வந்து அமர்ந்தாள். அமுதனின் உயரமும் அழகும் மென்மையான பேச்சும் அவனைப் பார்த்து ஒன்பது வருடங்கள். நன்றாக மாறிவிட்டான். நல்லாய் இருக்கிறான் என எண்ணியபடி என்ன குடிக்கிறாய் என்றாள்.

கொக்ககோலாவா, அல்லது லோக்கல் சோடாவா, தேத்தண்ணியா? அல்லது செவ்விளநீரா? பெரியம்மா செவ்விளநீர் குடித்தால் நல்லது தான் இப்போ கிடைக்குமா?

அட போடா பின்னால் வாவன் காட்டுறன் என்று அழைத்துப் போனாள். நிறை குலைகளுடன் நின்ற மரத்தில் இரண்டு இளநீரை பிடுங்கி வெட்டிக் கொடுத்தாள். ஸ்ரோ இல்லாமல் குடிப்பியோ?

அதெல்லாம் பிரச்சினையில்லை. அமுதன் இளநீரை அப்படியே குடித்தான்.

நீ குடி நான் சாப்பாட்டை பார்க்கிறன் என்று எழுந்தபோது அவனும் கூடவே வந்தான். சமைத்து வைத்த உணவைப் பார்த்தான். சிரிப்பாகவும் அதே நேரத்தில் பாவமாகவும் இருந்தது.

பொரித்த ஒரேயொரு மிளகாய், பொரித்த பாதி அப்பளம், முருங்கைக்காய் கறி, சொதி இதிலே என்னத்தைச் சாப்பிடுவது அவன் கொஞ்சம் கவலையோடு கேட்டான்.

அதெல்லாம் பிரச்சினையில்லை. முட்டை இருக்கு பொரிக்கலாம். அந்தா தக்காளி அதில் பழம் இருக்குது, பிடுங்கி சம்பல் போடலாம், வேலியில மொசுமொசுக்கை, முசுட்டை, வேலியோரம் முருங்கை, கிணற்றடியில் தக்காளி நாலு எதையோ சமைக்கலாம்.

போய் உடுப்பு மாற்றி குளித்துவிட்டு இரண்டு பேருமே சாப்பிடலாம் என்றாள். அமுதன் குளிக்கத் தயாரானபோது அடுத்த வீட்டு செந்தூரன் சின்னப்பையன் ஓடிவந்தான். அமுதனைக் கண்டதும் தூணோடு தூணாக ஒட்டிக் கொண்டு நின்றுவிட்டான்.

என்னடா பயம், இவர் மாமாதான். வெளிநாட்டிலை இருந்து வந்திருக்கிறார். நீயும் வளர்ந்து படித்து ஒருநாளைக்கு வெளிநாட்டுக்கு போவாய் என்றபோது ராசா வேண்டாமடா படித்து நன்றாக உழைத்து அம்மா அப்பாவுடன் சந்தோசமாயிரடா என்று அமுதன் மெதுவாக அவனை அணைத்துக்கொண்டே கூறினான்.

சரி இருங்கோ நான் குளிக்கப்போகவேணும் எண்டு சொல்லிக்கொண்டு அமுதன் போனதும், செந்தூரன் அம்மம்மாவுக்கு இன்றைக்கு நிறையவேலை. நல்லபிள்ளை அம்மாவிடம் போய் இன்றைக்கு இரவுக்கு பத்து இடியப்பம் அவித்துத் தரச்சொல்லிவிட்டு வருகிறாயா என்று அவள் சொல்லி முடிக்கு முன்பே செந்தூரன் ஓம் என்று ஓடிப் போய்விட்டான். பெரிய பெரிய வளவுகளுக்குள் ஒவ்வொரு வீடுகள். சிறிது நேரத்தில் ஓடிவந்த செந்தூரன் ஓமாம் என்று சொல்லிவிட்டு முற்றத்தில் நின்ற மாமரத்தில் ஏறி உட்கார்ந்து ஏதோ பாடத்தொடங்கினான்.

அமுதனும் சகுந்தலாவும் அருகருகே உட்கார்ந்து சாப்பிடத் தொடங்கினார்கள். சகுந்தலாவின் கண்களில் இருந்து இரண்டு சொட்டுக்கண்ணீர் உருண்டு சோற்றுக்குள் விழுந்தது. என்ன பெரியம்மா கண்ணீரும் சோறுமா பதைத்துப்போய் அமுதன் கேட்டபோது கண்களை அழுத்தித் துடைத்தாள். கட்டுப்படுத்த முடியாமல் திணறினாள்.

ஓமடா இந்த சண்டை போர் அடாவடித்தனங்கள் பிடிக்கிறாங்கள், வெட்டுகிறாங்கள், பிடித்துக்கொண்டு போனவர்களை காணவில்லை என்ற பயங்கரச் செய்திகள், கொடுமைகள், கோரங்கள், பெரியப்பா எங்கே போனார், எப்பிடிப்போனார், எங்கே மறைந்தார் என்பதே தெரியாது. அதனால் பிள்ளைகள் மூவரையும் என்ன செய்வது என்று திகைத்தேன். எப்படியோ போய்ச்சேர்ந்துவிட்டார்கள். சின்னவன் நகுலன் என்னை விட்டு ஒருநாள் கூட இருக்கமாட்டான். அமுதனுக்கு சங்கடமாய் இருந்தது. நீங்களும் பிள்ளைகளிடம் போகலாம் தானே ஏன் அழுகிறீர்கள் அழாதேங்கோ ஆதரவாய் முதுகைத் தடவினான். கண்களைத் துடைத்தான்.

சகுந்தலா கண்களைத் துடைத்தாள். மெதுவாகச் சிரித்தாள். சாப்பிடு சாப்பிடு என்ன வேணும் தன்னை இயல்பு நிலைக்குக் கொண்டுவந்து ஒன்றும் நடவாததுபோல் சாப்பாடு போட்டாள். தானும் சாப்பிட்டாள்.


அமுதன் இது எங்கள் மண். எங்கள் கிராமம். எம்முன்னோர்கள் வாழ்ந்த பொன்னான பூமி. இதைவிட்டு போகக்கூடாது. போகமுடியாது. இந்த அமைதி, சந்தோசம், சுகம் எங்கேயும் கிடையாது. இந்த காக்கிச் சட்டைகளும் அவர்களின் காலடியோசைகளுமே எனக்குப் பிடிப்பதேயில்லை. ஏதோ ஒவ்வொரு வகையில் நம்மவர்கள் வெளிநாடுகளுக்குப் போய்விட்டார்கள்... கதை நீண்டு கொண்டே போனது. இரவு நெடுநேரம் தூங்காமல் கதைத்தார்கள்.

பொழுது விடிந்ததும் அவன் புறப்பட்டுவிட்டான். பெரியம்மா போய்வரவா என்றபோது அமுதனின் தொண்டை அடைத்துக் கொண்டது. கண்களில் நீர் திரண்டது. எங்கள் மண்ணுக்கு எதுவும் நிகரில்லைத்தான். கொஞ்சம் படபடப்பாய் து[illegible]மாய் அவன் காணப்பட்[illegible]. டேய் என்னடா? உன் மண், உனதுபூமி, எங்கள் பூமி, அது எங்கள் சொந்தம்தான். யாரும் மறுக்கமுடியாது. சரி போய்வா என்று பஸ்வரை போய் அனுப்பிவிட்டு திரும்பி வந்து திண்ணையில் உட்கார்ந்தாள்.

முழங்காலில் முகம் புதைத்து அழுதாள். சொந்தங்கள் பந்தங்கள் இல்லாமல் யார்யாரோ வெளியேறி தனிமையாய் ஏன் இந்த நிலை.

கண்களைத் துடைத்துக்கொண்ட அவள் செந்தூரனை அழைத்தாள். கதை சொன்னாள். அவன் கதை கேட்டுக்கொண்டிருந்தான். விரைவில் விடிவு வரும் முடிவு வரும் என்ற எண்ணம் மனதில் ஓடியது.

**சுந்தரி**



## புலர்வு பற்றிய எண்ணக்கரு

ஒரு புலர்வின்
நீண்ட நகர்வுகளின் அப்பால்
படிவுப் பரிமாணங்களுக்கு
விளக்கம் செய்தபடி
அவன் வருகைகள்.

அந்த மோதுகைகள்
முரண்கள் மீதும்
உடைந்த புலர்வின் அவசியங்கள்
புலம்பியபடி மீண்டும்
வரவுப் பதிவுகளின் பக்கங்களாய்
அவனின் எல்லாமும்...


இவைகள்
இயல்பெனக் கூறும்
என்தும், உனதுமான புலர்வு
பற்றிய எண்ணக் கருக்களை
உலர்வு செய்து போகிறது
முரண்கள்.

இப்போதெல்லாம்
முரண்கள் பிரம்மாண்டமான
விசிறல்கள் பரப்பிய
மோதுகைகளாய்...
முதுவெயில் நீட்சியின்
அனல் காற்றாகி
வற்றிய நிலைகளும்...
வரல் மரங்களுமாய்
துளிர் காணத் துடிக்கும் எங்களின்
துன்பியலின் முன்னே...

முரண் பாரம் தூக்கித்
திரிபவர்கட்குச் சொல்லிடல் வேண்டும்.
எதை..?
உங்கள் துரவுகள் மேவும்
காட்டாற்று வெள்ளமாய் முரண்கள்
மாறுமுன்னராவது
அவர்கள் திறவுகோல் பற்றிச்
சிந்திக்க முயலுங்கள்.

புலர்வின்
புதிய பரிமாணம் அப்போதாவது
பிறந்துவிடுமோ... என்னவோ...
"........................"

நா.கானகன்



## புது உலகம்...

எனக்குள்...
என்னோடு வாழ்ந்துகொண்டிருக்கும்
ஆன்மா...
எப்போதும்...
புரட்சியின் புதுவழி நோக்கியே
புடமிட்டுக்கொள்ளும்
அதுவே வாழ்வாக
கற்பனைகள்...
ஆயிரம் ஆயிரம்...
நியாயமற்ற - இந்த
சமூக இருப்பு
எரிந்து சாம்பலாகும் போது
நிச்சயம் நிலம் வெடிக்கும்
புது உலகம் பிறப்பெடுக்கும்.

ப.தர்மினி

## சொற்சிலம்பம் - 106

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ச | று | ய் | டு | ன | அ | ணி |
| மா | கு | ல் | பா | ந் | மி | லா |
| கா | ரி | தி | ரோ | னி | ண் | வ் |
| வெ | னா | ப | லி | ளை | கீ | இ |
| த | ட் | தா | ஷி | ர் | லி | து |
| ற் | ர் | ய | க் | ஸ் | க | வு |
| ப் | வா | கே | ன் | சி | த் | றீ |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் -104 இன் விடைகள்

01. செவ்வாய்.

02. கிறீன்லாந்து.

### சொற்சிலம்பம் - 104 இன் பரிசுக்குரியவர்

சி.நிலானி, தரம் $9^{C}$,
கற்சிலைமடு அ.த.க.பா,
ஒட்டுசுட்டான்.

### சொற்சிலம்பம் - 104 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. ஜெ.சஞ்சிகா, தரம்$3^{A}$, உடையார்கட்டு ம.வி, உடையார்கட்டு.
02. இ.புவிகரன், தரம்$5^{C}$, மு/ஸ்ரீசுப்பிரமணிய வி.சா, புதுக்குடியிருப்பு.
03 வி.சுஜிகரன் தரம்$5^{C}$, மு/ஸ்ரீசுப்பிரமணிய வி.சா, புதுக்குடியிருப்பு.
04. வ.சாரங்கன், மு/யோகபுரம் ம.வி, மல்லாவி,
05. அ.அன்ரனி, 9ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.
06. ம.குமுதன். இல:130 பாடசாலை வீதி, பண்டாரிக்குளம்.
07. கு.அகிலன், கறுக்காய்த்தீவு, பூநகரி.
08. ப.கோவிந்தராசன், மட்டுவில் நாடு மேற்கு, பூநகரி.

01. பழவகைகளில் ஒன்று?

01) ..........................................

02. வெப்பத்தை அளக்கும் கருவியின் பெயர்?

01) ..........................................


சொற்சிலம்பம்-106
ஈழநாதம்.
யாழ்சாலை,
கிளிநொச்சி.

பெயர் :- ..........................................

முகவரி :-..........................................

..........................................

..........................................




# கெளுத்திமீன்

கெளுத்தி மீன் வகைகளில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட இனங்கள் உள்ளன. பொதுவாக இவை பழுப்பு அல்லது சாம்பல் நிறத்திலிருக்கும். இவற்றின் உதட்டிலிருந்து சுற்றித் தசையிழைகள் பல துருத்திக்கொண்டிருக்கும். பெரும்பாலான கெளுத்தி மீன்கள் நன்னீர் நிலைகளில் வாழ்பவை. சில இனங்கள் கடல்களில் வாழ்கின்றன. பொதுவாக செதில்களில் இல்லாத உடல் அமைப்பு உள்ளது. வால் துடுப்பிற்கு அருகில் முதுகில் ஒரு சிறிய தசைத் துடுப்பு ஒன்றிருக்கும். சில இனங்களின் மார்புத் துடுப்பிலும் வால் துடுப்பிலும் நச்சுத் தன்மையுடைய முள்கள் உள்ளன. மட்டிகள், புழு பூச்சிகளின் இளரிகள், புறவன் தோட்டு உயிர்கள் முதலியனவே இவற்றின் உணவு. எதையும் உண்ணக்கூடியவை. உண்ணத் தகுந்த மீனினம்; எனவே எளிதில் தூண்டிலில் மாட்டிக்கொள்ளும்.

சில இனங்களின் உடல் வலுவான எலும்புத் தகடுகளினால் போர்த்தப்பட்டிருக்கும். ஆபிரிக்காப் பகுதியில் காணப்படும் ஒரு இனம் மின் அதிர்ச்சியைக் கொடுக்கக் கூடியது. 2.5செ.மீ நீளமுடையதி லிருந்து 4.5 மீற்றர் நீளமுடையவை வரை உள்ளன. மிஸ்ஸிஸிப்பி ஆற்றில் வாழும் நீலக் கெளுத்தி 73 கிலோ எடையுடையது. ஐரோப்பிய கெளுத்தி மீன் 180 கிலோ எடையுடையது. நைல் ஆற்றில் வாழும் ஒரு இனம் எதிரிகளின் கண்ணில் படாமலிருக்க கருமையான வயிற்றுப் பகுதியைத் திருப்பிக்கொண்டு மல்லாந்த நிலையில் நீந்திச் செல்லும்.



தெற்கு ஆசியாப்பகுதியில் வாழும் 60 செ.மீ நீளமும் ஏறக்குறைய 600 கிராம்கள் எடையும் கொண்ட ஒரு இனம் தரையில் நடக்கக்கூடியது. ஒரு ஆற்றிலிருந்து இன்னொரு ஆற்றிற்கு நிலப்பரப் பின் வழியாகச் செல்லக்கூடியது. இதற்கு உதவுவது இதன் மார்புத் துடுப்புகள்.

கெளுத்தி மீன்களில் எருதுத்தலை என்று ஒரு இனம் உள்ளது. வட அமெரிக்காவில் கிழக்குப் பகுதியில் நன்னீர் நிலைகளில் வாழும் இனம் இது. இந்த மீன் 40 செ.மீ நீளமும், 1முதல் 1.3 கிலோ எடையுமுடையது. இதன் வாயைச் சுற்றி நான்கு சோடி உணர்கைகள் உள்ளன. சேறு நிறைந்த குளங்கள், ஓடைகளில் வாழும் இவை நீர்வற்றி உலர்ந்து போனாலும் தாக்குப்பிடித்து வாழக் கூடியவை. உணவு மீனான இதன் இறைச்சியில் மண் மணம் வீசும்.

புல்லினால் கூடுகட்டி முட்டை களிடும். முட்டைகள் பொரிந்து குஞ்சுகள் வெளிவரும்வரை ஆண் மீன் கூட்டைக் காவல் காக்கும்.

கடல்வாழ் கெளுத்தி மீன்கள் கோடை காலத்தில் கடற்கரை ஓரங்களில் காணப்படும். குளிர்காலத்தை கடலின் ஆழமான பகுதியில் கழிக்கின்றன. இவற்றில் ஈட்டி கூம்புக் குச்சி கெளுத்தி, வன்தலைக் கெளுத்தி, ஆகிய இரண்டும் குறிப்பிடத்தக்கவை.

ஈட்டிக் கூம்புக் குச்சி கெளுத்தியின் மார்புத் துடுப்புகளும் பின்புறத் துடுப்புக்களும் பெயருக்கேற்றபடி நீளமாகவும் ரிப்பன்போலவும் இருக்கும். இதன் கீழ்த் தாடையில் இரண்டு தசையிழைகள் துருத்திக்கொண்டிருக்கும். 60 செ.மீ நீளமும் 1முதல் 1.8 கிலோ எடையுமுடையது. வன் தலைக்கெளுத்தி உருவத்தில் சிறியது. இதைப் பொதுவாக ஒன்றுக்கும் உதவாத குப்பைமீன் என்று கூறுவதுண்டு.


இந்த இரண்டு இனங்களிலுமே அடைகாக்கும் தொழிலைச் செய்வது ஆண் மீன்களே. அதுவும் மிகவும் முற்றிலும் வித்தியாசமான முறையில் செய்கிறது. கருவுற்ற முட்டைகளை ஆண் மீன் தன் வாயிலேயே ஏந்திக்கொண்டு திரியும். ஆண் மீனின் வாயே முட்டைகள் பொரியும் கூடு. முட்டைகள் பொரிந்து குஞ்சுகள் வெளி வரும் இரண்டு மாத காலம்வரை ஆண் மீன் உணவே உண்ணாது.

## கைவண்ணம்



சு.வளர்மதி, தரம் –$5^{C}$, செந்தளிர் சிறுவர் இல்லம்.

## காட்டிலொரு பாடசாலை





அனுபவிக்கும் முறையில்தான் எம் மனம் அமைதியடையும். எம் வாழ்வில் நடந்த தீமையான விடயங்களை ஒவ்வொரு நாளும் எண்ணி ஏக்கம் கொள்ளும் நாம் ஏன் நடந்த மகிழ்வான விடயங்களையும் மீட்டிப் பார்க்கலாம் அல்லவா. அப்படி நாம் செய்தால் விடிகின்ற ஒவ்வொரு பொழுதுகளும் பொன்னான நாட்களாக எமக்குக்கிடைக்கும்.

எம் மனதில் ஞாபகங்கள் இருக்கத்தான் வேண்டும். அதனை வைத்தே எம் மனதை நிரப்பி துன்பப்படுத்தல்தான் வீணான செயல். துன்பங்கள், துயரங்கள் யாவற்றையும் மனதில் ஒரு மூளையில் மூடிவைத்தே நாம் நாளாந்தம் எம் கடமைகளைச் செய்யவேண்டும். தேவையில்லாமல் போன விடயங்களை எம்மனதில் இருந்து கிண்டி எடுத்து வசந்தமான எம் வாழ்வையே கிழித்தல் மிகவும் கீழ்த்தரமான செயல்.

**போனவற்றை எண்ணிக் கலங்கினால் எம் வாழ்வு சூனியமாகிவிடும்.**

# கலங்க வேண்டாம்..!

நாம் நடந்து முடிந்தவற்றை எண்ணி எண்ணி துன்பப்படும் போது அதனால் எமக்கு நன்மைகள் கிடைப்பதில்லை. மாறாக எம் வாழ்வு கீழ்மைப் படுத்தப்படுகின்றதே தவிர மேன்மை அடைய வழி பிறக்காது.

நாம் எந்தவொரு விடயமானாலும் பலமுறை பரிசீலித்தே அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும். எல்லாம் நடைபெற்ற பின் வருந்துவதால் எமக்கு பலாபலன்கள் கிடைப்பதில்லை. அப்படி தோல்வியான விடயங்கள் எம் வாழ்வில் ஏற்படும்போது அதனை ஒரு தோல்வி என எண்ணாமல் வெற்றியின் படிக்கற்களாக மாற்றி வாழ்வில் வெற்றியின் வருகைக்கு வழிவகுக்கவேண்டும்.

தோல்வியோ வெற்றியோ இரண்டினையும் எம்முடைய மனம் ஏற்கவேண்டும். தொடர்ந்து எமக்கு வெற்றிகள் வரும்போது அதனால் எம் மனது மகிழ்வடையாது. பல போராட்டங்களின் பின் கிடைக்கும் வெற்றியே உறுதியாய் உருப்படியாகக் கிடைக்கும்.

வாழ்வில் போன விடயங்களை மீட்டுப் பார்த்து அது ஏன் எமக்கு ஏற்பட்டது என்று கலக்கம் கொள்ளாமல் அதனை மாற்றியமைப்பது எப்படி என்று முயற்சி எடுக்கவேண்டும். கவலைகள், ஏமாற்றங்கள் வரும்போது எம்மனம் தளரக்கூடாது. அப்படியான நிலையில் நாம் எம்மனதை உறுதியாக்க வேண்டும். உறுதியான மனம் கொண்டவர்களின் வாழ்வே உருக்குலையாமல் இருக்கும்.

வாழ்க்கையென்றால் இன்பம், துன்பம் யாவும் நிறைந்தே காணப்படும். அதனை நாம் மனிதனாகப் பிறந்தோருக்கு யாருக்குத்தான் பிரச்சினைகள் இல்லை. இதனை நாம் ஏன் உணர மறுக்கின்றோம். "பிரச்சினைகள் நிறைந்ததே வாழ்வு" சிலருக்கு வாழ்க்கையே பிரச்சினை என்ற நிலையில் வாழ்கின்றனர். இவற்றை நாம் தகர்த்தெறியவேண்டுமானால் மனதை தூய்மைப்படுத்தவேண்டும். எம் மனதில் இப்படித்தான் வாழவேண்டும் என்ற ஒரு இலக்கை ஏற்படுத்தவேண்டும். என்னதான் வாழ்வில் இடர் வந்தபோதும் எம் மனம் ஒருமனமாகவே இருக்க வேண்டும். சில ஆண் பெண்கள் வெறுமனே "வாழ்வில் சமைத்தல், சாப்பிடுதல், கணவன் மனைவி பிள்ளைகள் குடும்பம் என்ற குறுகிய வட்டத்துக்குள் மட்டுமே தம் மனதை ஓட விடுகின்றனர். இப்படி நடப்போர் தம் மனதை இச் சமூகத்தின் செயற்பாடுகள் என்ற நிலையிலும் கொஞ்சம் திசை திருப்பினால் அவர்கள் வாழ்விலும் பல திருப்பங்கள் ஏற்படலாம்.

போனவற்றை எண்ணிக் கலங்கினால் எம் வாழ்வு சூனியமாகிவிடும். எப்படி பிரகாசமடையும். இவற்றை ஒவ்வொருவரும் நன்கு உணரவேண்டும். எம் வாழ்வை நாம் தான் வளமாக்க வேண்டும். வாழ்க்கை என்பது எம்மைச் சார்ந்ததே. வாழ்க்கையை சார்ந்தவர்கள் நாம் அல்லவே. நன்மை, தீமை இவை இரண்டும் சுலபமாக தீர்வது எம் கைகளில்தான். எம் வாழ்க்கைக்கு தேவை பிரச்சினைகளுக்கு தீர்வுகளே. படிப்படியாகத் தீர்வுகாணமுடியாத குழப்பங்களை எம் மனதில் நுழைத்து வசந்தத்தின் வாசல்களை அடைக்காமல் நாம் வாழ்வோம்.

**சு.சிவாஜினி**




உலகில் எங்கும் எதிலும் நிலைத்திருப்பது காதல் ஆகும். ஒன்றுடன் ஒன்று இணைபிரியாதவாறு ஒன்று சேரும நட்பே காதலாகும் என அறிஞர் ஒருவர் காதல் என்பதை வரையறுத்துள்ளார்.

இதனை சமூகம் தவறாகக் கருதும் ஒரு சொல்லாகப் பார்க்கிறது.. எனினும் காதல் என்பது அன்பு, கருணை, பாசம் என்னும் வெவ்வேறுபட்ட கருத்துக்களை தன்னகத்தே கொண்டுள்ளது.

இதனை கவிஞர்கள் சிறப்பாக சிறந்த வரிகளில் குறிப்பிட்டுள்ளனர். அவற்றில் ஆணுக்கும் பெண்ணிற்கும் காதல், விண்ணுக்கும் மண்ணுக்கும் காதல், பூவிற்கும் வண்டிற்கும் காதல் என்றெல்லாம் வர்ணிக்கப்படுகின்றது.

எனவேதான் காதல் இல்லாத வாழ்வு காயம்(உடல்) இல்லாத உயிரைப் போன்றது என்று குறிப்பிடப்படுகின்றது. மனிதனைப் பொறுத்தவரை பிறப்பில் இருந்து இறப்பு வரை காதல் தொடர்கிறது. இருபதில் ஏற்படுவது இளமைக்காதல், அறுபது வயதினில் அனுபவக் காதல் என்று ஒரு கவிஞர் குறிப்பிடுகின்றார்.

ஆனால் சமூகமோ ஒரு ஆணிற்கும் பெண்ணிற்கும் இடையில் ஏற்படும் காதலே காதல் என்பதற்கு வரைவிலக்கணமாகக் கருதி காதல் என்னும் கருத்தை தவறாகக் கருதுகின்றனர். ஆனால் இன்றைய இளைஞர் யுவதிகளிடையே ஏற்படும் காதல்களில் பல சீரழிவானதாக, சமுதாயத்தை பாதிப்பதாக அமைகின்றன. இதற்குக் காரணம் ஈடுபடும் நபர்களிடையே ஓர்

***பிறப்பில் இருந்து இறப்பு வரை காதல் தொடர்கிறது***



# காதல்

புரிந்துணர்வு அற்ற முறையில், தப்பானமுறையில் ஏற்படும் காதலாகும். இவ்வாறு ஈடுபடும் காதலர்கள், தவறான முறையில் தமது காதலைப் பயன்படுத்துதல், அதனை ஓர் பொழுது போக்காகக் கருதுதல் போன்ற செயற்பாட்டினாலேயே இன்று காதல் என்னும் பதம் கருத்தற்ற ஒரு எண்ணக் கருவாக அமைகின்றது.

எனினும் சில காதல்கள் எடுத்துக்காட்டாக அமைகின்றன. சாஜஹான், மும்தாஜ் மீது கொண்ட காதலின் பிரகாரம் காதல் ஓவியம் தாஜ்மஹால் கட்டப்பட்டது. காசியப்பன் ஓவியத்தின் மீது கொண்ட காதலின் நிமித்தம் சிகிரியா ஓவியம் வரையப்பட்டது. இவ்வாறு பல்வேறு சம்பவங்கள் தற்போதும் காணப்படுகின்றன. ஒரு திரைப்படமாகவோ அல்லது கதைகளாகவோ அல்லது எவ்வித விடயமாகவோ இருந்தாலும் காதல் என்னும் கருத்து இல்லாமல் அமைவதில்லை.

எதிர்பாலார் காதலில் தோல்வியடைந்த இளைஞர்கள், யுவதிகள் சில தவறான முடிவுகளை எடுக்கின்றனர். இது ஓர் தவறான செயற்பாடாகும். ஏனெனில் உண்மையான முறையில் புரிந்துணர்வுடன் ஏற்படுகின்ற காதல் எப்போதும் தோல்வியடைவதில்லை. அது உருக்குக் கம்பிகள் வைத்து சீமெந்தினால் உருவாக்கப்பட்ட தூண்களைப் போன்று உறுதியானது.

ஆனால் அழகு, சாதி, மதம், சீதனம், சமூக ஒடுக்குமுறை, பெற்றோர் உறவினர் எதிர்ப்பு போன்றவற்றினால் காதல் சிதைவடைகின்றது. இது உண்மையான உறுதியான காதல் அல்ல. உண்மையான புரிந்துணர்வுடன் ஏற்படுகின்ற காதல்கள் ஒருபோதும் ஒருவராலும் புறக்கணிக்கப்படுவதில்லை. மாறாக ஆதரிக்கப்படுவதேயாகும்.

"காதல் ஏற்படுவது தவறல்ல. ஆனால் அது சிறந்து வெற்றி பெறுதல் அவசியமானதாகும். இதுவே நாட்டிற்குச் சிறந்ததாகும்"

**ப.கஜேந்திரன்**

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




## குமரகுரு புடவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

### குமரகுரு பரிசுத்திட்டம்– 67

பெயர்:........................................

முகவரி:........................................

........................................

**குறிப்பு:**
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.


குமரகுரு பரிசுத் திட்டத்தின் 61தொடக்கம் 65 வரை பரிசு பெற்றவர்களின் பெயர் விபரம்.

**பரிசுத்திட்டம் –61**
தி.விஜயராணி,
N.T.R.S.கல்பிட்டி றோட்,
பனையடிதுறைச்சோலை,
புத்தளம்.

**பரிசுத்திட்டம் –62**
ர.நிருபாகுமாரி,
100 வீட்டுத்திட்டம்,
கைவேலி,
புதுக்குடியிருப்பு.

**பரிசுத்திட்டம் –63**
செல்வி.சு.ப.சாந்தகுமாரி,
பழம்பாசி,
நெடுங்கேணி.

**பரிசுத்திட்டம் –64**
திருமதி.அ.சத்தியகலா,
இல:43, 3ஆம் ஒழுங்கை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

**பரிசுத்திட்டம் –65**
வி.வானதி,
வலம்புரி பல்பொருள் வாணிபம்,
துணுக்காய்வீதி, மல்லாவி.

பரிசு பெறுவது தொடர்பான விபரத்தை நாங்கள் விரைவில் உங்களுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்துவோம்.

## உருளைக்கிழங்கு இனிப்பு





**தேவையான பொருட்கள்:-**

| | |
|---|---|
| உருளைக்கிழங்கு | -500 கிராம் |
| சீனி | -500 கிராம் |
| நெய் | -2மே.க |
| முந்திரிப்பருப்பு | -25 கிராம் |
| வனிலா | -2 தே.க |
| தண்ணீர் | -1/2 டம்ளர் |

**செய்முறை:-**

★கிழங்கை அவித்து உராய் கருவியில் உரஞ்சிக் கொள்க.
★சீனியைப் பாகு காய்ச்சிக் கம்பிப்பாகாக வரும் போது கிழங்குத் துருவலைச் சேர்த்துக் கொள்ளவும்.
★இறுகும் பருவத்தில் நெய்யிற் பொரித்த முந்திரிப்பருப்பு, நெய், வனிலா, இவற்றையும் சேர்க்கவும்.
★திரளும் பருவத்தில் இறக்கி நெய் பூசிய தட்டில் கொட்டி அழுத்திப் பரவவும்.
★விரும்பினால் கலரிங் சேர்த்துக்கொள்ளலாம். வற்றாளை மரவள்ளிக் கிழங்குகளிலும் இதே முறையைப் பின்பற்றலாம்.


யாழ்ப்பாணத்தில் செப்ரெம்பர்- 30 ஒரு பெரும் சுதந்திரப் போருக்கான
முழக்கத்துக்கு தமிழ் மக்களாகிய நாம் அக்கினியாய் அணிதிரள்வோம்,
எம்முடைய நிரந்தரமான சுதந்திர அபிலாசைகளை சர்வதேச உலகம் ஏற்றுக்கொள்ள
பொங்குதமிழ் 2005 எழுச்சி நிகழ்வில் யாழ் குடாநாட்டின் மக்கள் அனைவரும்
அணியணியாய் கலந்து கொள்வோம்.
இது வேசத்தின் வெளிப்பாடு அல்ல
விடுதலை உணர்வை அடி நெஞ்சில் புதைத்து
அக்கினி மீது சபதம் செய்து தமிழீழ தனியரசை
சர்வதேசமே ஏற்றுக்கொண்டு தமிழ் இனத்தின் சுதந்திர வாழ்வை
உறுதிசெய் என முழங்கும் தமிழ் மக்களின் உரிமைக்குரல்
விடுதலையின் தாகத்துடனும் பசியுடனும் தமிழர் நாம்
விழிகள் மூடிக்கிடக்கும் தருணம் அல்ல இது
எம் விழிகளை எரித்தோர் முன்னால் -விழிக்கும் நேரம் இது
விடியல் நெருங்குகிறது-விடுதலைத்தீப்பொறி அனலாக
இனவெறியர்களால் படுகொலை செய்யப்பட்டோர் முதல் உயிர்
உள்ளோர் வரை கேட்கும் உரிமையின் மந்திரம் விடுதலை விடுதலை விடுதலை என
உரத்து கோசம் இட்டு எழுந்து வாருங்கள்.
சிட்டி சென்டர் சுப்பர் மார்கட்
இல-32, கச்சாய் வீதி, சாவகச்சேரி.
(சி.12930)

# பாடநூலில் மலிந்துள்ள தவறுகள்



தமிழுக்கு அருந்தொண்டாற்றிய வெளி நாட்டவர்களுள் இத்தாலியரான "கொன்ஸ்ட்டன் ரைன் பெஸ்கி" என்பவர் முக்கியமானவர். தமிழுக்கு பங்காற்றியமைக்காக அவரை எல்லோரும் அறிந்து போற்றும் முகமாக தமிழ் மொழியும் இலக்கியமும் என்ற பாடநூல்களில் அவர் பற்றிய செய்திகள் அவரது படைப்புக்கள் பற்றிய விடயங்களும் சேர்த்துக்கொள்ளப் பட்டுள்ளன என்பது மகிழ்ச்சிக்குரியது. பாடநூல் களில் பெஸ்கியும் அவரது படைப்புப் பற்றியும் தகவல்களில் முரண்களும் குறைபாடுகளும் காணப்படுகின்றன. இதில் சற்று கவனம் செலுத்துவதே இப்பத்தியின் நோக்கம்.

தமிழ் மொழியும் இலக்கியமும் தரம்-8 பாடநூலில் "குதிரைக்கு தூண்டில் போட்ட கதை" என்ற பாடத்தில் (அலகு 12, பக்கம்-80) கொன்ஸ்ட்டன் ரைன் பெஸ்கி தமிழ் நாட்டிற்கு வந்ததும் வீரமாமுனிவர் எனும் தமிழ் பெயரைத் தனக்குச் சூட்டிக்கொண்டார் என்றுள்ளது.

பல்தேர்வுப்பாடநூலான தமிழ் மொழியும் இலக்கியமும் தரம் -7 பாடநூலில் "தேம்பாவணி எனும் பாடத்தில் கொன்ஸ்ட்டன் ரைன் பெஸ்கி இயற்றிய தேம்பாவணி காப்பியத்தின் சொல், பொருள் நயங்களையும் புகழ்ந்து மதுரைத் தமிழ்ச்சங்கமே வீரமாமுனிவர் எனும் பட்டத்தை வழங்கியது என்றுள்ளது.

இதில் எது உண்மை? பெஸ்கி தன்னைத்தானே வீரமாமுனிவர் என அழைத்தாரா? அல்லது மதுரைத்தமிழ்ச்சங்கம் அவருக்குப் பட்டம் வழங்கியதா?

இதில் உண்மை என்னவென்றால் கத்தோலிக்க பாதிரியாரான பெஸ்கி தனது இயற்பெயரோடு இருப்பின் இந்திய மக்களோடு அன்னியோன்னியமாக உறவாடி, தமது சமயப் பணியினை மேற்கொள்ள முடியாது என்பதால் தன்னை அவர் "தைரிய நாத சுவாமிகள்" என்றே கூறிக்கொண்டார். இப்பெயர் இந்து மதத்தோடு தொடர்புடையதாக உள்ளமை இங்கு குறிப்பிடக் கூடியது. பெஸ்கி தன்னை தைரியநாத சுவாமிகள் எனக் கூறிக்கொண்டு 1711 மே 8 இல் மதுரைக்கு வந்தார்.

மதுரைத் தமிழ்ச்சங்கம் தனித்தமிழை போற்றிப் பேணும் பணியில் ஈடுபட்டு வந்தது. அவ்வகையில் பெஸ்கி தன்னை அழைத்துக் கொண்ட "தைரிய நாத சுவாமிகள்" என்ற பெயர் வடமொழியானதால் அதனை மதுரைத்தமிழ்ச் சங்கம் வீரமாமுனிவர் எனத் தமிழ்ப்படுத்தியது.

பெஸ்கி தனக்கு வீரமாமுனிவர் என்ற பெயரை வைத்துக்கொண்டதோ அல்லது மதுரைத் தழிழ்ச் சங்கம் அவருக்கு பட்டம் வழங்கியதோ உண்மை அன்று. தமிழ்ச் சங்கம் செய்ததெல்லாம அவர் தனக்கு வைத்துக்கொண்ட பெயரைத் தமிழாக்கியது மட்டுமே. மதுரைத தமிழ்ச்சங்கம் பட்டம் வழங்கியது என்ற கூற்றுத் தவறான ஒன்று. இவ் விடயம் பாடநூல்களில் தெளிவு அற்றதாகவும் குழப்பமாகவும் கூறப்பட்டுள்ளது.

மேலும் தரம்-7 பாடநூலில் பெஸ்கி சுப்பிரதீபக் கவிராயரிடம் தமிழ் மொழியைக் கற்றதாகக் கூறப்பட்டுள்ளது. பெஸ்கி இன்னாரிடந்தான் தமிழ் கற்றார் என அறுதியிட்டுக் கூறக்கூடிய சான்றுகள் எவையும் இல்லை.

17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தத்துவ போதகர் இறாட்டு தே நோபி லியையும் 18ஆம்நூற்றாண்டவரான வீரமா முனிவரையும் ஒன்றாகவே கருதி மயங்கி சிலர் எழுதியுள்ளனர். இவர்களில் வீரமாமுனிவருக்கு தமிழ் கற்பித்தவர் சுப்பிரதீபக் கவிராயர் எனக் கூறுகின்றனர். இவை ஒருபுறமிருக்க திரு. மு. அருணாசலம் கூளப்ப நாயக்கன் பதிப்புரையிலும் விவேகானந்த கேந்திர மலரிலும் முறையே தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதிய கட்டுரைகளில் வீரமாமுனிவருக்கு தமிழ் கற்பித்தவர் சுப்பிரதீபக் கவிராயர் எனக்குறிப்பிடுகின்றார். இதற்காக இவர் சான்றுப் படுத்துவன மிகப் பலவீனமாகவே உள்ளன. காலம், இடம் என்பன மிகுந்த முரண்பாடானவையாகவே உள்ளன. கூறப்படும் சம்பவங்களும் நம்பகத் தன்மை குறைந்தவையே. அதாவது 1730இற்கு பிறகு கவிராயர் வீரமாமுனிவரைச் சந்தித்து அவருக்கு தமிழ கற்பித்ததாக அருணாசலம் தனது கட்டுரையில் குறிப்பிடுகிறார். ஆனால் அதற்கு முன்னரே வீரமாமுனிவர் தமிழில் நூல்களை இயற்றியுள்ளமை கவனிக்கத் தக்கது. 1726 இல் தேம்பாவணியும் (செய்யுள் காவியம்) 1728 இல் கொடுந் தமிழ இலக்கணமும் 1728 இல் செந்தமிழ் இலக்கணமும் 1732 இல் சதுரகராதியும் எழுதியுள்ளார். இதில் 1730 இன் பின் எழுதிய நூல் சதுரகராதி மட்டுமே. 1730 இன் பின் கவிராயரிடம் கற்று சதுரகராதியை எழுதியிருப்பார் எனக் கொள்ளினும் ஏனைய நூல்களை அதுவும் இலக்கிய (செய்யுள்) இலக்கண நூல்களை தமிழில் எவ்வாறு எழுதி இருப்பார்?

எனவே காலம், இடம் என்பவற்றை வைத்து நோக்கும் போது வீரமாமுனிவர் சுப்பிரதீபக்கவிராயரிடம் தமிழ் கற்றதாகக் கருது வதற்குப் போதிய சான்றுகள் இல்லை.

கவிராயர்(திருமலை நாயக்கர் காலத்தவர்- 17 ஆம் நூற்றாண்டு) வீரமாமுனிவர் 18 ஆம நூற்றாண்டின் தொடக்கத்திலேயே (1711.மே.08) மாமதுரையைப் பொறுப்பேற்றுள்ளார்.

வீரமாமுனிவர் தமிழ், வடமொழி இரண்டிலும் புலமைமிக்கவராகத் திகழ்ந்தார். வடமொழியையும் தமிழ் மொழியையும் ஒருங்கே கற்றிருக்க வேண்டும். அது தான் "வாக்கியம் சித்தாந்தம்" வடமொழி நூலையும் சம காலத்தில் இயற்ற வழிகோலியுள்ளது என்று குறிப்பிடும் பேராசிரியர் பா.வளன் அரசு, வீரமா முனிவர் காலத்தில் வாழ்ந்த தமிழிலும் வட மொழியிலும் புலமை மிக்கவராக விளங்கிய சுப்பிரமணிய தீட்சிதர் என்பவரிடம் வீரமாமுனிவர் தமிழ் கற்றிருக்க வேண்டும் என்கிறார். (இத்தீட்சிதர் பிரயோக விவேகம் எனும் வடமொழி இலக்கண நூலை தமிழில் இயற்றியவர் என்பதும் நினைவு கூரத்தக்கது) இதற்காக இவர் கூறும் சான்றுகள் காலமும் இடமும் பொருந்தி வரக்காணலாம். அதாவது இருவரும் 18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள் என்பதோடு, வீரமா முனிவர் தமிழ் கற்றதாகக் கருதப்படும் தூத்துக்குடி(1711) காமநாயக்கன் பட்டினம் (1715) ஆகிய இடங்களுக்கும் சுப்பிரமணிய தீட்சிதருக்கும் தொடர்புகள் இருந்துள்ளன.

வீரமாமுனிவர் தமிழ் கற்றதாக வெவ் வேறு தரப்பினரால் கூறப்படும் இருவரில் காலம், இடம் பொரு[illegible]ம்பகத்தன்மையுடையதாக சுப்பிரம[illegible]சிதரே காணப்படுகிறார். இது இவ்வா[illegible]க்க சுப்பிரதீபக்கவிராயரிடம் வீரமாமுனிவர் தமிழ் கற்றார் என ஊகங்களின் அடிப்படையில் கூறப்பட்ட கூற்றை வைத்து எவ்வாறு முடிவெடுத்தனர். அதனையே பாட நூலில் எவ்வாறு குறித்தனர் என்பது நியாயமான வினா அன்றோ!

தரம்-7 தமிழ்மொழியும் இலக்கியமும் பலதேர்வு பாடநூலில் தேம்பாவணி பாடத்தில் வீரமாமுனிவர் தேம்பாவணி காவியத்தை இயற்ற காரணமாக அமைந்த முதல் நூல் எது? என கிரகித்தல் வினாவாகக் கேட்கப் பட்டுள்ளது. ஆனால் இது பற்றிய செய்தி பாடப்பரப்பில் தரப்படவில்லை. இதனால் கற்பிக்கும ஆசிரியரும் மாணவர்களும் இடர்படுகின்றனர். இவ்விட யம் பாடப்பரப்பில் கூறப்படாது விடப்பட்டுள்ளமை தவறாகும். சிலவேளை ஆசிரியர்கள் தேடலில் வறுமையுற்றுப் போய்விட்டனர். தேடலை ஊக்குவிக்கும் முகமாக வேண்டுமென்றே தரப்படாது விடப்பட்டுள்ளதோ தெரியவில்லை. அவ்வாறு இருக்க வாய்ப்பில்லை. நூலக வசதிகள் அற்ற பல கிராமப்புறங்களில் கற்பிக்கும் ஆசிரியர், தேடலில் அவருக்கு ஆர்வம் இருப்பினும் அதற்கான வசதியில் லாததால் மாணவர்களுக்கு இவ்விடயத்தில் வழிகாட்ட முடியாது போய்விடுகின்றது. மாணவர்களின் வினாவிற்கு விடை தருவ தற்கு பதிலாக பிறகு சொல்வதாக மழுப்பி சமாளித்து, பாடத்தை நடத்தி முடித்து பின் சொல்லாமலே விட்டுவிடும் நிலையையே தரம் 7 பாடநூல் தந்துள்ளது.

வீரமாமுனிவர் தேம்பாவணி காவியத்தை இயற்றுவதற்குக் காரணமான மூலநூல் எது? "ஆகிர்தமரி" என்பவர் இஸ்பானிய மொழியில் பத்து ஆண்டுகளாக எழுதி (1655-1665) 1665 ஆம் ஆண்டு முடிக்கப் பட்ட "கடவுளின் நகரம்" எனும் நூலில் கூறப்படும செய்தி அடிப்படையிலேயே வீரமாமுனிவர் தேம்பாவணி காவியத்தை இயற்றினார். என்பது நூலில் உள்ள சில தொடர்கள் உணர்த்தி நிற்கின்றன.

மேலும் தேம்பாவணி காப்பியம் திருத்தக்க தேவரின் சீவகசிந்தாமணிக்கு இணையானது எனக்கூறியவர் யார்? என பிறிதொரு கிரகித்தல் வினா ஒன்று பாடநூலில் உள்ளது. இதற்குரிய விடையும் பாடப்பரப்பில் இல்லை.

வீரமாமுனிவர் பற்றியும் அவரது படைப்புகளின் சிறப்புக்கள் பற்றியும் தமிழ் நாட்டில் பல இடங்களிலும் பல்கலைக்கழகங் களிலும் பல ஆய்வுகளையும் சொற் பொழிவு களையும் நிகழ்த்திய பேராசிரியர் பா.வளன் அரசு அவர்கள், அன்பர் ஒருவரின் வினாவுக்கு விடை கூறும் போது திருத்தக்க தேவரின் சீவக சிந்தாமணிக்கு நிகரான காவியமாகவே தேம்பாவணி திகழ்கிறது. என்றும் கிறிஸ்தவ தமிழ்க்காப்பிய உலகில் தேம்பாவணி மணி முடியாக மிளிர்கிறது என பதில் கூறியுள்ளார் என்பதை மட்டுமே அறிந்து சொல்லக் கூடியதாக இருக்கிறது.

இத்தாலியரான பெஸ்கி, தமிழ் மொழியை ஆழமாக நேசித்து தமிழுக்கு அவர் ஆற்றிய அருமபணிகள் போற்றுதற்குரியவை. தமிழர்களாய் இருந்தும் தமிழ்மொழியையும் பண்பாட்டையும் மறந்தும் இழிவுபடுத்தியும் உலாவுகின்ற எம்மவர் சிலருக்கு, வீரமாமுனி வரும் அவரது படைப்புகளும் நல்லதொரு பாடமாகும். அவ்வகையில் வீரமாமுனிவர் பற்றிய செய்திக் குறிப்புக்கள் பாடப்பரப்பில் சேர்க்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. மகிழ்ச்சிக்குரியது. அதே-வேளை இதிலுள்ள குறைபாடுகளை களைவதும் அவசியமல்லவா?

**தருமை வதனன்.**

---

*இவ்வுலகில் எத்துணை பேராற்றல் வாய்ந்த மனிதனும் அவன் எடுத்துக்கொண்ட காரியத்தை செவ்வனே செய்து வெற்றி பெறுவதற்கு ஏற்ற துணை அவசியம். ஏற்ற துணையின்றி எத்தகைய ஆற்றல் வாய்ந்தவனும் தனித்து வினையாற்றி வெற்றி காணல் இயலாததொன்று. பேராற்றல் வாய்ந்தோனுக்கும் தகுந்த துணை அவசியம் என்பது மறுதலிக்க முடியாது.*

*இதனை பெண்புலவர் ஔவை தன் மூதுரையில் ஒரு பாடல் மூலம் சிறப்பாக எடுத்துக்காட்டுகிறார்.*

*"பண்டு முளைப்ப தரிசியே யானாலும்*
*விண்டுமி போனாற் முளையாதாங் – கொண்டபேர்*
*ஆற்றலுடையார்க்கும் ஆகா தளவின்றி*
*ஏற்ற கருமஞ் செயல"*

*என்பதே அப்பாடல். அதாவது (உமி நீக்குவதற்கு) முன்னே முளைப்பது அரிசியேயாயினும் உமி நீங்கிப்போனால் (அவ்வரிசி) முளையாது (அதுபோல) தம்மிடத்தில் நீங்கா பெரும் வல்லமையை உடையவர்க்கும் துணை வலி இல்லாமல் எடுத்துக்கொண்ட தொழிலை செய்தல் முடியாது என்பதே பாடலின் பொருள்.*

*ஔவையின் இப்பாடல் தமிழ் மொழியும் இலக்கியமும் தரம் 10,11 (கட்டாயமானது) பாடநூலில் நீதிப்பாடல்கள் II எனும் தலைப்பில் தரப்பட்டுள்ளது. கூடவே அதற்கான பொருளும் தரப்பட்டுள்ளது. இப்பாடநூலிலுள்ள பொருள் இதுதான்,*

*(பாடநூலில் உள்ளவாறு தரப்பட்டுள்ளது)*

*"நெல்லில் இருக்கும் அரிசியே முளைக்கும் என்றாலும் அரிசியை மூடியுள்ள உமி இல்லாவிட்டால் அது முளைக்காது. நிறைந்த வலிமையுடையவர்களும் அளவுக்கு அதிகமான செயல்களை செய்து தகாது (பொருத்தமற்றது)" என்கிறது.*

*பாடலின் இறுதி இரு வரிகளின் பொருளும் பாடநூலில் பிழையாக உள்ளது. பேராற்றல் உடையோரும் துணைவலி இன்றி எடுத்துக் கொண்ட காரியத்தை செய்து முடியாது என்பதே சரியானது. பாடநூலில் பேராற்றல் வாய்ந்தோரும் அளவுக்கு அதிகமாக செயல்களைச் செய்யக்கூடாது என்பது தவறானதாகும். பாடலில் அளவு என்பதற்கு துணை என்று பொருள் கொள்ளாமல் பரிமாணம் என பொருள் கொண்டதன் விளைவாக பாடலின் பொருளே தலைகீழாக மாற்றப்பட்டுள்ளது.*

*இத்தகைய தவறான பொருள் தரும் பாடநூல் மாணவர்களைச் சரியாக வழிநடத்தும் என எங்ஙனம் நம்புவது?*

# ஏ9 – எரம்பு

# ஒவ்வொரு மனிதனும் சூழலை பாதுகாக்கவேணும்







வணக்கம் பிள்ளையள்! என்ரை கோலத்தைப் பார்த்து என்ன நடந்ததெண்டு கேட்டுப் போடாதயங்கோ. சே! இப்பிடியே என்னண்டு மெயின் ரோட்டுக்கு வாறதெண்டு யோசிச்சனான். இருந்தும் முடிக்கவேண்டிய முக்கியமான அலுவல்கள் கிடந்ததால வீட்டை போய் உடுப்பு மாத்திக் கொண்டுவர நேரமில்லாமல் போயிட்டுது. இல்லை நான் சத்தியமாய் ஒழுங்காய் ஓரமாய் சைக்கிளில வந்துகொண்டிருந்தனான்.

இருந்தாப்போல பெரிய சத்தத்தில "கற்றறீனா... கற்றறீனா!" எண்டமாதிரி ஒரு சத்தம் கேட்டதுதான் தாமதம்! கண்ணை மூடித் திறக்கிறதுக்குள்ளை சேத்துவாய்க்காலால விழுந்தெழும்பி உள்ள வேலியெல்லாம் தொட்டு வேட்டி கிழிபட்டு ஒரு மாதிரி வைரவர் கோயில் வளவுக்குள்ள கிடந்ததொரு பிட்டியொண்டில ஏறிட்டுத்தான் எல்லாப்பக்கமும் சுத்திச்சுத்திப் பார்த்தன்.

ஒரு சூறாவளியையும் காணேல்லை. இல்லை ஆராவது சீரியஸாய் எச்சரிக்கை விடுக்கேக்கிளை அதுக்கேற்ற மாதிரி நாங்களும் நடக்கோணுமெல்லோ! கொஞ்சக்காலத்துக்கு முன்னால "கற்றறீனா" மாதிரி அனர்த்தங்கள் எல்லாத்துக்கும் பொம்பிளையளின்ரை பேர் தான் வைச்சிருக்கினம். ஓமோம்! அறிவியலாளர்கள் எண்டால் சும்மாவே, எல்லாத்திலையும் தெளிவான ஆக்களெல்லே அவையள். எனக்கொரு சந்தேகம் : உந்த "ஓசோன்" படலத்தில ஓட்டை விழுகிறதை மட்டுப்படுத்திறதுக்காக முன்னணி நாடுகள் (ஏட்டிக்குப்போட்டியாய் ஓட்டை போட்ட நாடுகள்) சேர்ந்து "கியோற்றோ" உடன்படிக்கை எண்ட ஒண்டைச் செய்தவை.

ஆனால், அமெரிக்கா மட்டும் ஓசோன் படலம் சேதமடையிறதுக்கு தொழிற்சாலை மற்றும் வாகன அசுத்தவாயுக்கள் காரணமில்லை, அதிலையும் முக்கியமாய் தாங்கள் காரணமில்லை எண்டு உடன்படிக்கையில இருந்து நழுவீட்டுது. உந்த விசயங்களிலை அமெரிக்காவை வழிக்குக் கொண்டுவர ஐரோப்பிய நாடுகள் பாடுபட்டும் பலனில்லாமல் போயிட்டுது. இப்பயே ஓசோனில கிட்டத்தட்ட ஐரோப்பாக்கண்டம் அளவுக்கு ஓட்டை விழுந்திட்டுது.

கள், அவற்றை நாங்கள் பயன்படுத்திற விதம் எண்டிறதிலை யெல்லாம் கவனமாய் இருக்கோணும். முக்கியமாய் பிளாஸ்ரிக் குப்பையளை எரிக்கிறது, வாகனங்களை ஸ்ராட்டில விட்டிட்டு கூட்டாளிப்பொடியங்களோட அதைச்சுக் கொண்டிருக்கிறது, சேத்தண்ணி குடிக்கப் போறது எண்டதையெல்லாம் தவிர்க்கப் பார்க்கோணும். ஏனெண்டால் வாகனங்கள் ஓடேக்கிளை எரிபொருள் (கிட்டத் தட்ட) முழுமையாய் எரிஞ்சு சக்தியாய் பிரயோசனப்படும்.

ஆனால், ஓடாமல் ஸ்ராட்டில நிற்கேக்கிளை அரைகுறையாய் எரியிறதால, காபனீரொட்சைட் வெளிவிடப்படுறதுக்குப் பதிலாய் காபன் மொனொக்சைட்டை அது வெளிவிடுது. "அது என்னத்தை வெளிவிட்டாலும் எங்களுக்கென்ன? ஆளை விடுங்கோ!" எண்டு மட்டும் தயவு செய்து குஞ்சுகள் கேட்டுப் போடாங்கோ.

இந்த காபன் மொனொக்சைட்டின்ரை குறியீடு CO. அதாவது ஒரு காபனும், ஒரு ஒட்சிசனும் ஒட்டியிருக்கிது. எங்கட ஓசோன் படலத்தின்ரை குறியீடு $O_3$. அதாவது மூண்டு ஒட்சிசன் ஒட்டியிருக்கிது. ஏ9இல 2 தம்பியவை (அல்லாட்டி 2 தங்கச்சியவை எண்டும் எடுக்கலாம்) ஸ்ராட்டில மோட்டார் சைக்கிளை வைச்சுக் கதைச்சுக்கொண்டிருக்கினம் எண்டு வைப்போமன். சைலெஞ்சரால அரைகுறையாய் வெளியேறுகிற காபன் மொனொக்சைட் (CO) வளியைவிட பாரம் குறைஞ்சிருக்கிறதால, வலு குசாலாய் மேல போய் ஒழுங்காய் இருக்கிற 3 ஒட்சிசனையும் (அதுதான் எங்கட ஓசோன் $O_3$) குழப்பியடிச்சுக் கலைச்சு, அலுவல் குடுத்திடும்.

பேந்தென்ன வடிகட்டப்படாத சூரியஒளி நேர வந்து ஒருநூறு பாதிப்பை உண்டுபண்ணும். இது மட்டுமில்லாமல் ஓசோன் இன்னும் வேற வழிகளிலையும் கடுமையாய் சேதமுறுது. ஆகவே நாங்கள் விழிப்பாய், பொறுப்பாய் இருக்கோணும்.

சரி வேட்டியெல்லாம் ஒரேசேறு, இந்தக்கோலத்தில கனநேரம் ஏ9இல இருக்கக் கூடாது. வெளிக்கிட முன்னாடி ஒரு புதினம்.

வெட்டவெட்ட உடலுறுப்புகள் முளைக்கக்கூடிய வகையில ஆராய்ச்சியாளர்கள் ஒரு சாதனையைச் செய்திருக்கினம். இழக்கப்பட்ட ஒரு உறுப்பை மீளவும் சுயமாகவே உருவாக்கிக்கொள்ளக்கூடிய வகையில, அந்த விசயங்களுக்குப் பொறுப்பான மரபணுக்களில (ஜீன்) சில மாற்றங்களைச் செய்த ஒரு எலிக்கு வெட்டின வால், கால் எல்லாம் திரும்ப வளர்ந்திருக்கிதாம்.

சாதாரணமாய் எங்கட உடலில இருக்கிற கிட்டத்தட்ட 25,000,000,000 கலங்களில ஒவ்வொரு விநாடியும் ஒரு தொகை கலங்கள் அழிய, புதிசுகள் உருவாகிக்கொண்டிருக்கிற விசயம் உங்களுக்குத் தெரிஞ்சதுதானே! அப்பிடி மீளுருவாக்கம் நடக்கிற வேகத்தை செயற்கையாக அதிகமாக்கிறதன் மூலம்தான் இது சாத்தியமாக்கப்படுது. எலியில கைகூடியிருக்கிற இந்த அபூர்வம் எங்களுக்கு எப்ப சரிவரும் எண்டிறது இன்னும் அறியப்படேல்லை.

ஏனெண்டால் கலங்கள் மளமளவெண்டு உற்பத்தி ஆகிறதால ஆயுள் குறைஞ்சு, வேளைக்கே போய்ச்சேரக்கூடிய ஆபத்தும் இருக்கிதாம். ஏதோ எல்லாரும் எதிர்பார்ப்போட பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட அந்த எலிக்கு நீண்ட ஆயுள் வேண்டிப் பிரார்த்திப்போம். ஐசா! அப்ப மூளையை வெட்டி விட்டால் புதுப்புது மூளையும் வளருமெண்டு ஆற்றையன் மூளை ஐடியா போட்டால், அவையளுக்கு ஒரு விசயம் : மூளைக்கு மட்டும் இந்த மீளுருவாக்க வசதி சரிப்பட்டு வராதாம். எனக்கு இந்த முதல் யோசனையும் உதுதான். ஆனாலும் என்ன செய்யிறது! எனக்கும் கவலைதான். ஏதோ இருக்கிறதை வைச்சு சமாளிப்பம்! அப்ப வாற முறை சந்திப்போம். சொன்ன விசயங்களை ஒருக்கால் திரும்பிப்பாருங்கோ!

கியூபாவில வரப்போகுது எண்டு எச்சரிக்கை வந்த உடன எல்லாச் சனமும் அரசாங்கத்தால வெளியேற்றப்பட்டதாலதான் ஒரு உயிரிழப்பும் இல்லாமல் தடுக்க முடிஞ்சிது.

ஆனால், அமெரிக்காவான அமெரிக்காவில வாகன வசதியள் இல்லாமல் எவ்வளவு சனம் அநியாயமாய் பலியாகிட்டினம், பாவங்கள். இப்ப அங்கத்தைய பொருளாதார இழப்பைச் சரிக்கட்டிறதுக்கு ஈராக்கில அமெரிக்கா செலவிடிறது மாதிரி 2 மடங்கு தொகை, 150 பில்லியன் (150,000,000,000) டொலர் தேவைப்படுகிதாம்.

4 லட்சம் அமெரிக்கச் சனம் வேற வேலையிழந்திட்டதால அவையின்ரை குடும்பங்களையும் பார்க்கவேண்டிய சுமையெல்லாம் புஷ்ஷிலதானாம் பொறிஞ்சிட்டுது. அப்பிடி உலக நிலைமையள் இருக்கிறதால தான் நானும் சத்தம் கேட்டவுடன பிட்டிக்குப் பாய்ஞ்சிட்டன். கால் மணித்தியாலமாய் நிண்டு பார்த்தும் ஒண்டையும் காணக்கிடைக்காததால, சைக்கிளைப் போட்டிட்டு ஓடின இடத்துக்கு மெல்லத் திரும்பி வந்தாப்பிறகுதான் எனக்கு விசயம் விளங்கிச்சிது.

அது ஏதோ "மக்கரீனா... மக்கரீனா!" எண்டு முன்வீட்டு றேடியோவில சத்தமாய் போட்ட பாட்டுப் பாருங்கோ! அதிலை கனநேரம் நிண்டு மினைக்கெட்டால் மரியாதைக்கேடு எண்டிட்டு மெல்லமாய் மாறீட்டன்.

சுனாமி வந்து ஒருவருசம் ஆகேல்லை, திரும்ப இப்ப கற்றறீனா. அதிலையும் சுனாமி, கற்றறீனா, றீற்றா எண்டு உந்த தட்ட ஐரோப்பாக்கண்டம் அளவுக்கு ஓட்டை விழுந்திட்டுது.

அப்பிடியிருக்க நிலைமை தொடர்ந்தால் ஆக்ரிக், அந்தாட்டிக்-பனிப்பாறையள் வேற உருகி, கடல் மட்டம் உயர்ந்து... என்ரை கடவுளே! நினைக்கவே எவ்வளவு பாரதூரமான விசயமாய் கிடக்கிது. மற்றது இது கனெல்லாம் தனிய வெள்ளைக்காரருக்குரிய விசயங்களில்லை.

கடல் மட்டம் உயர்ந்தால் உலகம் பூராவும் ஒரேமட்டமாய்த்தான் உயரும். அப்பிடியிருக்க எங்கட மண்ணிலையும் "சூழல் நல்லாட்சி ஆணையம்" என்டொரு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது ஓரளவுக்கு நிம்மதி மூச்சுவிட வழிசெய்திருக்கிது.

தலைவரின்ரை எண்ணக்கருவில வந்த இப்பிடியான சூழல் நல்லாட்சி ஆணையத்தின்ரை எதிர்பார்ப்புகள் நிறைவேறிறதுக்கு ஒவ்வொரு மனுசனும் சூழலைப் பாதுகாக்க வேண்டிய (குறைந்தபட்சம் நாசமாக்காமல் விடவேணும்) தன்னோட கடமையை உணரத் தலைப்படோணும். அதைவிட்டிட்டு கடமையளைக் கவனிக்காமல் வீட்டிட்டு ஏதாவது மோசமாய் நடந்தவுடன, புற்றீசல் மாதிரி வாற "லோக்கல் சயன்ரிஸ்ற்" மாரின்ரை முட்டாள்தனமான பேட்டியளை நம்பி காசைக் கரியாக்கக் கூடாது. அவனவன் செவ்வாய் தேசத்திலையே ரிமோட் கார் ஓட்டி விளையாடிறாங்கள்.

இஞ்சை சிலர் தோசங்களும், தீர்க்கதரிசனங்களும் பத்தாதெண்டு இயற்கை அனர்த்தங்கள் நடந்தெல்லாம் பிரேதங்கள் எடுத்[illegible]பிறகு, தங்களுக்கு நட[illegible]ாகுதெண்டு முந்தியே தெரியும் அதுஇதெண்டு அலட்டத் தொடங்கிடுவினம்.

உந்த "லோக்கல் சயன்ரிஸ்ற்" மாரெல்லாம் எண்டைக்குத் துலைஞ்சு போயினமோ அண்டைக்குத்தான் எங்கட நாட்டில உண்மையான விஞ்ஞானியள் உருவாக வழிகிடைக்கும். இந்த இடத்தில உப்பிடிப்பட்டதுகள் இருந்தும் A/L

**தலைவரின்ரை எண்ணக்கருவில வந்த இப்பிடியான சூழல் நல்லாட்சி ஆணையத்தின்ரை எதிர்பார்ப்புகள் நிறைவேறிறதுக்கு ஒவ்வொரு மனிமனுசனும் சூழலைப் பாதுகாக்கவேண்டிய (குறைந்தபட்சம் நாசமாக்காமல் விடவேணும்) தன்னோட கடமையை உணரத்தலைப்படோணும். அதைவிட்டிட்டு கடமையளைக் கவனிக்காமல் வீட்டிட்டு ஏதாவது மோசமாய் நடந்தவுடன, புற்றீசல் மாதிரி வாற "லோக்கல் சயன்ரிஸ்ற்" மாரின்ரை முட்டாள்தனமான பேட்டியளை நம்பி காசைக்கரியாக்கக் கூடாது. அவனவன் செவ்வாய் தேசத்திலையே ரிமோட் கார் ஓட்டி விளையாடிறாங்கள்.**

கணிதப்பிரிவில பரீட்சை எழுதி தேசிய மட்டத்தில முதலாவதாய் வந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தம்பி மயூரனை நாங்களெல்லாரும் பாராட்டி வாழ்த்தோணும். எங்கட கல்விக்கழக சார் அமைப்புகளும் இந்தத்தம்பியை உரிய முறையில தட்டிக்குடுக்கும் எண்டு நாங்கள் எதிர்பார்க்கலாம்.

எங்கை விட்டனான்?.. அயத்திட்டுது! ஆ... அதுதான் பிள்ளையள் சூழல் விசயத்தில நாங்கள் மிச்சம் பொறுப்போட நடக்கோணும். தென்னிந்தியாவில சேதுசமுத்திரக் கால்வாய் கிண்டத்தொடங்கினாப்பிறகு அடிக்கடி அலை உள்ளுக்குள்ளை வருகிதாம்.

எலிக்கு 3 கால்தான் எண்டு நிக்கிற எருமையளை எங்களால என்னசெய்யமுடியும். சரி அதைவிடுவம். இஞ்சை நாங்கள் பயன்படுத்திற பொருட்



# விளையாட்டு

சுப்பர் சீரியஸ் கிரிக்கெட் போட்டியில் சிறப்பாக ஆடி இழந்த பெருமையை மீட்போம் என்று அவுஸ்திரேலிய அணி கப்டன் ரிக்கி பொண்டிங் பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி கப்டன் ரிக்கி பொண்டிங் நிருபர்களுக்குத் தெரிவிக்கையில்:-

இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் டெஸ்ட் தொடரை இழந்ததன் மூலம் ரசிகர்களிடையே அதிருப்தி எழுந்தது. ஆஷஸ் தொடரில் இழந்த பெருமையை சுப்பர் சீரியஸ் கிரிக்கெட் போட்டியில் சிறப்பாக ஆடி வெற்றி பெற்று மீட்போம். டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டியிலும் நாங்கள்தான் தலை சிறந்த அணியாக உள்ளோம். தற்போதும் எங்கள் அணிதான் முதலிடத்தில் உள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது. சுப்பர் சீரியஸ் போட்டியில் உலக அணியை எதிர்கொள்ள நீண்ட காலமாக எதிர்பார்த்து காத்திருக்கிறோம்.

மற்ற அணியினரை ... ணியினர்



## ஆஷஸில் இழந்த பெருமையை சுப்பர் சீரியஸில் மீட்போம்

### ரிக்கிபொண்டிங்

ஒருங்கிணைந்து ஆடுவதில் கில்லாடிகள்.இது எங்கள் அணிக்கு கூடுதல் பலமாகும். ஆஷஸ் டெஸ்டின் தோல்வி காரணமாக பயிற்சியாளர் புக்காணனை குறை கூறக்கூடாது. அவரது பயிற்சியின் கீழ்தான் அவுஸ்திரேலிய அணி அதிக வெற்றிகளை குவித்துள்ளது. எனவே அவரை குறைத்து மதிப்பிடக்கூடாது. என்னுடைய ஆதரவு எப்பொழுதுமே அவருக்கு உண்டு. இவ்வாறு ரிக்கி பொண்டிங் கூறினார்.

## சப்பல்-கங்குலி மோதல்; முடிவு சமநிலையில்

சப்பல் - கங்குலி விவகாரத்தில் இந்திய கிரிக்கெட் சபை எடுத்துள்ள முடிவானது இந்திய கிரிக்கெட் வளர்ச்சிக்கும், எதிர்காலத்திற்கும் ஆரோக்கியம் மிக்க தொன்றாக இருக்கப்போவதில்லை என கிரிக்கெட் விமர்சகர்கள் ஆரூடம் தெரிவிக்கின்றனர்.

மேற்படி விடயத்தில் இந்திய கிரிக்கெட் சபை இருவரையும் சமாதானப்படுத்தும் வகையில் தங்களின் தீர்மானங்களை எடுத்துள்ளனர். கங்குலி தொடர்ந்து அணியின் தலைவராக நீடிப்பார் என்றும், சப்பல் பயிற்சியாளராக தொடர்ந்து பதவி வகிப்பார் என்றும் இந்திய கிரிக்கெட் சபை அறிவித்திருந்தது.

இந்திய கிரிக்கெட் சபை இருவரின் தேவை கருதி இத்தீர்மானங்களை எடுத்ததோ இல்லையோ. ஆனால், கடந்த காலங்களைக் கருத்தில் கொண்டும், இனிவரும் காலங்களைக் கருத்தில் கொண்டும் மேற்படி தீர்மானங்களை எடுத்திருத்தல் அவசியமாகும்.

இதை உணர்ந்து இந்திய கிரிக்கெட் சபை செயற்படவில்லை / தீர்மானங்களை நிறைவேற்றவில்லை என்றே மேற்படி விமர்சகர்களால் ஆரூடம் கூறப்படுகின்றது.

இந்த வகையில் இந்திய அணியின் பயிற்சியாளர் சப்பலை பொறுத்து இந்திய அணியின் எதிர்காலத்தை



கருத்தில் கொண்டும், தன் மீதிருந்த நம்பிக்கையின் அடிப்படையிலுமே கங்குலி தொடர்பான தனது முடிவை வெளிப்படையாகக் கங்கு லியிடம் தெரிவித் திருந்தார். அதாவது, இந்திய அணியின் தலைவராக நீடிப்பதற்கு கங்குலி தற்போது உடல் ரீதியாகவும், ஆட்டத் திறன் ரீதியாகவும் பொருத்தமற்றவர் என சப்பல் தெரிவித்திருப்பதென்பது உண்மையில் இந்திய அணியின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டே எனில் மறுப்பதற்கில்லை. இதை பயிற்சியாளர் என்ற வகையில் தெரியப்படுத்தவேண்டிய தேவையும், அவசியமும் அவருக்குண்டு.

ஏனெனில், அணியின் வெற்றி தோல்விக்கு பயிற்சியாளரும் பிரதான பொறுப்பு விகிக்கின்றார் என்பது அனைவரும் அறிந்ததொன்று.

ஒரு அணி தோல்விகளைச் சந்திக்கும்போது முதலில் அந்த அணியில் உள்ள பலவீனங்களைக் கண்டறிந்துகொண்டு அதை நிவர்த்தி செய்த பின்னரே எதிரணிகளின் பலவீனங்களுக்கு ஏற்ப அணியை இட்டுச் செல்வதற்கு ஒரு பயிற்சியாளருக்கு ஏதுவாக இருக்கும்.

இந்திய அணியின் தற்போதைய பலவீனம் தலைமையில்தான் இருக்கின்றது என்பதை பயிற்சியாளர் சப்பல் தெளிவாக உணர்ந்து கொண்டுள்ளார். இதை நிவர்த்தி செய்யும் நோக்கோடு தெரியப்படுத்தியும் இருக்கின்றார்.

கங்குலியைப் பொறுத்து அவரின் தேவை இந்திய கிரிக்கெட் சபைக்கு தேவையோ இல்லையோ இந்திய கிரிக்கெட் அணியின் வெற்றிக்கு தற்போது தேவையில்லாத ஒன்றாகவே உள்ளது.

இதற்கு அவரின் மோசமான ஆட்டமும், அவரின் தலைமையின் திறமையின்மையும் தற்போது பலவீனமான நிலையை அடைந்துள்ளதே முக்கிய காரணமாகும்.

கடந்த காலங்களில் இந்திய அணியை சிறப்பாக வழி நடத்தி வெற்றிகளை ஈட்டியிருக்கலாம். இந்திய முன்னாள் அணித் தலைவர்களின் சாதனைகளை முறியடித்திருக்கலாம்.


ஆனால், கங்குலியின் தற்போதைய ஆட்டத்திறன் சிறப்பானதல்ல என்பதை கூறித்தான் புரிய வேண்டிய அவசியமில்லை. 20 போட்டிகளின் பின்னர் பலவீன மான சிம்பாப்வே அணிக்கெதிராக பெற்ற சதம் தான் தற்போது அவருடைய துடுப்பாட்டப் பலமாக உள்ளதுடன் அவரின் தலைமைக்கும் அந்த அணியு டன் கிடைத்த டெஸ்ட் தொடர் வெற்றிகளே பலமாக வுள்ளது.

எனவே, கங்கு லியின் ஆட்டத் திறன் தற்போது குறைந்துள்ள தென்பதை இந்திய கிரிக்கெட் சபைஏற்றுக்கொள்ளவில்லை என்பதை தெளிவு படுத்தும வகையிலேயே மேற்படி அவர்களின் தீர்மானங்கள் காட்டி நிற்கின்றன.

இந்திய கிரிக் கெட் சபை கங்குலி மீது கொண்டிருக்கும் நம்பிக்கையின் அடிப்படையிலேயே அவர்கள் மேற்படி தீர்மானங்களை எடுத்துள்ளது என ஆரூடம் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்திய கிரிக்கெட்சபையின் முடிவானது இந்தியக் கிரிக்கெட் வளர்ச்சிக்கும், எதிர்காலத்திற்கும் ஆரோக்கியம் மிக்கதொன்றாக அமையாது என்ற ஆரூடத்தை இல்லாதொழிக்க வேண்டிய தேவைக்கும், கங்குலி மீது இந்திய கிரிக்கெட்சபை கொண்டிருக்கும் நம்பிக்கை நிரூபிக்க வேண்டிய அவசியத்திற்கும் கங்குலி ஆளாகியுள்ளார்.

எனவே, இதை உணர்ந்து இந்திய கிரிக்கெட்சபை மீது எழுந்திருக்கும் ஆரூடத்தை தகர்த்தெறிந்து தன் மீதான திறமையை வெளிப்படுத்த வேண்டிய கட்டாய நிலைக்கு கங்குலி ஆளாகியுள்ளார் என்பது உண்மை இந்த நெருக்கடிகளை தகர்த்தெறிந்து வெளியில் வருவாரா கங்குலி என்பதை வரும் ஒக்ரோபரில் இந்தியாவில் நடைபெறவுள்ள சிறிலங்காவுடனான ஒரு நாள் தொடர் விடையளிக்கும் ஒன்றாக இருக்கும்.

சுபானந்த்



# நீங்காத நினைவில்...

தோற்றம் 29 - 12 - 1979

மறைவு 28 - 09 - 2003

நந்தவனத்தில் பூத்துக்குலுங்கிய
வாடா மல்லிகை-எங்கள்
சண்முகபாலன்...
கடமையில் கண்ணாயிருந்தவன்
எங்கள் கண்களில் நீர் சொரிய வைத்து
பிரிந்துவிட்டான்.
நண்பனே!
நீ நடந்ததும்
நாங்கள் நடப்பதும்
ஒரே நோக்கம்
ஒரே இலக்கு
அதுவரை பொறுத்திரு நண்பனே!

தியாகர் சண்முகபாலன்

அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்.

பொறுப்பாளர்,
பணியாளர்கள்,
ஈழநாதம்.



அண்மைக்காலமாக எமது பகுதிகளில் சிறுதானியப் பயிர்ச்செய்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

எனினும் சிறுதானியச் செய்கையானது எமது பாரம்பரியமான பயிர்ச்செய்கையில் ஒன்று என்பது மட்டுமல்ல எமக்குத் தேவையான அவசிய மான சத்துக்களைக் கொண்ட உணவு மாகும். அத்துடன் எமது பொருண்மிய நெருக்கடியான காலங்களில் கூட எம்மைக் காப்பாற்றும் பிரதான உணவுப்பயிராகவும் சிறுதானியச் செய்கை விளங்கியது.

# பொருண்மிய வாசல்

## எங்கள் பொருண்மிய வளம்

**சிதம்பரதிரு**

எமது பிரதேசங்களில் குரக்கன், தினை, சாமை, வரகு, கௌப்பி, பயறு என்பன பயிரிடப்பட்டன. இவை போசனைப் பெறுமானத்தைப் பொறுத்த மட்டில் பெறுமதிமிக்கவை. 10%-14% நீரையும் 70%-42% மாப்பொருளையும் 8%-13% வரை புரதத்தையும் 2%-5% வரை கொழுப்பையும் கொண்டவை.

100 கிராம் சிறுதானியத்தில் 300 கலோரி தொடக்கம் 500 கலோரி வரையிலான சக்திப் பெறுமானமும் கொண்டதாகும். அத்துடன் பற்றிக் அமிலம் (Pbytic-acid) சிறுதானியங்களில் சிறிய அளவில் இருப்பதால் இரும்பு, சுண்ணக் கனிப்பொருட்கள் மனித உடம்பில் விரைவாகச் சேரும். இது தவிர பலவிதமான நோய்களுக்கு அதாவது இரத்தச்சோகை, நீரிழிவு போன்ற நோய் களுக்கு சிறப்பான சத்தான உணவாகவும் உள்ளன.

எமது வரண்ட காலநிலைக்கு பொருத்தமான இப்பயிர்ச் செய்கை தொடர்ச்சியான பீடைநோய் பெருகுவதை தடை செய் வதற்குச் சிறந்த பயிர்ச்செய்கையாகும். சுழற்சி முறைப் பயிர்ச் செய்கை என்பதை விவசாய நிபுணர்கள் தெரிவித்துள்ளார்கள்.

பெரும் போகத்தில் வானம் பார்த்த பயிராகவும் சிறு போகத் தில் குறைந்த நீர்ப்பாசனையுடன் இதனைப் பயிரிட முடியும்.

இது தவிர இவற்றினை நீண்ட காலத்திற்கு இலகுவாக சேமித்து வைத்து பயன்படுத்தவும் முடியும். இவ்வாறான பல்வேறு நன்மைகளைக் கொண்ட சிறுதானியச் செய்கையில் விவசாயிகள் அதிக அக்கறை கொள்ளவேண்டும்.

# வீடுகளில் உணவுக் காளான்களை வளர்ப்பது எப்படி

ஆங்கிலத்தில் Mushroom என்று வழங்கப்படும் காளான்களுக்கு பூஞ்சை நாய்க்குடை என வேறு பல பெயர்களும் உண்டு, காளான்களில் பல பிரிவுகள் உள்ளன. அவற்றை மனிதர்கள் உணவாக உட்கொள்ளும் தன்மை உள்ளவை. உட்கொள்ளத்தகாத நச்சுத்தன்மை பொருந்தியவை என தாவரவியல் வல்லுனர்கள் வகைப்படுத்தியுள்ளார்கள்.

சமைத்து உண்ணும் காளான்கள் (உணவுக் காளான்கள்) "அகாரிகேசியே" என்னும் குடும்பத்தைச் சார்ந்த "பசிடியோமைசிஸ்" என்னும் பிரிவைச் சேர்ந்தவையாகும். இவை பெரும்பாலும் உக்கல் வண்டல் மண் நிறைந்த நிலங் களிலும் வீடுகளை ஒட்டிய குப்பை கொட்டும் இடங்களிலும் எருக்கள் சேகரித்து வைக்கப்பட்டுள்ள இடத்திற்கு அருகிலும் விளைகின்றன.

காளானில் புரதச்சத்தும், ஏனைய உயிர்ச்சத்துக் களான பல்வேறு விற்றமின்களும் மிகுதியாக இருக்கின்றன. சைவ உணவுப் பொருளான உணவுக்காளானை தகுந்த முறையில் சமைத்து உட்கொண்டால் அது ஆட்டிறைச்சி, கோழி இறைச்சியைப் போல சுவையாக இருக்கும். காளானில் கொழுப்புச்சத்து மிகக் குறைவு. அத்துடன் காளானிலுள்ள பென்சிலின் எனப்படும் மருந்துச் சத்து நோய்த்தடுப்பு சக்தியை யும் மனிதர்களுக்கு அளிக்கிறது.

உணவுக் காளான்களைக் கொண்டு கட்லெட், குழம்பு, புரியாணி, போண்டாபொரியல், ஊறுகாய், சூப் போன்றவை தயாரிக்கலாம்.

மனிதர்கள் சமைத்து உண்ணக்கூடிய காளான்கள் பலவகைப்படும். இவற்றில் செயற்கை முறையில் வித்தூன்றி வளர்ப்பதற்கு ஏற்றவையாகக் கருதப்படும் காளான் வகைகள் வருமாறு,

1. அகாரிகஸ் பைபோறஸ்.
   (Button mushroom)
2. வல்வோரியல்லா வால்வோசியா.
   (straw mushroom)
3. ப்ஸிரோட்டஸ்
   (oyster mushroom)

ஈரப்பாங்கான நிலம் ஏதும் இல்லாமல் வீடுகளிலேயே மிகக் குறைந்தளவு தண்ணீரைச் செல விட்டு உணவுக்காளான்களை வேண்டிய அளவுக்கு உற்பத்தி செய்யலாம.

### காளான் வித்து தயாரிக்கும் முறை:-

பழைய காளான் வித்திலிருந்து புதிய வித்துக் களை உருவாக்குவதற்காக பயன்படுத்திய குளுக்கோஸ் போத்தல், டிஸ்ரில் வோட்டர் போத்தல், ஹோர்லிக்ஸ் போத்தல் போன்றவற்றினை பாவிக்கலாம். முதலில் போத்தலை நன்றாகக்கழுவி சுத்தம் செய்தபின் அதில் சிறிது வெள்ளைச் சோளத்தை இட வேண்டும். அதனுடன் சிறிதளவு சுண்ணாம்புத் தூளையும் (caco) கலந்து போத்தல் வாயினில் பஞ்சினை வைத்து அடைத்து விட வேண்டும். பின் அதனை அப்படியே எடுத்து ஒரு குக்கரில் ஒன்றாக வேகவைக்கவேண்டும். அப்போது போத்தலின் உட்பகுதியிலும் சோளத்தின் மேலும் சில நுண்ணுயிர்கள் தென்படும். அவற்றையெல்லாம் அகற்றிவிட வேண்டும்.

பழைய காளான் வித்தில் இருந்து வித்தை எடுத்து நன்றாக பழுக்க சூடு படுத்தி வைக்கவேண்டும். ஆறியபின்னர் ஒரு சிறிய காளான் வித்தை எடுத்து புதிய போத்தலில் இடவேண்டும். இதனை காற்றோட்டம் அதிகம் இல்லாத அறைக்குள் வைத்துச் செய்தல் வேண்டும். ஒரு வார காலத்தில் சோளத்தின் மேல் மெல்லிய ஒரு பொருள் படரும். அதை மைசீலியம் என்பார்கள். அதுதான் காளான். பின்னர் இதனைப் பயன்படுத்தி காளான் படுக்கைகளை உருவாக்கலாம்.

### காளான் வளர்ப்புக்கு தேவையான பொருட்கள்:-

காய்ந்த வைக்கோல்/ கரும்புச்சக்கை ஓரளவு தேவை, 60cm உயரமும், 30cm வரை அகலமும் கொண்ட ஒரு பொலித்தீன் பை வேண்டும். அந்த பொலித்தீன் பையில் 1cmஅளவு துளைவிட வேண்டும். காளான் வித்துக்களும் தேவை.

வைக்கோலை 3 அல்லது 4cm நீளத்திற்கு சிறு சிறு துண்டுகளாக வெட்டி வைத்துக்கொள்ள வேண்டும். கரும்புச்சக்கைகள் ஏற்கனவே சிறிய துண்டுகளாகவே இருக்கும். சிறு சிறு துண்டுகளாக்கப்பட்ட வைக்கோல்./ கரும்புச்சக்கைகளை சுமார் 3 மணி முதல் 4 மணி நேரம் வரை தண்ணீரில் ஊறவிடவேண்டும். நன்கு ஊறிய வுடன் அவற்றை வெளியே எடுத்து பெரிய பானையில் இடவேண்டும். அப்பானையில் தண்ணீர் ஊற்றி அடுப்பில்வைத்து வேக வைக்க வேண்டும். பானையில் உள்ள நீர் கொதிநிலையில் எட்டும் போது வைக்கோல்/ கரும்புச்சக்கையிலுள்ள நுண்ணுயிர்கள் அழிந்து விடும்.

வேக வைக்கப்படும் வைக்கோல் அல்லது கரும்புச் சக்கைகள் அதிக ஈரமில்லாமலோ அதிகம் காய்ந்து விடாமலோ பாதுகாக்கப்படவேண்டும். வித்துக்கள் உள்ள போத்தலினுள் கம்பியை விட்டு அதிலுள்ள காளான்வித்தை எடுத்து வைக்கோல் மீது படுக்கை போல பரப்பவேண்டும். படுக்கைகள் தயாரிக்கும் போது அவை அடுக்குமுறையில் இருக்கும் படி அமைக்க வேண்டும்.

### அடுக்குமுறை வித்திடுதல் என்றால் என்ன?

பொலித்தீன் பையின் அடிப்பாகத்தை வெட்டி விட்டு நூலினால் கட்டிவிடவேண்டும். அதாவது பையின் அடிப்பகுதியும் மேல் பகுதியும் திறந்தபடி இருக்க வேண் டும். பொலித்தீன் பையின் அடிப்பாகத்தை நூலி னால் கட்டிவிட்டு அதற்கு மேல் 5cm உயர அளவில் வைக் கோலையும் கரும்புச் சக்கையையும் பரப்பவேண்டும். காளான் புட்டியில் உள்ள வித்துக்களை சமமாக நான்கு அல்லது ஆறு பாகமாகப் பிரித்து ஒரு பாகத்தை அதன் மேல் தூவ வேண்டும். இரண்டாவது அடுக்காக 10cm உயரத்திற்கு வைக்கோல் துண்டுகளை பரப்பி அதன்மேலும் காளான் வித்துக்களை தூவ வேண்டும். இதே முறையில் 5 அடுக்குகளாக வைக்கோல் துண்டையும் காளான் விதையையும் போட்டு படுக்கைகளை தயாரிக்க வேண்டும். 5 ஆவது அடுக்கின் மேல் காளான் வித்தை தூவியவுடன் அதன்மேல் 5cm உயரத்திற்கு மீண்டும் வைக்கோல் துண்டு களைப் பரப்பி பொலித்தீன் பையின் மேல் நுனியை நூலால் கட்டிவிட வேண்டும்.

### தண்ணீர் தெளிப்பு:-

காளான் மொட்டுக்கள் தோன்றியவுடன் பொலித் தீன் பையின் மேல் முடிச்சையும் கீழ் முடிச்சையும் அவிழ்த்துவிட்டு மெதுவாக பையை எடுத்துவிடவேண்டும். அப்போது காளான் அடுக்குப் பைகள் உருளைவடிவில் இருக்கும். காளான் வளர்க்கும்போது காளான் படுக்கை யைச் சுற்றிலும் அதிக ஈரப்பதன் இருக்குமாறு கவனித்துக்



கொள்ளவேண்டும். இதனால் காளான் படுக்கையைச் சுற்றிலும் ஈரம் காயக்காய தண்ணீர் தெளித்துக்கொண்டே இருக்க வேண்டும்.

காளான் படுக்கை அமைப்பதற்கு முன்னர் காளானுக்கு இடும் உரத்தை (composl) இளஞ்சிட்டு முறையில் பதப்படுத்தி வைத்துக்கொள்ளவேண்டும். காளான் படுக்கைகளை தயாரிப்பதற்கு பயன்படுத்தும் பொருட் களை முன்கூட்டியே 76°c வெப்பத்தில் சுமார் 1/2 மணி நேரம் வைத்திருக்கவேண்டும.

### சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு:-

காளான்களை வளர்க்க விரும்புகிறவர்கள் வளர்க்கும் இடத்தில் சில சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு ஏற்பாடுகளை யும் செய்தல் வேண்டும். அதிகமான காளான் விளைச்சலைப் பெற அந்த அறையின் வெப்பநிலை 15°-18°c ஆக இருப்பது நல்லது.

காளான்களோ போட்டியிட்டுக்கொண்டு வளரும் நோய் பரபபும் பூஞ்சணம் மற்றும் நோய்க் கிருமிகள் தாக்காமல் கவனித்துக்கொள்ள வேண்டும். காளானை அறுவடை செய்யும்போது சுத்தமான கத்தியைப் பயன்படுத்த வேண்டும்.

### அறுவடை:-

சிப்பிக் காளானின் முழு வளர்ச்சிக்கு 45 நாள் முதல் 50 நாட்கள் தேவைப்படும். என்றாலும் வைக்கோல் படுக்கையில் காளான் வித்துக்களை தூவிய 27 ஆவது நாள் முதல் 30 ஆவது நாள்வரை அறுவடை தொடங் கலாம். அறுத்தெடுத்த காளான் படுக்கையின் மேல் பகுதியை தேய்த்துவிடவேண்டும். இதனால் முதல் அறுவடைக்குப்பின் 7 நாள் முதல் 10 நாள் வரை கழிந்ததும் மீண்டும் ஒரு முறை அறுவடை செய்யலாம்.

### சேமித்துவைத்தல்:-

சாதாரணமாக சராசரி வெப்ப நிலையில் அறுவடை செய்த காளான்களை அடுத்த 24மணி நேரம் வரை சேகரித்து வைக் கலாம். அதற்கு மேல் நீண்ட நாட்களுக்கு சேமித்து வைக்க விரும்பினால் முறைப்படி அதனை பதப்படுத்தி புட்டிகளிலும் டப்பாக்களிலும் அடைத்து வைக்கவேண்டும்.

ஆகவே இந்தக் காலத்தில் உணவுக்காளான்களை வரட்சியிலும் பயன்கொடுக்கும் காமதேனுவாகப் பயன் படுத்திக் கொள்ளலாம்.

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உண்மையான கம்யூனிஸ்ற்றுக்கள் இல்லையென அவர்கள் சந்தேகத்திற்கிடமின்றி நம்பினார்கள். அது உண்மையும் தான். அடுத்ததாக இலங்கைஅரசியல் அதிகாரம் சில குடும்பங்களின் கைகளிலும் அவர்களுடன் தொடர்புடைய சில ஒட்டுண்ணிகள் கையிலும் செறிந்திருந்தது. கிராமப்புற மக்களின் வாழ்வுப் பிரச்சினையை ஆளும் கட்சிகள் நேர்மையுடன் அணுகவில்லை. அத்தோடு வேலையற்ற வர்கள் பிரச்சினை, படித்த வாலிபர் பிரச்சினை, தொழிலாளர் உரிமைப் பிரச்சினை என்பனவும் நிலவின. இவற்றை ஜே.வி.பி சாதகமாகப் பயன்படுத்தியது.

சிங்கள நாட்டின் இளைஞர் தொகையில் 76வீதமானோர் கிராமப் புறங்களில் வாழ்ந்தனர். அவர்கள் குடும்ப வருமானம் மிகச் சிறியது. அரச வேலைவாய்ப்புக்கள் கட்சி அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிபார்சில் வழங்கப்பட்டன. பல்கலைக்கழகம் சென்ற கிராமப்புற இளைஞர்கள் சிறந்த புள்ளி பெற்றிருந்தாலும் வேலையற்று இருந்தனர்.

ஆனால் குறைந்த புள்ளிகள் பெற்ற அரசியல்வாதிகளின் ஆதரவு பெற்ற இளைஞர் கள் உடனடி வேலைவாய்ப்புப் பெற்றனர். வேலையற்ற மூளைசாலி இளைஞர்கள் ஜே.வி.பி கட்சிக்குள் பிரவேசித்தனர். ஜே.வி.பியை ஒரு இளைஞர் இயக்கமாகவும் பார்க்கலாம். அவர்கள் கூட்டம் போடுவதிலும், பிரசாரம் செய்வதிலும் தீவிரமாக உழைத்தனர். அரசை எதுவிதமாகவும் கைப்பற்றவேண்டும் என்ற வெறி அவர்களிடம் இருந்தது. அத்தோடு அரச நிர்வாகம், ஆயுதப்படைகள், தொழிற்சங்கங்கள், புத்தமத அமைப்புகள் என்பனவற்றிற்குள் அவர்கள் திட்டமிட்டு ஊடுருவினர். இது அவர் களுடைய பலமாக அமைந்தது.

பெண்களைத் தமது கட்சியில் இணைப் பதில் ஜே.வி.பி அக்கறை காட்டியது. கட்சியின் பெண்கள் அணி அரசியல் மற்றும் இராணுவப் பணிகளில் முன்னிலை வகித்தது. அவர்கள் கட்சியின் பிரசாரக் கூட்டங்களில் முக்கிய பங்கு வகித்தனர். சிறிது காலத்தின் பின்பு அவர்கள் மருத்துவப் பணியிலும் ஈடுபட்டனர். பேரணி களை வழி நடத்துவதிலும் சிறந்து விளங் கினர். இரகசியத் தகவல்களை கட்சிக் கிளை களுக்கு பாதுகாப்பாக எடுத்துச் செல்லும் பொறுப்பையும் பெண்கள் ஏற்றனர்.

அன்றும் இன்றும் ஜே.வி.பியின் பெண் உறுப்பினர் பங்களிப்பு ஆண்களுக்கு நிகரானது. ஜே.வி.பியின் உயர் தலைமைப் பீடத்தில் மூன்று தமிழர்கள் இடம் வகித்திருக்கிறார்கள். இரு வருடைய பெயர் தெரியவந்துள்ளது-தங்கராஜா, றஞ்சிதம் குணரத்தினம், மூன்றாமவர் பற்றித் தெரியவில்லை.

தனது முதலாவது ஆயுதப் புரட்சியை 1971ஆம் ஆண்டு ஜே.வி.பி நடத்தியது. அப் போது சிறிமாவோ பண்டாரநாயக்க பதவியி லிருந்தார். அது படுவேகமாக நசுக்கப்பட்டது. இந்தியாவின் உதவியை சிறிலங்கா பெற்றுக் கொண்டது. இந்த முயற்சி தோல்வி கண்டதற்கு தயாரின்மையும், தாக்குதல் திறன் இல்லாமையும் முக்கிய காரணங்களாகச் சுட்டிக்காட்டப்படு கின்றன. அரசின் நிதி இழப்பு பலகோடி பெறுமதியானது. பதினாறாயிரத்திற்கும் மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் உயிரிழந்தனர். ஆயுதப்படைகளும் பொலிசாரும் உயிரிழப் பைச் சந்தித்தனர். அடுத்தவாரம் மேலதிக விபரங்களைப் பார்ப்போம்.

# செத்தவர் தமையெண்ணிச் சத்தியம் செய்தெழட்டும் நம் சாத்திரங்கள்!!

சு.ஞாலவன்

மனிதனின் சக்தித்தேவைகளை வெறுமனே உணவுகள் மட்டும் பூர்த்திசெய்து விடக்கூடிய காலம் மலையேறி விட்டது. ஏனென்றால் சமிபாட்டுத்தொகுதியை மட்டுமே சரிக்கட்டிக்கொண்டு வாழ்ந்துவிடக் கூடிய கட்டங்களை மனித இனம் தாண்டி பல்லாயிரம் ஆண்டுகள் கழிந்து விட்டன. தன்னுடைய உணவுத் தேவைகளுக்காகக் கூட இன் றைய மனிதன் பெருமளவில் பல சக்தி-மூலங்களில் தங்கியிருக்கிறான். இவற்றினை உரிய வகை யில் கைக்கொள்பவனே வளர்ச்சிப் பாதையில் செல்லக்கூடியவனாக இருப்பான். இயற்கை வழிபாட்டின் வழிவந்த பெருமையுடைய தமிழர்களாகிய நாம் ஏனோ இன்று சடங்குக்காக இயற்கையைப் பூஜித்தும், நடைமுறையில் செயற்கையைக் கண்மூடித்தனமாகச் சார்ந்தும் வாழும் போக்குடையவர்களாக ஆகிவிட்டோம் என்ற கசப்பான உண்மையை அனைவரும் ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும்.

ஈழத்தமிழர்களாகிய நமக்குப் பலமுறை மறுக்கப்பட்டபோதும், மனிதனுடைய அன்றாடவாழ்வுக்கு அத்தியாவசியமாகி விட்ட மின்சாரம் இன்று உலகளவில் அடிப்படைத் தேவைகளில் ஒன்றென்ற ரீதியில் வைத்தே நோக்கப்படுகிறது. மனிதனுடைய அன்றாட வாழ்வை மட்டுமன்றி அவனுடைய பொருளாதார நிலையை, வாழ்வாதாரத்தை, வாழ்க்கைத் தரத்தை என சகலவற்றையும் நிர்ணயிப்பதாகவும் மின்சாரம் உள்ளது. எங்குமே தவிர்த்துக்கொள்ள முடியாத ஒன்றாக வியாபித்து நிற்கும் இது மருத்துவத்துறைக்கு உயிர் நாடியானதும் கூட ! உதாரணமாக 1970களின் இறுதியில் வவுனியா வைத்தியசாலையில் ஒழுங்காக மின்சாரம் கிடைக்காத குளிர்சாதனப் பெட்டி ஒன்றில் பேணப்பட்ட(?) தடுப்பூசி-மருந்து காலாகாலத்துக்கும் மனிதரிலே எப்படியான விளைவுகளை ஏற்படுத்திவிட வல்லது என்பது உணரத்தக்கதே ! இவ்வாறு முக்கியத்துவம் வாய்ந்த மின்சாரத்தின் நிலை இலங்கைத்தீவில் எப்படியுள்ளது ? தமிழர் தாயகத்தில் இத்தேவை எவ்வாறு பூர்த்தி செய்யப்படுகிறது ? நாளையோ, மறுநாளோ அப்பொன்னாள் உருவாகும் போது தனியொரு நாடென்ற ரீதியில் நவீன வசதிவாய்ப்புகளைக் கொண்டு எமது மின்சாரத்தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளலாம். இருந்தும் அதுவரையிலான நமது இருப்பு முற்றுமுழுக்க எரிபொருட்களையே நம்பியிருப்பது ஆரோக்கியமானதா ? முழுஉலகும் இன்று மாற்றுவழிகளைத் தேடி நிற்கும்போது நாம் மட்டும் எரிபொருள் (டீசல், மண்ணெண்ணெய்) ஒன்றிலேயே நம்மை ஒடுக்கிக்கொள்வது நியாயமானதா ? அதிலும் இயற்கையை வழிபடும் பாரம்பரியம் கொண்ட தமிழர்களாகிய நாம் சூரியவெப்ப-வலு, காற்று-வலு, நீர்-வலு என்பவை குறித்து கண்காணாமல் இருப்பது ஏற்கத்தக்கதா? எங்கள் தேவைகளை எங்கள் வளங்களின் அடிப்படையிலேயே பூர்த்திசெய்து கொள்ளும் வகையில் மாற்றுவழிகளைத் தேடும் மனப்போக்குடன் கூடிய மாணவர் சமுதாயம் எம்மிடையே கட்டியெழுப்பப்படுதல் இந்தச் சமூகத்தின் கடமையல்லவா ? இக்கேள்விகளை உங்கள் ஒவ்வொருவரிடமும் விட்டுவிட்டு இச்சிறிய கட்டுரை தொடர்கிறது. இதைப் படிப்பவர்கள் ஒற்றை விளக்கையாவது ஒளிபெறச் செய்வதற்கு உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தத் தலைப்படுவார்களாக இருந்தால் இதை எழுதிய இதயம் சந்தோசிக்கும்.


அண்மைக்காலமாக எல்லாம் நுரைச்சோலை அனல்-மின்னிலையம் குறித்த சர்ச்சைகள் பற்றி பத்திரிகைகள் வாயிலாக அறிகிறோம். 1989 இல் தனது 98% ஆன மின்சாரத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நீர்- மற்றும் காற்று-வலுவையே நம்பியிருந்த இலங்கை இன்று ஆக 43% ஆன அளவை மட்டுமே இவ்வாறான இயற்கை வழியிலே பூர்த்தி செய்துகொள்கின்றது. அதிகரிக்கும் தேவைகளுக்கேற்ப மாற்றுவழிகளைக் கண்டுபிடிக்காமல் வெறுமனே தேவைகளை மட்டும் அதிகரித்துக்கொண்டிருக்கும் போக்குக் காரணமாக அரைவாசிக்கும் மேலான தனது மின்சாரத்தேவையைப் பூர்த்திசெய்வதற்காக கையில் அகப்படும் அவசரத்தீர்வுகளில் நிம்மதியாகச் சாய்ந்துகொள்ளும் இலங்கை மின்சார சபையின் நகர்வுகளாகவே இவ்வாறான அனல்-மின்னிலையங்கள் அமைகின்றன. கரியை எரித்துப் பெறப்படும் வெப்பத்தினால் நீரைக்கொதிக்க வைத்து அதனால் சுழலிகளை (Turbines) இயக்குவதன் மூலம் இம்மின்சாரம் பெறப்படுகின்றது. இதுதவிர மட்டுப்படுத்தப்பட்ட அளவில் டீசல் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களும் உண்டு. இவ்வாறான வழிமுறைகள் நீண்டகால அடிப்படையில் கைக்கொள்ளப்படுவது சுயபொருளாதாரத்தைப் பாதிப்பது மட்டுமன்றி, பல்வேறு சுவாச- மற்றும் தோல்-நோய்களையும் உண்டுபண்ணக்கூடியதும் கூட ! இந்தக் காரணங்களால் தான் சூரிய சக்தி, காற்று-வலு, நீர்-வலு போன்ற சூழலுக்கு ஊறு விளைவிக்காத சக்தி மூலங்கள் குறித்து பல நாடுகள் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றன. இதில் தீவிரமாக ஈடுபட்டு வரும் டென்மார்க், யேர்மனி, ஸ்கொட்லாந்து மற்றும் அவுஸ்திரேலியா இத்துறையில் நீண்ட அனுபவத்தை ஈட்டியிருப்பதால் இன்னும் இரண்டு தசாப்தங்களில் உலகளாவிய சந்தைப்படுத்தலில் ஈடுபட்டு லாபம் சம்பாதிக்கப்போகும் நாடுகளாகவும் இவை இருக்கப்போகின்றன. ஒப்பீட்டளவில் செயற்றிறன் மிக்க சூரிய கலங்களை உற்பத்தி செய்துகொள்வதற்கு ஆகும் செலவு அதிகமாயுள்ளதுடன், காற்றாடிகளின் வழமையான தயாரிப்புச்செலவும் சற்றே அதிகமாக இருப்பினும், மேற்குறித்த நாடுகளின் தொடர்ச்சியான ஆராய்ச்சிகளும், பட்டறிவும், துறைசார் நிபுணத்துவமும் சாதகமான நிலைமைகளைத் தோற்றுவிக்கும் எனத் திடமாக நம்பலாம். 2002 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்ட சூரியக்கலங்களின் எண்ணிக்கை 2004 இல் இரு மடங்காக அதிகரித்திருக்கின்றது என்பதே இதற்குக் கட்டியம் கூறி நிற்கின்றது.

இன்று நாம் குனிந்து கிடப்பதல்ல பிரச்சினை, நாளை எழுந்து நிற்க வேண்டுமெனத் தலைப்படுகின்றோமா என்ற அடிப்படையில், இந்தத்துறையில் தமிழர்களாகிய நாம் எங்கே இருக்கிறோம் என்பது முக்கியமல்ல ! ஆனால் நாம் எதற்குத் தயாராக இருக்கிறோம் ? 'உழவு' பற்றி ஒரு அதிகாரத்தை எழுதி முடித்த வள்ளுவனை நாம் உள்வாங்கி இருந்தால் (பாடசாலைகளில் மனப்பாடம் செய்வதை நான் குறிப்பிடவில்லை) உணவுத் தேவைக்காக ஏன் அடுத்த நாடுகளை நாம் நம்பியிருக்கவேண்டும் ! வள்ளுவர் பாரம்பரியத்துடன் எந்த விதத்தொடர்பும் இல்லாத அமெரிக்கா இன்று உலகளாவிய ரீதியிலே உணவு-ஏற்றுமதியில் முதலாவது இடம் வகிக்கின்றதே! எப்படி? வெறுமனே சடங்குகளாக நாம் கொண்டிருக்கும் சத்திய வாக்குகளை ஏன் சாதனைகளாகக் கொண்டெழக்கூடாது ! 2039 வருடங்களுக்கு முன்னே இன்றைக்கு அடுத்ததாக 'வான்சிறப்பு' பற்றிப் பாடிய பொய்யாமொழிப்புலவனை மெய்யாகவே நாம் கணக்கில் எடுத்துக் கொண்டோமா ? பூமியின் வளிமண்டலத்திற்கு வெளியே சூரியப் பார்வை கிடைக்கும் ஒரு சதுர கிலோமீற்றர் பரப்பளவில் கிடைக்கும் ஒளிச்சக்தி 1400 மெகாவாற்ஸ் மின்வலுவிற்கு இணையானது. வளிமண்டலத்தினூடாகப் பயணிக்கும் கதிர்களின் வலு ஓரளவு இழக்கப்பட்டாலும், தீர்ந்து போகாத அளவிற்கு எப்போதும் கிடைக்கவல்லதொரு வளமாக இருந்தும் ஏன் நாம் உடுப்புக்காயப்போடுவதற்கு அப்பாலே இதைப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. தாம் பெறும் ஒளிச்சக்தியின் 30 விழுக்காட்டினை மின்சக்தியாக மாற்றக்கூடிய 'போட்டோவோல்ற்றைக்' மின்கலங்கள் தற்போது விற்பனைக்கு வந்துவிட்டன. இனிவரும் காலங்களில் இவற்றின் விளைதிறன் இன்னும் அதிகரிக்கும் என்பதில் சந்தேகமில்லை. Solar Panel எனப்படும் சூரியக் கலங்களை ஆங்காங்கு பயன்படுத்திக்கொண்டாலும் வெளி நாட்டுத் தயாரிப்புகளின் நுகர்வோராக மட்டுமே நாம் இருந்து வருகிறோம். சூரியக்கலங்களை உள்ளூரிலே தயாரித்துக்கொள்வது என்பது தற்போதைய நிலைமையிலே சாத்தியமில்லை என்பதும் உண்மையே ! ஆனாலும், சூரிய சக்தியைப் பயன்படுத்துவதென்பது தனியே சூரியக்கலங்களினால் ஆன சக்தி மாற்றத்தில் மட்டும் தங்கியிருக்கவில்லை. அது சூரிய வெப்பத்தை அல்லது ஒளியை எவ்வாறு இயக்கவலுவாக சக்திமாற்றம் செய்கிறோம் என்பதைப் பொறுத்தது.

இதை வாசித்துக்கொண்டிருக்கும் போது யதார்த்தத்துக்கு ஒத்துவராததென சலித்துக்கொள்பவர்களிடம் சிறியதொரு செய்தி; 1850களில் பிரித்தானியாவிலே 7 மீற்றரிலிருந்து 21 மீற்றர் வரையான விட்டத்தைக் கொண்ட சுழலிகளை நீர்வலு மூலம் இயக்கி 65-190 kW வரையான மின்சாரம் பெறப்பட்டது. ஒருமுறை அமைக்கப்பட்ட இவ்வாறான சுழலிகள் 100 வருடத்திற்கும் குறையாமல் பயனளித்தன. மேலும், மத்திய ஆசியாவிலே தானியங்களை அரைத்துக்கொள்வதற்கான ஆலைகளை இயக்குவதற்காக காற்றுவலுவைப் பயன்படுத்திக்கொள்ளும் வழிமுறை கி.பி. 7ஆம் நூற்றாண்டிலேயே இருந்தது. இது பின்னர் சீனாவுக்கும் பரவியதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இந்நுட்பம் 12ஆம் நூற்றாண்டிலே ஐரோப்பாவிற்கும் பரவி அங்கு பாரிய மாற்றங்களை ஏற்படுத்தி விட்டிருந்தது. ஒவ்வொரு நாடும் தத்தம் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இந்நுட்பத்தை எவ்வாறு மேம்படுத்தலாம் என்று பரிசீலித்ததின் விளைவாக கிட்டத்தட்ட சகல உற்பத்தித் துறைகளும் காற்றாலைகளைப் பயன்படுத்தத் தொடங்கியிருந்தன. 18-19ஆம் நூற்றாண்டுகளிலே நெதர்லாந்து (ஹொலண்ட்) நாட்டில் மட்டும் 9000 இற்கும் குறையாத எண்ணிக்கையில் காற்றாடிகள் அமைக்கப்பட்டிருந்தன. இவை இன்றும் நெதர்லாந்தின் கிராமங்களில் பயனளிக்கின்றன. இதற்காக மூங்கில் போன்ற எளிய மூலப்பொருட்களே ஆரம்பத்தில் பயன்படுத்தப்பட்டன என்பதும் இங்கு குறிபிடத்தக்கது. ஆனால், எங்கள் இராஜேந்திர சோழன் கடல் கடந்து, களம் பல வென்று கம்போடியாவில் கட்டிய பிரமாண்டமான கோயில்கள் கவனிப்பாரற்று எச்சசொச்சங்களாக ஏனென்று கேட்பாரின்றிக் கிடக்கின்றன பயனின்றி !

## சூரிய வலு


பேசப்படும் சகல சக்திகளும் சூரியனின் பிதாமகன்களே ! எண்ணெய்வள நாடுகளில் எரிபொருட்களாகப் பெறப்படும் 'ஐதரோ-காபன் பிணைப்புகள்' கூட சூரியனின் தயவிலேயே அந்நிலையை அடைந்துள்ளன. வளிமண்டலத்திற்கு வெளியே சூரியப்பார்வை கிடைக்கும் ஒரு சதுர கிலோமீற்றர் பரப்பளவில் கிடைக்கும் ஒளிச்சக்தி 1400 மெகா வாற்ஸ் மின்வலுவிற்கு இணையா னது.




இருந்தாலும் சூரியனிலிருந்து நேரடியாக, உடனே பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும் வழிமுறைகள் பற்றியே இங்கு நோக்கப்படுகின்றது. அவற்றிலும் சிலவற்றின் பயன்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உள்ளன. படம்-1 இலே நீங்கள் காண்பது பகல்வேளைகளிலே நமது சுட்டெரிக்கும் சூரியவெப்பத்திலிருந்து சுகமாக அலுவல் பார்க்கும் வகையைச் சேர்ந்ததொரு கைங்கரியமே! கிட்டத்தட்ட 80 செ.மீ விட்டத்தைக் கொண்ட குழிவாடியின் துணைகொண்டு சூரியவெப்பம் கேற்றிலின் அடிப்பாகத்தில் குவிக்கப்படுகிறது. இவ்வாறு பெறப்படும் வெப்பம் சுமார் 60° C என்றளவிலேயே இருக்கும். நீரைச் சுடவைக்கலாமே தவிர கொதிநிலையை இதன் மூலம் அடையமுடியாது. அப்படியென்றால் இதைப்பற்றி ஏன் வீணாக அலட்டிக்கொள்ள வேண்டுமென்று நினைத்துவிட வேண்டாம். பாலில் இருந்து, அதாவது எருமை மாட்டில் இருந்து பிளாஸ்ரிக்கைத் தயாரித்துக்கொள்ள முடியுமென்று, ஆய்வுசெய்து அறிவித்தவர்களின் உழைப்பின் மேல் இருந்துகொண்டு தான் நாம் இப்போது பேசிக்கொண்டிருக்கிறோம். நல்ல விடயங்களுக்கு 'முடியாது' என்று பதிலளிப்பது மனிதர்களுக்குரிய நாகரீகம் அல்ல ! ஈடுபாடு, முயற்சி, காலம் என்ற மூன்றும் இருப்பின் எதுவும் சாத்தியமே ! அதைவிடுத்து உவநம்பிக்கைகளால் காலம் ஓட்டிக் கொண்டிருப்பவர்கள் பாதங்களில் ஒட்டிக்கொள்ளும் சகதிபோல் மானிட வளர்ச்சிப்போக்கின் நகர்வுக்குத் தடையாய் இருப்பார்கள். 'எல்லாவற்றுக்கும் ஒரு வழி உண்டு. அதை நாம் தான் தேடவேண்டும்' என்ற பொன்மொழியுடன் விடயத்திற்கு

## காற்றுவலு

'காற்றுள்ள போதே தூற்றிக் கொள் !' என்ற பழமொழி வாய் வழக்கில் . இருந்தபோதிலும் நாம் 'தூற்றுவது' என்பதை மாறி அர்த்தம் கொண்டுவிட்டோமோ என்னவோ என்ற கேள்வி எழுகிறது மனதிடையே. சுமார் 13km/h என்ற வேகத்தில் வீசும் காற்றிலே 4 மீற்றர் விட்டத்தைக் கொண்ட காற்றாடியைப் பயன்படுத்தி 220 Watts வரையிலான மின்வலுவைப் பெற்றுக்கொள்ள முடியும். இதன் போது காற்றாடியானது நிமிடத்திற்கு கிட்டதட்ட 25 தடவைகள் என்றளவில் சுழலும். மேலும், எளிமையான வடிவமைப்பில் தயாரிக்கப்படும் இத்தகைய காற்றாடிகளைப் பொறுத்தவரையில் காற்றின் வேகம் 2 மடங்காக அதிகரிக்கும்போது, பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் மின்வலுவின் அளவு 8 மடங்காகும் என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது. இன்றுங்கூட தாய்லாந்திலே உப்பு உற்பத்தித்துறையில்



மூங்கில்களால் மட்டுமே ஆன காற்றாடிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்பது இதன் செயற்றிறனுக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

மேலேயுள்ள வரைபடங்களில் காற்றாடிகளுக்கான சில மாதிரி வடிவங்களை நீங்கள் காணலாம்.

(மிகுதி அடுத்த வாரம்)




## உளவியல் நவீனம்...

### அத்தியாயம்- 16

### பகுதி -66

டிப்ஸ் விளையாட்டறைக்குள் வந்து தன்னைச் சுற்றியிருந்தவற்றைப் பார்த்துக் கொண்டபோது மகிழ்ச்சியோடு புன்னகைத்துக் கொண்டான். மணல் பெட்டியின் நடுவே இன்னொரு பிள்ளை நட்டுவிட்டிருந்த வேலி யொன்று இருப்பதைக்கண்டான்.

"அங்க ஒரு வேலி இருக்குது. உங்களுக்குத் தெரியுந்தானே... வேலியெண்டா எனக்குப்பிடிக்காது... நான் அத எடுத்து விடப்போறன்" என்று விட்டு வேகமாக மணல் பெட்டியிலிருந்து அந்த வேலியை அகற்றி விட்டான். பிறகு துப்பாக்கியைத் தூக்கிக் கொண்டுபோய் மேசை லாச்சிக்குள் வைத்தான்.



றாக்கையிலே உடைந்துபோய்விட்ட சிறிய பொம்மைவீடு ஒன்று இருப்பதைக்கண்ட அவன் அதை எடுத்து ஆராய்ந்தான்.

"நான் இதத் திருத்தப்போறன். ஒட்டுற பட்டி எங்க இருக்குது?" என்று கேட்டான். ஒட்டுப் பட்டியை வெளியே எடுத்த நான், "உங்களுக்கு எவ்வளவு தேவையெண்டு நினைக்கிறீங்கள்?" என்று கேட்டேன்.

"பத்து அங்குலம்" என்று உடனடியாகவே சொன்னான். உண்மையில் அந்தளவுதான் அவனுக்குத் தேவையாக இருந்தது. நான் கிட்டத்தட்டப் பத்து அங்குல நீளமான துண் டைப் பிய்த்து அவனிடம் கொடுத்தேன்.

"இவ்வளவும் போதும்" என்றவன் "நன்றி" என்றான். 'பரவாயில்லை' என்று நான் சொன் னேன். "நான் இப்ப ஜன்னலத் திறக்கப்போறன். நல்ல காத்து உள்ளுக்கு வரட்டும்" ஜன்னலை அவன் திறந்துவிட்டான். "காத்து... உள்ளுக்கு வா.வந்து எங்களோட இரு" என்றவன் என்னைப் பார்த்துப் பெரிதாக இளித்தான். "நான் காத்தோட கதைக்கிறது அப்பாக்கு விருப்பமில்ல. ஆனா இங்க நான் காத்தோட கதைக்க விரும்பினா... நான் கதைப்பன்"

"இதுக்குள்ள நீங்கள் அப்பிடிச் செய்ய விரும்பினால் செய்யலாம். ஒரு பிரச்சினையு மில்லை" என்றேன்.

"ஆக்கள் ஆக்களோடதான் கதைக்க வேணுமெண்டு அப்பா சொல்லுறவர்" என்றான் டிப்ஸ். அவன் கண்களில் மினுக்கமொன்று தெரிந்தது. "நான் தன்னோட கதைக்க வேணு மெண்டு அப்பா சொல்லுறவர். ஆனா நான் கதைக்கிறயில்ல. அவர் சொல்லுறத நான் கேட்கிறனான். ஆனா அவரோட கதைக்கிற யில்ல. இல்லையில்ல... அப்பிடியில்ல... அநேகமான நேரங்களில நான் பதில் சொல் லுறதில்ல. அது ஆள நல்லாக் குழப்பிப்போடும்"

கதைப்பது என்பதே ஒரு பிரச்சினையாக அவர்களிடையே உருவாகிவிட்டிருந்தது. எப்பவும் குற்றம் சொல்லுகிற தகப்பனுக்குத் திருப்பியடிக்கிறமாதிரி கதைக்காமல் இருக்கிறதில டிப்ஸ் நிபுணனாக இருந்தான்.

'காலை வணக்கம்' எண்டு அவர் எனக்குச் சொல்லுறவர். என்ற டிப்ஸ்,தொடர்ந்தான். "நான் அவரப் பாக்கிறயில்ல. நான் அவருக்குப் பதில் சொல்லுறதுமில்ல. 'உனக்கு என்ன வந்திட்டுது?' எண்டு போட்டு 'உன்னால கதைக்க ஏலும் எண்டு எனக்குத் தெரியும்.' என்பார்" 'நான் ஒண்டுமே சொல்லமாட்டன். அவரப் பாக்கவும் மாட்டன். அவருக்குப் பதில் சொல்லவும் மாட்டன்' என்ற டிப்ஸ் மனம்விட் டுச் சிரித்துவிட்டு, "ஆள் நல்லாக் குழம்பிப்போ வார்" என்றான்.

மேசையின் அருகில் திரும்பவும் சென்ற அவன் லாச்சியைத் திறந்து துப்பாக்கியை எடுத்துக்கொண்டான். பிறகு அறைக்குக் குறுக்காக நடந்து ஜன்னலுக்கருகில் சென்று வெளியே பார்த்தான். பெரிய ட்றக் ஒன்று கடந்துசெல்வதைப் பார்த்துக்கொண் டேயிருந் தான்.

அவன் திரும்பி என்னைப்பார்த் தான்.

"இத வெளியில எறியட்டா?" என்று கேட்டான்.

"நீங்க எறிஞ்சா நாங்க போய் எடுத்து வருவோம்" என்றேன்.

"ஜன்னலுக்குக்கீழ அது கிடக்கும்" என்று அவன் சொன்னான்.

"எனக்குத் தெரியுது. ஆனா இப்ப போய் அத எடுத்துவர ஏலாது" என்றேன்.

"பிறகு போறெண்டா அது அங்க இருக் காது. யாராவது அதக் கண்டு எடுத்துக்கொண்டு போயிடுவீனம்"

"ஓம். அப்பிடி நடக்கலாம்"

"அப்பிடியெண்டா நான் எறியேல்ல"

பிறகு பொம்மை வீட்டைச்சுற்றி வந்த அவன் பொம்மைக் குடும்பத்தைப் பார்வையிட் டான். அப்பாப் பொம்மையைத் தூக்கி நிறுத்தியவன் துப்பாக்கியை அதற்கு நேராக குறிபார்த்தான். "ஒரு சொல்லும் கதைக்கக் கூடாது. கதைச்சா சுடுவன்" என்று பொம் மைக்குச்சொன்னான். "வாயை இனித்திறக்க வேணாம்" என்றவன் துப்பாக்கிக்கு விசை யேற்றிக்கொண்டான். "நான் ஆயத்தமாயிட்டன். நீங்க கவனமா இருக்காட்டி உங்கள நான் சுடுவன்"

வீட்டினுடைய கீழ்ப்பகுதியை டிப்ஸ் திறந்தான். "நான் இஞ்ச நிலத்தடி அறையில இந்த துவக்க ஒளிச்சு வைக்கிறன். அப்ப ஒருத்தருக்கும் தீங்கு வராது" என்றவன் வீட்டின் கீழ்ப்பகுதிக்குள் துப்பாக்கியை வைத்து அந்தப்பகுதியைப் பூட்டிவிட்டான்.

பிறகு திரும்பிவந்த அவன் என் எதிரில் நின்றுகொண்டான். அவனது முகத்தில் இலேசான ஒரு புன்னகை படர்ந்திருந்தது. நீண்ட நேரம் எதுவுமே




பேசாமல் நின்றுவிட்டு, "பள்ளிக்கூடத்தில என்ர வகுப்பில வேற பிள்ளையளும் இருக்கினம்" என்றான். "ஜாக் இருக்கிறான். ஜோண்... டேவிட்... கார்ள்... பொபி இருக்கிறான்... ஜெப்றி... ஜேன்... கறோள், எண்டு என்ர வகுப்பில கன பிள்ளையள் இருக்கினம்"

"பள்ளிக்கூடத்தில உள்களோட கன பிள்ளையள் இருக்கினம் உங்களுக்கு அவயள்ள கொஞ்சப்பேரின்ர பேர்களும் தெரியும்... என்ன?" என்று நான் கேட்டேன்.

"அவங்க எல்லாரட பேரும் எனக்குத் தெரியும். ஆம்பிளப்பிள்ளையளும் இருக்கினம். பொம்பிளப்பிள்ளையளும் இருக்கினம். அவயள் எல்லாரும் நல்ல ஆர்வமூட்டுற ஆக்கள்" என்றான் டிப்ஸ்.

பள்ளிக்கூடத்தில் தன்னோட இருக்கிற ஆண் பெண் பிள்ளைகளைப் பற்றி குறிப்பாக குறிப்பிட்ட முதல் தடவையாக இது இருந்தது. அவர்களில் கொண்டிருக்கும் ஆர்வத்தைப்பற்றிய முதல் வெளிப்பாடும் இதுதான்.

நாங்கள் போகும் வழியில் ஏதோ ஒரு கட்டத்தில், சிறியதும், ஒருவரோடொருவர் கலந்துபேசி ஊடாடுகிறவர்களைக் கொண்டது மான குழுவில் ஒருவனாக இருக்கும் வாய்ப்பை டிப்ஸுக்குத் தருவதற்கென்றே குழுச்சிகிச்சை அமர்வொன்றை நடத்தவேண்டும் என நான் எண்ணியிருந்தேன். பாடசாலையிலிருந்து எந்தத் தகவலும் எனக்கு வந்திருக்கவில்லை. அதனால் அங்கே ஏதாவது முன்னேற்றத்தை அடைந்திருக்கிறானா. என்பதை அறிய எனக்கு எந்த வழியும் இருக்கவில்லை. டிப்ஸோடு இன்னொடு பிள்ளையையும் விளையாட்ட றைக்கு அழைத்து வரவேண்டும் என்ற கருத்தைப்பற்றி அவன் என்ன நினைக்கிறான் என்று அவனையே கேட்பது என்று நான் முடிவுசெய்துகொண்டேன்.

"டிப்ஸ்... நீங்கள் இனி வாற வியாழக் கிழமைகளில இன்னொரு ஆம்பிளப்பிள்ளைய அல்லது பொம்பிளப்பிள்ளையக் கூட்டிக் கொண்டு வாறது உங்களுக்கு விருப்பமா," என்று மெதுவாகக் கேட்டேன்.

டிப்ஸ் கிட்டத்தட்ட திடுக்கிட்டே போனான். கோபம் தெறிக்கும் கண்களுடன் திரும்பி என்னைப் பார்த்தான்.

"இல்ல... இல்ல..." கத்தினான் டிப்ஸ். "வேற ஒருத்தரும் இஞ்ச வேண்டாம்"

"உங்களோட விளையாட இன்னொரு பிள்ளை இஞ்ச வாறது உங்களுக்கு விருப்பமில் லையா?" என நான் கேட்டேன்.

டிப்ஸ் சோர்ந்துபோய் விட்டது போல் தோன் றியது. "வேற ஒரு தரும் இஞ்ச வரமாட்டினம்" துக்கம் தோய்ந்த குரலில் அவன் சொன்னான்.

"வேறுயாரும் உங்களோட வரமாட்டினம் எண்டு நீங்கள் நினைக்கிறீங்களா? அதாலதான் நீங்க ஒருத்தரும் வேண்டாம் எண்டனீங்களா?"

"இல்ல. அப்பிடியில்ல" முணுமுணுப்பாய் வந்தது அவன் குரல். "என்னில ஒருத்தரும் விருப்பமில்ல. ஒருத்தரும் வரமாட்டினம்"

"ஆனா வேற ஒரு பிள்ள இங்க வந்து உங்களோட விளையாட விரும்பினா உங்க ளுக்கு ஏதும் பிரச்சினையாயிருக்குமா?" வேறுபிள்ளைகளை இங்கு கொண்டுவருவது பற்றிய என் எண்ணத்தை மெதுவாக அவனுக் குள் செலுத்திவிட முயன்றேன்.

"இல்ல..." ஆவேசத்தோடு உரத்து ஒலித்தது அவன் குரல் "இது என்ர அறை. இது எனக்கு மட்டுந்தான். வேற யாரும் இங்க வாறது எனக்கு விருப்பமில்ல. எனக்கும் உங்களுக்கும் மட்டும் இந்த அறை இருக்க வேணுமெண்டு நான் விரும்புறன்" அழும் கட்டத்தை அவன் எட்டியிருந்ததுபோல் தோன்றி யது. திரும்பி எனக்கு முதுகைக் காட்டியபடி நின்றுகொண்டான்.

"எனக்கு விளங்குது டிப்ஸ்" ஆறுதல் படுத்துவது போல் நான் சொன்னேன். "இது உங்களுக்கும் எனக்கும் மட்டும்தான் எண்டு நீங்க விரும்பினா அது அப்பிடியே இருந்து விட்டுப்போகட்டும்"

"ஓம் அப்பிடியே இருக்கட்டும். இது எனக்கு மட்டும் எண்டு இருக்கவேணும் எண்டு தான் நான் விரும்புறன். வேற ஒருதரும் இங்க வரவேண்டாம்"

"நீங்கள் எப்பிடி விரும்புறீங்களோ அப்பிடியே அது இருக்கட்டும்" என்றேன் நான்.

ஜன்னலுக்கு அருகில் நடந்துசென்ற டிப்ஸ், வெளியே பார்த்தான். எங்கள் இருவரையும் மௌனம் சூழ்ந்துகொண்டது.

நீண்டதொரு மௌனத்துக்குப்பிறகு டிப்ஸ் வாயைத் திறந்தான். "பள்ளிக்கூடத்தில என்ர வகுப்பில பிள்ளையள் இருக்கினம். நான்..." என்றுவிட்டு சிறிது தயங்கியவன் என்னைப் பார்த்தான். "எனக்கு அவயில விருப்பம்..." என்றவன் குரல் சிறிது கொன்னை தட்டுவது போலிருந்தது.

(தொடரும்)

---

## உலகை ஆட்டிப் படைக்கும் புதிய புதிர் விளையாட்டுக்கள்

## சுடோக்கு (SUDOKU)

**புதிர் -01**

ஒற்றை இலக்கம் என்று அதற்கு பொருள். றூபிக் சதுர முகிக்குப் பின் (Rubik Cule) உலகிலேயே ஆகப் பிரபலமான எண்- விளையாட்டாக உருவாகி யிருப்பது சுடோக்கு ஆகும்.

இப்புதிரை தீர்க்கத் தொடங்கினால் அதைக் கீழே வைக்கவே மாட்டீர்கள்.

எண்கணித அறிவு எதுவும் இதற்குத் தேவை யில்லை. உங்களுக்குத் தேவை யான தெல்லாம் தர்க்கபூர்வமான மனமும் ஒரு பென்சிலும் ஒரு அழிறப்பரும் மட்டும் தான். முயற்சியைத் தொடங்குங்கள்.

அதனுடைய சித்திர வதையை அனுபவியுங்கள். அது தரும் பேரின்பத்தை உணருங் கள்.

இந்தப்புதிரில் ஒரு பெரிய சதுரத்துள் 3x3 அளவிலான 9 சிறிய சதுரங்கள் உள்ளன. இந்த ஒவ்வொரு சதுரங்களுக்குள்ளும் 1-9 வரை யான எண்களை நிரப்ப வேண் டும். ஒருமுறை பயன்படுத்திய எண்ணை இந்தச் சதுரங்களில் மீண்டும் பயன்படுத்தக்கூடாது.

அதேபோலவே பெரிய சதுரத்து நிரைகளிலும் நிரல்களிலும் ஒரு முறை பயன்படுத்திய எண்ணை மீண்டும் பயன்படுத்தக்கூடாது.

ஒருகுறிப்பிட்ட புதிருக்கு ஒரு சரியான தீர்வு மட்டும் உள்ளது.

(இதற்கான விடை அடுத்தவாரம்)

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | | | 1 | | 2 | | 4 |
| 9 | | | | | 2 | | 8 | 3 |
| | 4 | 2 | 7 | 8 | 3 | | 6 | 1 |
| | | | 3 | | | | 1 | |
| 7 | | 1 | 5 | 2 | 8 | 4 | | 6 |
| | 8 | | | | 4 | | | |
| 8 | 6 | | 2 | 3 | 1 | 5 | 4 | |
| 4 | 9 | | 6 | | | 1 | | 8 |
| | | 5 | | | 9 | | | 7 |

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

பாவலன் பதில்கள்,
வெள்ளிநாதம்,
யாழ்சாலை, கிளிநொச்சி.



# பாவலன் பதில்கள்

*பாவலா!*

*தமிழீழ விடுதலைப்புலிகளை தடை செய்யும் நாடுகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?*

*கெ.மோகனதாசன்,*
*புளியங்குளம்.*

உண்மையின் பக்கமும் நியாயத்தின் பக்கமும் நிலைப்பாடு எடுக்க அஞ்சும் நாடுகள்.

*பாவலா!*

*ஓயாத அலைகள்-1 நடவடிக்கை மூலம் முல்லைத் தீவுப்படைத்தளத்தை தமிழீழ விடுதலைப்புலிகள் தாக்கிய போது சிங்கள இராணுவத்தினர் என்ன நினைத்துக்கொண்டு ஓடியிருப்பார்கள்.*

*கெ.மோகனதாசன்,*
*புளியங்குளம்.*

இந்த அலை எங்களை முற்றாக தமிழர் தாயக மண்ணிலிருந்து துரத்தும் வரை ஓயவே ஓயாது என நினைத்துக் கொண்டு ஓடியிருப்பார்கள்.

*பாவலா!*

*ஆனையிறவுப் படைத்தளத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் கைப்பற்றுவார்கள் என சிறிலங்காப்படைகள் கனவில் கூட நினைத்துப் பார்த்திருக்க மாட்டார்கள். நீர் கனவில் நினைத்துப் பார்த்தீரா?*

*தாசன்,*
*புளியங்குளம்.*

நனவாகப் போகும் விடயம் குறித்து கனவு காண்பதில்தப் பெண்ண. இலட்சிய வாதிகள் நனவாகப் போகும் விடயங்களை குறித்து மட்டுமே கனவு காண்பார்கள்.

*பாவலா!*

*சிறிலங்கா சனாதிபதித் தேர்தலுக்கு 100 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. எனில் அவர்கள் ஆயத்தப்படுத்தும் சண்டைக்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடாக இருக்கும்?*

*கு.அகிலன்,*
*புளியங்குளம்.*

இது யுத்தத்துக்கு அவர்களுகது ஆயுதமும் பயிற்சியும் ஆலோசனையும் வழங்கிக் கொண்டே சமாதானத்தை வலியுறுத்தும் நாடுகளிடம் கேட்கப்பட வேண்டிய கேள்வி.

*பாவலா!*

*அவசரகாலத் தடைச் சட்டம் மீண்டும் ஒரு மாத காலம் நீடிக்கப்பட்டுள்ளது. இது பற்றி என்ன கூறுகிறீர்?*

*மதி,*
*பூநகரி மகாவித்தியாலயம்.*

அரசு யுத்தத்தை ஆரம்பிப்பதற்கான காலம் குறுகி வருகிறது என்றே நினைக்கிறேன்.

*பாவலா!*

*உம்மை நான் நேரில் வந்து ஒரு சில விடயங்கள் பேச வேண்டி உள்ளதால் நேரம் காலம் ஒதுக்கித் தருவீர்களா?*

*அகிலன்,*
*பூநகரி.*

வெறுமனே பேசுவதால் எதனை சாதிக்கப் போகிறோம். ஏதாவது ஆக்கபூர்வமாக செயற்படுவதானால் சொல்லுங்கள் யோசிக்கலாம்.

*பாவலா!*

*கொழும்பில் பொலிஸ் பதிவால் தமிழர்கள் வெளியேறும் அவலம் இதுபற்றி என்ன கூறுகிறீர்?*

*அகிலன்,*
*பூநகரி.*

அவசரகாலச்சட்டம் என்பது தமிழர்களுக்கு அவலத்தை ஏற்படுத்த உருவாக்கப் பட்ட சட்டம் தானே?

*பாவலா!*

*இலங்கையில் சமஷ்டி ஆட்சி நடைமுறைக்கு வருமா? அப்படி வந்தால் இந்தியா போன்று அரைகுறை சமஷ்டி ஆகுமா?*

*சிவபாலன்,*
*புளியங்குளம்.*

நிவாரணப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பையே நிராகரிப்பவர்கள் சமஷ்டி ஆட்சி முறைக்காக சம்மதிப்பார்கள், அது சரி யார் சொன்னது உங்களுக்கு இந்தியாவில் சமஷ்டி ஆட்சி முறை நிலவுகிறதென்று.

*பாவலா!*

*நம்பிக்கை தான் வாழ்க்கை சில சந்தர்ப்பங்களில் அது பொய்யாகிவிடுகிறதே ஏன்?*

*லதா,*
*கிளிநொச்சி.*

வாழ்க்கையில் தன்னம்பிக்கை பொய்ப்பதில்லை. அவநம்பிக்கை பொய்க்கிறது.

*பாவலா!*

*உலகெங்கும் இயற்கையின் சீற்றம் கோரத்தாண்டவம் ஆடுகின்றதே இதற்கு காரணம் மனிதன் இயற்கையை மதிக்காமல் விடடது போல் தெரிகிறது. இதற்கு தாங்கள் என்ன கூறுகிறீர்கள்?*

*அஜந்தன்,*
*நிதித்துறை.*

இயற்கையை அழிப்பவன் இயற்கையால் அழிவான் அவ்வளவுதான்.



# தெருப்பேச்சு

*" என்னப்பா பிரச்சினை. ஒரே காணியா இருந்த நேரம் உதுக்காலதானே போய் வந்த நாங்கள் இப்ப புதிசா இதுக்க வீடுகள் வந்திட்டுது. அதுக்காக எங்கட பாதைய நீங்கள் மூடுறது சரியில்ல"*

*" ஓ... அதில என்ன நீங்கள் பாவிக்கலாம். ஒரு கொஞ்ச இடம் கனபேருக்குப் பயன்படுறதெண்டா என்னண்டு மறுக்கிறது. காணியளப் பகிர்ந்த பிறகு வீடுகளுக்குப் போற வாற பாதையும் வருந்தானே"*

*" ஓ... அப்ப நாங்கள் ஞாயிற்றுக்கிழமை கிராம வாசியள் சேர்ந்து சிரமதானஞ் செய்து பாதை திருத்தப்போறம்"*

*"அதில ஒண்டுமில்லை நீங்கள் செய்யலாம்"*

*"அப்ப பக்கத்தில- அ... அவரும் வாறார்..."*

*" என்ன... என்ன... பிரச்சினை..."*

*" பாதை திருத்தப் போறம் சொல்லிப் போட்டுப் போக"*

*" பொறு... பொறு... எந்தப்பாதை... இதால பாதை துறக்கேலாது. நாங்கள் இதில எங்கட தேவைக்குத்தான் பாதை வச்சிருக்கிறம். இதால சனம் போறது எங்களுக்குப் பாதுகாப்பில்லை"*

*" தோடா... ஆமிக்காறன்ர பாதுகாப்பு வலயம் போல..."*

*" கனக்கக் கதைக்க வேண்டாம். இந்தப் பாதையால சனம் பிழங்க விடமாட்டன்"*

*" நாங்கள் இப்ப மழைகாலத்துக்கு மட்டும் போக வர இதை விடுங்கோ..."*

*" நான் காசு குடுத்து வாங்கின நிலம், காசு குடுத்து போட்ட ரோட்டு, நான் சொல்லுறன் உதால போக ஏலாது"*

*" ம்... காசு...காசு...காசு... நாய் தின்னாத காசு... ஐயோண்டு கத்தினா நாங்கள்தான் வர வேணும்"*

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –139



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –139

.......................................................
.......................................................
.......................................................
.......................................................

பெயர் : .......................................
முகவரி : .......................................
.......................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –138



**இ.அருள்,**
**சக்திபுரம் இல:-10,**
**உருத்திரபுரம்.**

### பரிசுக்குரிய வரிகள்

*ரணிலுக்கும், மகிந்தவுக்கும் –போட்டி*
*வெல்லும்வரை வழங்குவாரே பேட்டி*
*மாட்டுக்குமே இங்கு போட்டி*
*வெல்லும்வரை வாங்குவாரே சாட்டி.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*சவாரிப் போட்டிக்கான வெற்றியை- வெண்*
*காளையர் நாமிருவரும் பெற்றுமக்குத் தந்திடுவோம்*
*ஈழ வெற்றியை தமிழீழத் தலைவருடன் இணைந்து- வரிப்*
*புலியாகி, போராடி வென்றுநீர் வெற்றி வாகை சூடிடுவீர்!*

அ.மதனகுமாரன்,
கிளிநொச்சி.

*ஐந்தறிவு நாங்கள் சுமைதாங்கிகள்*
*ஆறறிவு அவர்கள் சுகம் வாங்கிகள்*
*சோபை இழந்த அவர் துயர் களையும்*
*பாரம்பரிய உழைப்பாளிகள் நாம்.*

சு.ராஜசெல்வி,
சென் திரேசா பெண்கள் கல்லூரி.

*போட்டியில் வெல்ல சவாரி வண்டியில்*
*பூட்டி எமை வதைப்பது முறையோ?*
*நாணயம்(தர்மம்) இல்லாத மனிதரே எமது*
*நாணயத்தை அவிழ்த்து விடுங்கள்.*

க.இரத்தினசிங்கம்,
கிளிநொச்சி.

*சிவலை மாட்டுக்கு சலங்கை கட்டி*
*சவாரிப் போட்டியில் பரிசினைப் பெற*
*எத்தனிக்கும் வீரர்களே! உங்களுக்குத்தான் பரிசு*
*மன நிறைவோடு வெற்றிப்பீடத்தை அடையுங்கள்.*

தெ.மோகனதாசன்,
புளியங்குளம்.









EXPOAIR
your friend in the skies...

எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...

தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை

ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்

கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com



(சி-11725)




பணியாளர் வேண்டுகை

பெண்களுக்கு ஆடை தைப்பதில் அனுபவமுள்ள பெண் பயிற்றுவிப்பாளருக்கும் தையல் வேலையில் அனுபவமுள்ள பெண்களுக்கும் பணிநிலை வெற்றிடங்கள் உண்டு. உரியவர்கள் 15-10-2005 இற்கு முன்னதாக நேரில் எமது நிறுவனத்திற்கு வருகை தரவும்

குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்
யாழ்சாலை, கிளிநொச்சி தொ.பே:021-228 5971

(சி-12798)

சிவசுப்பிரமணியம்
புனிதவதி
ஆடியபாதம் வீதி, கொக்குவில்.
மறைவு:23-09-2005

# கண்ணீர் அஞ்சலிகள்

எமது உயிர் நண்பர் மயில்வாகனம் சிவகுமாரன் அவர்களின் அன்பு மாமியார் காடையர்களால் மிலேச்சத்தனமான முறையில் படுகொலை செய்யப்பட்டதையிட்டு அவருக்கும் அவர் சார்ந்த குடும்பத்தாருக்கும் உறவுகளுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை வெளிப்படுத்துவதோடு அவர் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திப்போமாக!

நிறுவனமும் ஊழியர்களும்
ஜீவா (F) பூட்ஸ்ரவ் சப்ளையர்
இல:43/04 பலாலி சாலை,
திருநெல்வேலி.

(சி-12797)


இப் பத்திரிகை ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.